வாரப்பதிப்பு விலை சதம் 20

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்

SUTANTIRAN

194 A, BANDARANAIKE MAWATTE, COLOMBO-12.

194, ஏ. பண்டாரநாயக்க மாவத்த கொழும்பு-12.

திறம் சலவைக்கு

மில்க் வைற் சோப்



மில்க் வைற் சோப் தொழிற்சாலை

யாழ்ப்பாணம்

புத்தகம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 1991 ஆனி திங்கள் 13-ம் நாள் (26—6—60) ஞாயிற்றுக்கிழமை முஹர்ரம் 1 | இதழ் 4

# விசித்திர அறிக்கை விட்ட மரிக்கார்

## சரித்திர ஞான சூனியம் என்கிறார் டாக்டர் பாலேந்திரா

## மாஜி மந்திரியின் மூதாதையர் இந்தியரே உடலில் ஓடுவது திராவிட இரத்தம்

## ராஜேந்திர சோழனைக் கொடியவனாகக் கூறியது புளுகு—ஆதாரம் உண்டா?

## விழலுக்கு இடமளிக்கும் ஆங்கில பத்திரிகைகள் வாய்மைக்கு இருட்டடிப்பு செய்கின்றனவே!

(சுதந்திரன் நிருபர்)

"மாஜி தபால் ஒலிபரப்பு மந்திரி ஜனாப் வி. ஏ. எஸ். மரிக்காருடைய மூதாதையர்கள் முழுக்க முழுக்கத் தென் இந்தியர்களாவர். சில நூற்றாண்டுகளுக்கு முன்பு வியாபாரம் செய்வதற்காக அவர்கள் இலங்கை வந்து சேர்ந்தவர்கள். மரிக்காரின் கொழுத்த சரீரத்திலும் தடித்த நரம்புகளிலும் ஓடுவது சிங்கள இரத்தமல்ல; திராவிட இரத்தமாகும். அவருக்கு சிங்களம் பேசத் தெரிந்து விட்டதனாலோ அல்லது அவர் பிரிவேனாவில் கல்வி கற்றார் என்பதனாலோ சிங்கள இனத்தின் சார்பில் அபிப்பிராயம் வெளியிடும் அதிகாரத்தை அவர் பெற்றுவிட முடியாது" இவ்வாறு டாக்டர் டபிள்யு. பாலேந்திரா சுதந்திரன் நிருபரிடம் தெரிவித்தார்.

தென்னகத்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆதரவோடு இலங்கைத் தமிழரசுக் கட்சி இலங்கையைக் கைப்பற்றிச் சிங்கள இனத்தையே அடிமைப் படுத்தப் போகிறது என்று மரிக்கார் இரண்டு வாரங்களுக்கு முன்பு ஆங்கில சிங்களப் பத்திரிகைகளில் ஒரு நீண்ட அறிக்கையை வெளிவிட்டிருந்தார்.

பிரஸ்தாப அறிக்கையில் பல தமிழ்ப்பேரரசர்களையும் திராவிட சமுதாயத்தையும் இழிவு படுத்தும் முறையில் ஆதாரமற்ற சரித்திரச் சான்றுகளை மரிக்கார் வழுப் பிரயோகம் செய்திருந்தார்.

மரிக்காரின் தப்பும் தவறுமான சரித்திர ஞானத்துக்குச் சவுக்கடி கொடுக்கும் முகமாகவே டாக்டர் பாலேந்திரா சுதந்திரன் நிருபரிடம் மேற்கண்டவாறு கூறினார்.

### மாற்றார் கைப்பொம்மை

"ஒலிபரப்பு மந்திரியான நிலிருந்து மரிக்கார் திராவிட சரித்திரத்தைக் கொஞ்சம் அதிகப்படியாகவே ஆராய்ந்து விட்டார் போல் தெரிகிறது. அவர் சார்ந்து நின்ற அரசியல் கட்சி அவரைக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளிவிட்ட பின் மாற்றாருடைய கைப்பொம்மையாக அவர் அரங்கேறி ஆடுவதில் நமக்கு எதுவித ஆட்சேபனையும் இல்லை. ஆனால் அதற்காகச் சரித்திர உண்மைகளை அவர் ஏன் நிசித்துக் கூறித் திண்டாட்டத்துக்குள்ளாக வேண்டும்?

### மரிக்காரின் வக்காலத்து வேடிக்கையானது

"இலங்கை சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் கூட்டுரிமையாக உள்ள ஒரு நாடு. 2000 ஆண்டுகளாக இந்த இரு சமூகத்தினரும் இங்கு வாழ்ந்து வருகிறார்கள். சிங்கள மன்னர்கள் தமிழரசர்களிடம் பெண் கொண்டு விவாக சம்பந்தத் தொடர்பு பெற்றிருக்கிறார்கள். சிங்கள சரித்திரத்தின் இறுதிக் கட்டமான நூற்றாண்டுக் கால எல்லையுட் கூட பல தமிழ்ப் பெண்கள் கண்டிச் சிம்மாசனத்தில் பட்டத்தரசிகளாக அமர்ந்து ஆட்சி புரிந்திருக்கிறார்கள். இத்தகைய இனத் தொடர்போ, இரத்த உறவோ, அரச சம்பந்தமோ மரிக்காரின் மூதாதையர்களுடன் சிங்களவர்களுக்கு ஏற்பட்டதாகவும் தெரியவில்லை. இந்த நிலையில் சிங்களவர்களின் சார்பில் மரிக்கார் வக்காலத்து வாங்குவது வேடிக்கையாக இருக்கிறது.

(9-ம் பக்கம் பார்க்க)

## யு. என். பி. யின் குண்டர் படை கார் பவனி செல்லத் திட்டம்

## வழி நெடுகிலும் தமிழருக்கு எதிரான பிரசாரம் நடக்கும்

[சுதந்திரன் நிருபர்]

ஜூலை பொதுத் தேர்தலை ஒட்டி கைமுனு பெரமுனை என்ற பெயரில் குண்டர் படை ஒன்றைத் திரட்டி வருகிறது யு. என். பி. என்று 12-6-60 சுதந்திரனில் செய்தி வெளியிட்டோமல்லவா? அந்தக் குண்டர் படைக்கு யு. என். பி. உடனடியாக வேலை கொடுக்கிறது. இவ்வாரம் அந்தக் குண்டர்கள் கார் பவனி செல்லத் திட்டமிடப்பட்டிருக்கிறது. வழி நெடுகிலும் தமிழருக்கு ஏச்சும் பேச்சும் எதிரான பிரசாரமும் நடக்கும் என்று தெரியவருகிறது.

பண்டாரநாயகா—செல்வநாயகம் உடன்படிக்கை உருவாக்கப்பட்டபோது அதை எதிர்த்து நாட்டில் குழப்பம் விளைவிப்பதற்காக "கண்டி யாத்திரை"யைமேற்கொண்டது யு. என். பி. அதனால் ஏற்பட்ட தொல்லைகள் யாவரும் அறிந்ததே.

அதேபோலத்தான் இப்போது மோட்டார் கார் பவனியை நடத்தவிருக்கிறார்கள். இதில் 300 கார்கள் பங்குபற்றுமாம். நிறையக் குண்டர்கள் செல்வார்கள். "கைமுனு பெரமுனை" என்ற பெயரில் யு. என். பி.யால் திரட்டப்பட்ட குண்டர்கள் இதில் தொழில்படவிருக்கிறார்கள். பவனிக்கு "துட்ட கைமுனு மோட்டார் பவனி" என்று பெயர் வைத்திருக்கிறார்கள்.

இந்தப் பவனியின் முழு முதல் நோக்கம் தமிழருக்கு விரோதமாகப் பிரசாரம் செய்து அவர்களுக்கு எதிராகச் சிங்களப் பாமர மக்களை

(8-ம் பக்கம் பார்க்க)

## வேலை நிறுத்த சம்பளம் கோரிப் புதிய வேலை நிறுத்தங்கள்

## வர்த்தக வட்டாரங்களிலும் நடைபெறலாம் என நம்பிக்கை

## ஜே. ஆர். செய்த சூழ்ச்சியினால் உருவாகிவரும் பெரிய சிக்கல்கள்

(சுதந்திரன் நிருபர்)

கொழும்பு தெற்கில் வாழும் அரசாங்க ஊழியர்களைத் திருப்திப் படுத்தி வாக்கு வேட்டையாடுவதற்காக, பண்டாரநாயகா ஆட்சிக்காலத்தில் வேலைநிறுத்தம் செய்த அரசாங்க ஊழியர்களுக்கு வேலைநிறுத்த காலச் சம்பளம் வழங்குவது என்று இடைக்கால அரசாங்கத்தின் நிதி அமைச்சரான திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனா செய்த சூழ்ச்சிகரமான முடிவு அரசாங்கத்தின் வேறு பல துறைகளிலும், கோர்ப்பரேஷன்களிலும், வர்த்தக வட்டாரங்களிலும் பெரிய சிக்கல்களை உண்டாக்கப் போகிறதென எதிர்பார்க்கப்படுகிறது.

அரசாங்க ஊழியர்களுக்கு வேலைநிறுத்தகாலச் சம்பளம் கொடுக்கப்படுவதால் தங்களுக்கும் வேலைநிறுத்த காலச் சம்பளம் வழங்கப்பட வேண்டும் என்று கொழும்புத் துறைமுகச் சிப்பந்திகளும், இலங்கை போக்கு வரத்துச் சபைச் சிப்பந்திகளும் கோரிக்கை சமர்ப்பிக்கின்றனர்.

கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படாவிட்டால் தாங்கள் வேலைநிறுத்தம் செய்ய வேண்டி வரும் என்று அவர்கள் எச்சரிக்கின்றனராம்.

இதேபோலவே வர்த்தகத் துறையில் உள்ள சிப்பந்திகளும் தத்தம் முதலாளிகளிடமும், கம்பனி மனேஜ்மெண்டிடமும் வேலைநிறுத்தகாலச் சம்பளம் கேட்டுக் கோரிக்கை சமர்ப்பிக்கப் போகின்றனர். அரசாங்கம் காட்டும் முன்மாதிரியை

(8-ம் பக்கம் பார்க்க)

தொய்வு (ASTHMA) சங்காரி

ரிச்லெட்ஸ் பெக்டோரல்

(RICHELET'S PECTORAL)



* இடைவிடாத இருமல்
* இளைப்பு
* மூச்சுத் திணறல்
* கிர் புர் சத்தம்
* நெஞ்சு வலி
* தொண்டை வலி




இவைகளை ஒழித்துக் கட்டுவதில் இணையற்றது. ஈளை நோயினால் இன்னலுறுபவர்களுக்கு இது ஓர் வரப்பிரசாதம். சில டோஸ் சாப்பிட்டதுமே நிம்மதியளிக்கக் கூடிய இவ்வற்புத சஞ்சீவி.

எங்கும் கிடைக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்:

வெஸ்டன் ஏஜன்சீஸ்,

63, பேங்ஷால் வீதி, கொழும்பு.

(போன் : 2885)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவுத் துறையில் முஸ்லிம்கள் செய்த அற்புதம்

## ஐரோப்பிய விஞ்ஞான முன்னேற்றத்துக்கு முன்னோடிகளாய் இருந்தவர்கள் இவர்கள்

முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சி கி. பி. 8-ம் நூற்றுண்டின் இடைக்காலம் வரை நிலைத்திருந்தது. கல்வித்துறையும், தொழில் முறைகளும் தழைத்தோங்குவதற்கு இன்றியமையாத ஆதார உண்மைகளை அக்காலத்தில்தான் முஸ்லிம்கள் உலகுக்கு உணர்த்தினர்.

கல்வித்துறையில் இதுகாறும் கண்ட முன்னேற்றம் எந்த ஒரு தனி நாட்டையும் அல்லது சமூகத்தினரையும் மட்டுமே சார்ந்ததல்ல; எங்கு மக்கள் அமைதியுடனும், சுபிட்சத்துடனும் வாழ்கின்றனரோ; அங்குதான் கல்வி வளரமுடியும்; தொழில் தழைக்க முடியுமென்பதற்கு சரித்திரம் சான்று கூறும். முஸ்லிம்களின் ஆட்சி மேலோங்கிய காலத்தில் வழக்கமான சிறு பூசல்கள் ஏற்பட்டாலும், நாட்டின் ஒழுங்கும், அமைதியும் கெடாது நின்று, முஸ்லிம்களுக்குக் கல்வி வளர்ச்சிக்கான ஆதார சாதக சூழ்நிலை கிட்டியது.

### அழிந்தவையும் அகப்பட்டவையும்

அக்காலத்தில் கல்வி வளர்ச்சிக்காகச் செய்யப்பட்ட முஸ்லிம்களின் சாதனைகள் பற்றிய முழு விபரங்களும் நமக்கு இப்போது தெரிவதாயில்லை. அவற்றில் பெரும் பகுதி, கிழக்கே துருக்கிஸ்தானிய தாத்தார்களிடமும், மேற்கே ஸ்பெயின் நாட்டு கிறிஸ்தவர்களிடமும் சிக்கி அழிந்து போயின. எஞ்சிய சில வரலாற்று ஏடுகள், பல மொழிகளில் வேற்றுருக் கொண்டு ஐரோப்பிய நூலகங்களில் இடம் பெற்றன. அவற்றை ஓரளவு நாம் தெரிந்து கொள்ள உதவிய ஒரு சில மேனாட்டறிஞர்களைப் புகழாதிருக்க முடியாது.

### கல்வி வளர்ச்சிச் சகாப்தம்

முஸ்லிம்களின் ஆட்சி நன்கு நிலை பெற்றவுடன் அவர்கள் முதலில், பழைய கல்வி—கலைகளுக்குப் புத்துயிரூட்டுவதிலேயே முனையலாயினர். இவ்விதம் அவர்கள் 8-ம் நூற்றுண்டில் யூனானி, பார்ஸி, ஸமஸ்கிருத மொழிகளின் சிறந்த நூற்களை அரபி மொழியில் பெயர்த்தெழுதியதைத் தொடர்ந்து, புதிய நோக்குடன் அவர்கள் கல்வி வளர்ச்சியில் ஈடுபடலாயினர். எனவே முஸ்லிம்களின் வரலாற்றில் கி. பி. 9-ம் நூற்றுண்டு, கல்வி தழைத்தோங்கிய சகாப்தமாகக் கருதப்படுகிறது.

கி. பி. 9-ம் நூற்றுண்டில் அல்கிந்தீ, மூஸா இப்னு ஷாகிரின் புதல்வர் மூவர், அல்காரிஸ்மீ, அபுல் அப்பாஸ் அஹ்மத், அல்பர்கானீ போன்ற முஸ்லிம் அறிஞர்கள் தோன்றி, கல்வி—கலைகளுக்காகத் தங்கள் வாழ்வைத் தியாகம் செய்தனர். கணித சாஸ்திரம், வான சாஸ்திரம், தத்துவார்த்தம் போன்ற கல்வித் துறைகள் அவர்களின் தொண்டால் தழைத்தன. அல் பர்கானீ என்பவர் வெளியிட்டு வந்த வான சாஸ்திர சஞ்சிகைகள் கி. பி. 15-ம் நூற்றுண்டு வரை சிறந்தவையெனப் போற்றப்பட்டு வந்ததுடன், லத்தீன், ஹுப்ரு மொழிகளிலும் அவற்றின் மொழி பெயர்ப்புகள் தோன்றின. அபூமஃஷர் என்பவர் 'கடல் அலைகளின் உயர்வு—தாழ்வுகளுக்கேற்பவே சந்திரனின் ஆகர்ஷண சக்தி மாறுபடுகிறது' என்ற உண்மையை வெளியிட்டார்.

**புரொபசர் முஹம்மது அப்துர் ரஹ்மான் கான்**

### வானவியல் வளர்ச்சி

பின் இதே நூற்றுண்டின் இறுதியில் அல்பத்தானீ என்ற அறிஞர் தமது தொலை ஆராய்வு உபகரணங்களின் உதவியால் நட்சத்திரங்களின் ஓர் விவரணைத் தொகுப்பைத் தயாரித்தார். இதே காலத்தில் சரித்திர அறிஞர் அல்மஸ்ஊதீ என்பாரும், ஜியாமெட்ரி, அல்ஜிப்ரா ஆகிய கணித சாஸ்திர விற்பன்னர்களுமான இப்ராஹிம் இப்னு ஸயீத், அபூகாமில் ஷுஜா இப்னு அஸ்லம் ஆகியோரும் தோன்றி தத்தம் கல்வியை வெகுவாகத் தழைக்கச் செய்தனர்.

கி. பி. 10-ம் நூற்றுண்டில் தோன்றிய ஹக்கீம் அபூபக்கர் அர்ராஜீயின் ஆய்வுகள் உயிர் நூலிலும், வைத்திய சாஸ்திரத்திலும் புரட்சிகரமான உண்மைகளைத் தந்தன. அம்மை நோய் பற்றிய அவரது கருத்துக்கள் இன்னும் அறிஞர்களால் அங்கீகரிக்கப்படுகின்றன. அப்துர்ரஹ்மான் அஸ்ஸூபி, அலீ இப்னு யூனுஸ், இப்னுல் ஹைதம், அல் பீருனீ, இப்னு ஸீனு உமர் கையாம், இப்னு ருஷ்து போன்ற மூதறிஞர்கள் தோன்றி மிளிர்ந்த காலமும் இதுவே.

முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சிக்குக் காரணம், பழைய நூற்களின் போதனையறிவு மட்டுமின்றி, அவர்கள் மேற்கொண்ட நெடுந்தொலைப் பிரயாணங்களும் ஆகும். உதாரணமாக இப்னு ஹவ்கல், முஹம்மதிப்னுல் ஹஸன், ஜுபைதீ, இப்னு பத்தூத்தா ஆகியோரின் பிரயாண விளக்க நூற்களிலிருந்து பல்வேறு பூகோள உண்மைகளும், அக்கால மக்களின் வாழ்க்கை மொழி ஆகியவற்றின் வரலாறுகளும் தெரிய வருகின்றன.

### மருத்துவம்

கி பி. 13-ம் நூற்றுண்டில் ஜஹ்ராவீ, உடற்கூறு சாஸ்திர நிபுணராகக் கருதப்பட்டவர். இவர் எழுதிய அத்தசர்ப், என்ற நூலில் தான் முதன் முதலாக மனித உடலுறுப்புக்கள் பற்றிய பல முக்கிய விவரங்கள் வெளி வந்தன. இப் புத்தகத்தின் ரண சிகிச்சை சம்பந்தமான ஒரு பகுதி, 1497-ல் வெனிஸிலும், 1541-ல் பேஸல்—பிரான்ஸிலும், 1778-ல் ஆக்ஸ்போர்டிலும் பிரசுரமாயிற்று.

அபுல் ஹஸன் அலீ இப்னுந் நபீஸ் என்பவர், கண் நோய்கள் தோன்றுவதின் காரணங்களையும் கூறியதோடு, மனித உடலில் ரத்த ஓட்டத்திற்கு மூலகாரணம் இதயம்' என்ற அழியா உண்மையையும் முதன் முதலில் கூறினுர். அக்கால முஸ்லிம் மருத்துவர்கள் சிறப்பாகக் கண் நோய்களைக் குணப்படுத்துவதில் தேர்ந்தவராகக் கருதப்பட்டனர். ஹக்கீம், ஸலாஹுத்தீன் இப்னு யூசுப் என்பவர் எழுதிய (நூருல் உயூன்) என்ற நூல் தோன்றிய பல நூற்றுண்டுகளின் பின்னரும் கண் வைத்திய நிபுணர்கள் அதனின்று பயனடைந்து வந்தனர்.

### விஞ்ஞானம்

அக்காலத்திய ஆடம்பரமற்ற எளிய வாழ்க்கை நிலையே மக்களுக்கு எக்குறையுமின்றியதாய் அமைந்திருந்ததனுல், முஸ்லிம்கள் யந்திர உற்பத்தியில் கணிசமான அளவு கவனம் செலுத்தவில்லை. எனினும், பதீ உஸ்ஸமான் அல் ஜஸாயிரீ எழுதிய 'உருவ கணித ஆராய்ச்சி நூல்' நீரைக் கொண்டு [illegible] இயக்க முறைகளை வர்ணித்துள்ளது. [illegible] ஷா என்பவரும் அவரது தந்தை ருஸ்தும் என்பாரும் நீர்க் கடிகாரம் ஒன்றை அமைத்து அதனை திமிஷ்க் நகரின் நுழைவு வாயிலொன்றில் பொருத்தி இயங்குமாறு செய்தனர்.

துப்பாக்கிகளில் உபயோகமாகும் கந்தக வெடி மருந்து உற்பத்தியில் அராபியர்கள் போற்றத்தக்க முன்னேற்றமடைந்திருந்தனர். இதைத் தவிர மாலுமிகளுக்குத் தேவையான 'திசை காட்டி'யை அமைத்த பெருமையும் அவர்களையே சாரும். வாஸ்கோடிகாமாவின் கப்பலைச் செலுத்தி இந்தியாவின் கரையில் கொண்டு வந்த வரும் அஹ்மது இப்னு என்ற அராபியரே.

சுருங்கக்கூறின், இன்றைய ஐரோப்பியக் கல்வி மற்றும் விஞ்ஞான முன்னேற்றத்தின் சாதனைகளுக்கெல்லாம் அவசியமான ஆதார உண்மைகளைப் பன்னூறு ஆண்டுகளுக்கு முன்பே முஸ்லிம்கள் உலகுக்கு உணர்த்தி விட்டனர்.

—'முஸ்லிம் முரசு'

இந்தியாவின் உயர்ந்த ரக உற்பத்தி
மங்கையர் மனதுக்குகந்தது
உஷா தையல் மெஷின்களே
ஃ ஃ ஃ


● ஒருவரின் ஆயுள் கால முழுவதும் உழைக்கக் கூடிய வெகுமதி.
● மாதத் தவணைக் கட்டணங்களில் பெற்றுக் கொள்ளலாம்.
● இலங்கை பூராகவும் விற்பனையாகிறது.
● உங்கள் உள்ளூர் விற்பனையாளர்களைக் கேளுங்கள்.
ஃ ஃ ஃ
சோல் ஏஜண்டுகள்:
ரெய்மூ சன்ஸ் லிமிட்டெட்,
88 A, மெயின் வீதி, கொழும்பு-11.
போன் : 4243, 5060.
கல்கத்தாவிலுள்ள இந்தியன் என்ஜினியரிங் எக்ஸ்போர்ட் புறொமோஷன் கவுன்ஸிலால் நடாத்தப்படுவது.

## காங்கிரஸே ஓடிவிடு!

மட்டக்களப்பில் பட்டிருப்பில்
மக்கள் வாக்குப் பிச்சை பெற
ஓட்டித்திரியும் காங்கிரஸே!
உன்னை வெற்றிக் கொடி நாட்ட
விட்டுக் கொண்டு இருப்பதற்கு
வீணரில்லை இங்குள்ளோர்
கட்டு நடையை அது இன்றேல்
காலம் காட்டும் உன் முடிவை.

தமிழர் கழித்த தலைகளுக்குத்
தஞ்சம் கொடுக்கும் காங்கிரஸே!
தமிழர் வாழ்வைப் பாழாக்கித்
தலைமை பெற நீ எண்ணுதே
தமிழர் அன்று உனை நம்பத்
தலை கீழாக மாறியதை
தமிழர் இன்னும் மறக்கவிலைத்
தாமதியாமல் நீ ஓடு.

காட்டிக் கொடுத்த சில•பேரைக்
கட்டித் தழுவும் காங்கிரஸே!
ஆட்டித் திரியும் குரங்கென்ன
அவரை இங்கு ஆட்டாமல்
கூட்டிச் செல்லு உடனே நீ
கொண்டு வந்த வழியாலே
போட்டிக் குனக்குப் பலமில்லை
போ நீ இங்கு நில்லாதே!

வடக்கை இகழ்ந்த 'மன்னர்'களை
வாரி அணைக்கும் காங்கிரஸே!
இடக்குச் செய்து ஏன் இங்கே
எம்மைக் கெடுக்க நினைக்கின்றுய்?
ஒடுக்கப்பட்ட தமிழ் மக்கள்
உரிமைக் குரலை எழுப்புகையில்
தடுக்கக் கல்லாய் நில்லாமல்
தாமதியாதே ஓடி விடு!

— சோமலிங்கம்
வந்தாறுமூலை

# செட்டிகுளத்தில் தமிழரசுத் தந்தை

## வீதி எல்லாம் விழாக்கோலம்

தமிழரசுத் தந்தை, திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் செட்டிக்குளப் பகுதிக்கு விஜயம் செய்வதாக அறிந்த மக்கள், காலை முதல் தங்கள் இல்லங்களின் முன்றில்களையும், கடைகளையும், வீதிகளையும், தமிழரசுக் கட்சியின் மூவர்ணக் கொடிகளினுலும், தோரணங்களினுலும், அலங்கரித்து, குத்துவிளக்கேற்றி பூரண கும்பம் வைத்து, மலர் மாலையுடன் தமிழ்த் தந்தையின் வரவை நோக்கி காத்து நின்றுர்கள்.

சென்ற 11-6-60 சனிக்கிழமை காலை 9 மணி முதல் செட்டி குள வீதி எல்லாம் விழாக் கோலமாகக் காட்சி அளித்தது. சென்ற முறைகளில் அரசியல் உணர்ச்சியில் மந்தமாக இருந்த இப்பகுதி மக்களின் திடீர் உணர்ச்சியால் ஏற்பட்ட மாற்றமே மேற்படி விழாக் கோலத்திற்குக் காரணம்.

சரியாக மாலை 5 மணிக்கு, முகத்தான் குளம் பிள்ளையார் கோவில் முன்றிலில் தந்தை வந்திறங்கியதும், அங்கு கூடி நின்ற மக்கள் கூட்டம், விசேடமாக இளைஞர் கூட்டம் "வாழ்க எங்கள் தந்தை," "வாழ்க தமிழ் அரசு" என்று வான் அதிரும்படி கரகோஷ மிட்டனர். திரு ஐயம்பிள்ளை தந்தைக்கு மலர் மாலையிட்டு வரவேற்றுர்.

### மூதியவரின் ஆனந்தக் கண்ணீர்

தந்தை ஊர்வலமாக அழைத்து வரப்பட்ட சமயம் திரு கார்த்திகேசு என்ற மூதியவர் ஓர் மலர் மாலையை எடுத்து, "வாழ்க தமிழரசு" என்று பன்முறை சத்த மிட்டு அந்த மாலையைத் தந்தைக்கு அணிவித்தபோது அந்த மூதியவரின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தது. இக் கிழவனின் உணர்ச்சியைக் கண்ணுற்ற பல பெண்மணிகளும் கண்ணீர் துளிர்க்க நின்ற காட்சி பலரையும் உணர்ச்சி வசப் படுத்தியது.

### கிளைக் காரியாலயம் திறப்பு

பெரிய தம்பனை, சின்னத் தம்பனை, இலுப்பைக் குளம், ரொத்திகுளம், பெரிய புளியாலங்குளம் போன்ற கிராமங்களிலிருந்து மக்கள் கூட்டம் கூட்டமாக வந்து ஊர்வலத்தில் கலந்து கொண்டார்கள். பல பெண்மணி

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கெ. நடராசா, கொழும்பு

கே: இலங்கை வந்துள்ள சேர் சி. பி. ராமசாமி ஐயர் தமிழ் நாடு என்று ஒன்று சாத்திய மில்லை என்று சொல்கிறார். நீங்கள் என்ன பதில் சொல்லுகிறீர்கள்?

ப: நான் பதில் என்ன சொல்ல வேண்டும்? திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்து, தமிழ் நாடு ஏற்பட்டு, தமிழரசுக் கட்சி தமிழ் நாட்டுடன் கூட்டுச் சேர்ந்து, இலங்கையைக் கபளீகரம் செய்யப்போகிறது என்று விஷயமறியாத சிங்களப் பாமர மக்களுக்கு மகிடி காட்டும் யு. என். பி. யின் கைக்கூலி கனம் வி. ஏ. எஸ். மரிக்கார் அல்லவா சேர் சி. பி. ராமசாமி ஐயருக்குப் பதில் சொல்ல வேண்டும்.

ஃ

என். ஜீ. சூரியன், கழுவாஞ்சிக்குடி

கே: காதலுக்கும் திருமணத்துக்கும் இடைப்பட்டது என்ன?

ப: கிராமத்தில் கண்வீச்சு, பட்டணத்தில் 'போன்' பேச்சு!

ஃ

ரா. ராமையா, தெஹியோவிட்ட

கே: என். எம். பெரேரா, சிறிமாவோ, டட்லி சேனநாயகா இவர்களைப்பற்றி உங்கள் கருத்தென்ன?

ப: என். எம். அரசியல்வாதி, சிறிமா காரியவாதி, டட்லி பண்பட்ட வகுப்புவாதி.

ஃ

க. மரியாம்பிள்ளை, கட்டைக்காடு

கே: திரு பாலசுந்தரம் கட்சி விட்டுக் கட்சி மாறியவராமே?

ப: தாம் சார்ந்து நின்ற கட்சி, கொள்கையில் குத்துக்கரணம் அடித்தபோது ஸ்திரமான கொள்கையுடைய கட்சியைப் போய்ச் சார்ந்தவர் திரு பாலசுந்தரம். எனவே அவர் கொள்கைக்காகக் கட்சிவிட்டுக் கட்சி மாறியவர். எட்டப்பர் எதிர்மன்னரைப்போல் பணத்துக்காகவோ, அல்லது பொட்டப்பர் பொன்னரைப்போல் மந்திரிப் பதவிக்காகவோ கட்சிவிட்டுக் கட்சி தாவியவர் அல்லர் பாலசுந்தரம். இதுதான் வித்தியாசம்!

எம். கே. குமாரசாமி, மன்னார்.

கே: தமிழரசுத் தந்தை திரு செல்வநாயகத்துக்கு எதில் நம்பிக்கையுண்டு? எதில் நம்பிக்கையில்லை?

ப: 'அறம் வெல்லும்' என்பதில் அவருக்கு அசையாத நம்பிக்கையுண்டு. தமிழனுடைய விமோசனம் சிங்களக் கட்சிகளிடம் இல்லை; தமிழனுடைய கையில் தான் உண்டு என்பதில் அவருக்கு நம்பிக்கையுண்டு. தமிழனுக்கு ஒரு நல்ல எதிர்காலம் உண்டு என்பதில் அவருக்கு நம்பிக்கையுண்டு. தற்புகழ்ச்சியிலும் பிறரைத் திட்டுவதிலும் அவருக்கு நம்பிக்கையில்லை. 'ஒத்துழைப்பது' தான் உரிமையைப் பெற வழி யென்பதில் அவருக்கு நம்பிக்கையில்லை. சோதிடத்தில் அவருக்கு அறவே நம்பிக்கையில்லை. இப்படிப்பட்ட ஒரு விசித்திர மனிதர் தான் திரு செல்வநாயகம்.

ஃ

நா. இராமசாமி, அனலைதீவு

கே: உலகப் பெரியார்களில் உங்கள் சிந்தை கவர்ந்தவர் யார்?

ப: சுவாமிவிவேகானந்தர்.

ஃ

கா. பாக்கியரெத்தினம், வெள்ளவத்தை

கே: குயுக்தியாரே, தாங்கள் 'வியர்வைக் குரு என்பதுதான் சரி' என்று எழுதியிருந்தீர்கள். அது தவறு; வேர்க்குரு என்பது தான் சரி என்று இதோ நான் ஆதாரங்காட்டி எழுதுகிறேன் படித்துப் பாருங்கள். இப்போது என்ன சொல்கிறீர்கள்?

ப: தங்கள் ஆராய்ச்சிக்குத் தலைவணங்குகிறேன். சங்க இலக்கியங்களில் தங்களுக்கு உள்ள ஈடுபாடு போற்றுதற்குரியது.

ஃ

வடலூரன், அனலைதீவு

கே: பண்டைய விருந்தோம்பலுக்கும் இன்றைய விருந்தோம்பலுக்கும் வேறுபாடு என்ன?

ப: பண்டைய விருந்தோம்பல் புண்ணியம் தேடிக் கொள்வதற்காகக் சோறு போடப்பட்டது. இன்றைய-அதாவது, இம்மாத விருந்தோம்பல் வோட்டுத் தேடிக் கொள்வதற்காக 'தண்ணீர்' வார்க்கப்படுகிறது.

ஃ

செல்வி து. அபூர்வம், கிரான்

கே: நான் எட்டு வருடங்களாக சுதந்திரன் பத்திரிகையைத் தொடர்ந்து படித்து வருகிறேன். ஆயிரக்கணக்கான கேள்விகளைக் குயுக்தியாரிடம் கேட்டிருக்கிறேன். ஆக மூன்று கேள்விகளுக்குத்தான் விடை கிடைத்திருக்கிறது. இதன் இரகசியம் என்ன?

ப: ஆயிரத்துக்கு மூன்று. நீங்கள் அதிர்ஷ்டசாலி. பல்லாயிரம் கேட்டும் ஒரு பதில் கூடக் கிடைக்காத நேயர்களும் இருக்கிறார்களே! இப்பகுதியில் இடம்பெறுவதற்கு கிராக்கி அதிகம் அம்மா.

திருவாளர் குயுக்தியார்
மே/பா சுதந்திரன்,
த. பெ. இல. 1183.
கொழும்பு-12.

ஃ

செல்வி கமலா தேவி விஸ்வலிங்கம், திரிகோணமலை

கே: திருமதி குயுக்தியாருடன் கடிதத் தொடர்பு வைக்கஆசைப் படுகிறேன். அவர் இசைவாரா?

ப: கடிதத்தைப் பெற இசைவார். ஆனால் பதில் எழுத இசைவாரோ தெரியாது.

ஃ

க. சுப்பிரமணியம், காரைநகர்

கே: நீங்கள் எப்போதாவது உங்கள் வாழ்க்கையில் இதுதான் சொர்க்கம் என்று வாழ்ந்திருக்கிறீர்களா?

ப: ஓ......வாழ்ந்திருக்கிறேனே. ஆனால் ஒருகணம் தான். அந்தக் கணத்தில் செய்த தவறினால் இப்போது குடியும் குடித்தனமுமாகத் திண்டாட வேண்டி ஏற்பட்டுவிட்டதே.

ஃ

செல்வி பரிமளா, பலாங்கொடை

கே: நாம் வாழ்வில் ஏமாறுவது எப்போது?

ப: கால்பேஸில் நம்மை மயக்கிய அழகி மறுநாள் காலையில் 'மேக் அப்' கலைந்த கிழவியாகக் காணப்படும் போது.

கே: காதலிக்கப்படும் காரிகைக்கும் காதலிக்கப்படாத பெண்ணுக்கும் வித்தியாசம் என்ன?

ப: காதலிக்கப்படாத பெண் பரீட்சை எழுதிய மனோபாவத்துடனும், காதலிக்கப்படும் காரிகை [illegible] உத்தரவை எதிர்பார்த்திருக்கும் மனோபாவத்துடனும் இருப்பார்கள். இதுதான் வித்தியாசம்.

ஃ

க. கா. இலங்காபதி, காரைநகர்

கே: திரு எஸ். கதிரவேற்பிள்ளைக்கும் திரு ஜீ. ஜீ. பொன்னம்பலத்துக்கும் ஒற்றுமை வேற்றுமைகள் என்னவோ?

ப: இருவரும் வழக்கறிஞர்கள் என்பது ஒற்றுமை. பிழையைச் சுட்டிக்காட்டினால் உடனே திருந்திக் கொள்ளும் மக்கள் பண்பு உடையவர் திரு கதிரவேற்பிள்ளை. பிழையென்று தெரிந்ததையும் திரும்பத் திரும்ப வீம்புக்காகச் செய்யும் மாக்கள் பண்பு கொண்டவர் திரு ஜீ. ஜீ. இதுதான் வேற்றுமை.

ஃ

பி. எஸ். சண்முகநாதன் முரசுமோட்டை

கே: கள்ளையும், சூதாட்டத்தையும், வேசிகளையும் கடவுள் ஏன் படைத்தார், குயுக்தியாரே?

ப: அயாண்டம் கற்பிக்காதேயும் ஐயா. அவர் எங்கே இவற்றைப் படைத்தார்? மனிதன் அல்லவோ இவற்றைத் தானாகப் படைத்துக் கொண்டு திண்டாடுகிறான்.

ஃ

க. வீரசிங்கம், கொழும்பு

கே: சுதந்திரனைச் சில சில்லறைப் பத்திரிகைகளும் அதன் ஆசிரியர்களும் திட்டுகின்றன. காரணம் என்ன?

ப: சந்திரனைப் பார்த்து நாய் குலைக்கிறதே அதற்கு காரணம் உண்டா? அது போலத்தான் சுதந்திரனைப் பார்த்துக் குலைப்பதும். 'திட்டுகின்றன' என்று தாங்கள் எழுதியிருப்பதன்மூலம்மேற்படி ஆசிரியர்களுக்குப் பொதுமக்கள் அஃறிணை மதிப்புத்தான் கொடுக்கிறார்கள் என்பது தெரிகிறதே!



# நமக்குத் தொழில் கவிதை

நமக்குத் தொழில் கவிதை என்ற வெண்பாப் போட்டியில் கவிதை எழுத விரும்புவோர் யாவரும் கலந்து கொள்ளலாம். கட்டுப்பாடு கிடையாது. ஒருவர் எத்தனை வெண்பாக்கள் வேண்டுமானாலும் எழுதலாம். கவிதை அஞ்சல் அட்டையில் (Post Card) மட்டுந்தான் எழுதப்படவேண்டும். ஒரு அட்டையில் ஒரு வெண்பாவுக்கு மேல் எழுதக் கூடாது. கீழே தரப்பட்டிருக்கும் அச்சிட்ட முகவரியை வெட்டி அஞ்சலட்டையில் ஒட்டி அனுப்ப வேண்டும். அச்சிட்ட முகவரி ஒட்டப்பெறாத அட்டைகள் கவனிக்கப்படமாட்டா.

## போட்டி இல : 12

இந்த பன்னிரண்டாவது வெண்பாப் போட்டிக்கு 'அறம் வெல்லும்என்றேஅறி' என்ற ஈற்றடி தரப்பட்டிருக்கிறது. இதை வைத்தே வெண்பா எழுதப்பட வேண்டும். இலக்கியச் சுவைக்கும், நகைச் சுவைக்கும், அங்கதச் சுவைக்கும் (Satire) முக்கிய கவனிப்பு அளிக்கப்படும். மத்தியஸ்தர்களால் தேர்ந்தெடுக்கப்பெற்ற வெண்பாக்கள் சுதந்திரனில் வெளியாகும்.

—ஆசிரியர் : சுதந்திரன்.

'நமக்குத் தொழில் கவிதை'
மே/பா ஆசிரியர்,
சுதந்திரன்,
த. பெ. 1183,
கொழும்பு—12.

வெண்பாக்கள் கிடைக்க வேண்டிய முடிவு தேதி 12—7—1960

'அறம் வெல்லும் என்றே அறி'

உங்கள் நீடித்த எழிலுக்கு
'எலேட்'
சுப்பர்லோன் ஜோர்ஜட் என்னும்
அழகின் அணிகலனை அணியுங்கள்.
பார்வைக்கு மட்டும் அழகல்ல, அவை நவீன நூலிழைகளால் இணைக்கப்பட்டிருப்பதால் உறுதியாக உழைக்கின்றது.
இன்னும் அழுக்குப் பிடியாமல், சுருங்காமல், மடிப்புக் குலையாமல் இருக்கக் கூடியது
'எலேட்'
சுப்பர்லோன் ஜோர்ஜட்
அற்புதமான டிசைன்களிலும் எடுப்பான கண்கவர் வர்ணங்களிலும் கிடைக்கின்றன.
குண்டன்மால்ஸ்,
லிமிட்டெட்,
கொழும்பு.

விற்பனையாகிறது!
தமிழரசுத் தந்தை
(பேரறிஞர். செல்வா பற்றிய இரண்டாவது தொகுப்பு நூல்)
தொகுத்தவர்:
குரும்பசிட்டி இரா. கனகரத்தினம்.
★ தந்தை பற்றி மலைநாட்டுத் தமிழ்த் தலைவர்கள் முதல் தடவையாகத் தந்திட்ட கட்டுரைகள்.
★ ஜனவரி 1960 தொடக்கம் மார்ச் 1960 வரையுள்ள தந்தையின் சொற்பொழிவுகள்.
★ செல்வா பற்றி, நெடுஞ்செழியன், ம. பொ. சி., கண்ணதாசன், கல்கி தந்திட்ட கருத்துரைகள்.
★ வன்னியசிங்கம்—செல்வநாயகம்; செல்வநாயகம்—பொன்னம்பலம்; தொண்டமான்—அஸீஸ்; சோடியாக நின்று எடுத்துக்கொண்ட புகைப் படங்கள் முதல் தடவையாக நூலில் இடம் பெறுகின்றன.
மூவர்ண அட்டை, ஏராளமான புகைப் படங்கள், வீரகேசரி ஆசிரியர்: கே. வி. எஸ். வாஸ் முன்னுரையுடன்.
வி. பி. பி. மூலம் நூல்கள் கண்டிப்பாக அனுப்பி வைக்கப்பட மாட்டாது!
தொகையாகப் பிரதிகள் தேவையானோருக்கு தகுந்த டிஸ்கவுண்ட் தரப்படும்.
தனிப்பிரதி விலை ரூபா. 1-00.
தபாலில் ரூபா. 1-20.
எம். ஏ. சுல்த்தான்,
74/2, பிறவுண்றிக் வீதி, கண்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவிலிருந்தும் தமிழரசுக் கட்சிக்கு தேர்தல் நிதி

## பள்ளி மாணவி அருமையாகச் சேமித்த ஒரு ரூபா அன்பளிப்பு

உள்ளவர்கள் அள்ளிக் கொடுக்கிறார்கள்; இல்லாதவர்கள் ஏதோ கிள்ளித் தருகிறார்கள்.

பல்லாயிரம் மைல்களுக்கப்பால் கடல் கடந்த நாடுகளிலிருந்தும் வருகிறது; உள்ளூரிலிருந்தும் கிடைக்கிறது—நிதி; தேர்தல் நிதி.

தமிழரசுக் கட்சி தேர்தலில் வெற்றி பெற்று தமிழ் பேசும் மக்களின் விடுதலை இயக்கத்தை இனிது நடத்தி அன்னவரின் உரிமை வாழ்வுக்கு வழி தேட நிதி உதவி வேண்டும் என்று தமிழரசுத் தந்தை நாவசைத்தார். நாலாபக்கங்களிலிருந்தும் வருகிறது.

சுமார் 10 ஆண்டுகளுக்கு முன் இல்லாத கட்சி இது. இன்று நிதி தேவை என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டதும் இதோ இருக்கிறது என்று எடுத்து நீட்டுகிறார்கள் மக்கள்.

ஆட்சி அமைக்கக் கூடிய நிலையில் உள்ள ஒரு அரசியல் கட்சிக்கு உள்ளவர்கள் தாராளமாகக் கொடுப்பதில் ஒன்றும் ஆச்சரியம் இல்லை. சகாயம் பெறலாம் என்ற நம்பிக்கையில் அதை அவர்கள் செய்யலாம். அடிமைப்படுத்தப்பட்ட ஒரு இனத்துக்காக அடக்கப்பட்ட நிலையில் இருந்தே தொண்டு புரியும் ஒரு கட்சிக்கு அவர்கள் கொடுப்பது தான் பெருமைக்கு உரிய விஷயம்.

இல்லாதவர்களும் கூட ஏதோ தம்மால் ஆனமட்டில் கிள்ளித் தருகிறார்கள் என்றால் அது அவர்களின் உள்ளத்து உயர்வையும் கட்சியின் மீது அவர்கள் கொண்ட நம்பிக்கையும் பற்றுதலையும் பிரதிபலிப்பதாகும்.

இந்திய சுதந்திரப் போராட்டத்துக்கு பொது மக்களிடமிருந்து நிதி உதவி கோரிய மகாத்மா காந்தி என்ன சொன்னார்? "ஏழை மக்கள் காலணா வேனும் தம் பங்கு என்று சொல்லித் தருவார்களேயானால் அதையே தேர்தற் பெருநிதியாக நான் கருதுவேன்" என்ற சாரப்படக் கூறினார். அந்த ஒவ்வொரு காலணாவோடும் கிடைக்கும் ஆத்மீகப் பலம் சுதந்திர இயக்கத்துக்கு பக்கத் துணையாக இருக்கும் என்பது அவரது நம்பிக்கை.

நாமும் நம்மால் ஆனதைக் கொடுத்து உதவ வேண்டும் என்று எல்லோரும் முன் வருவார்களேயானால் சுதந்திர இயக்கம் பாதி வெற்றி கண்டதாகிவிடும் என்று காந்தி கருதினார்.

அப்படியான நிலைமை இலங்கையில் ஏற்பட்டிருப்பது மகிழ்ச்சிக் குரியதாகும். தமிழரசுத் தந்தை நிதி உதவிவேண்டும் என்றதும் எப்படிப்பட்டவர்கள் எத்தகைய சூழ் நிலையில் எவ்வளவு ஆர்வத்தோடு உதவுகிறார்கள் என்பதற்கு இரண்டொரு உதாரணங்கள் இங்கு தருகிறோம்.

சுன்னாகம் ராமநாதன் கல்லூரியில் படிக்கும் மாணவி ஒருத்தி. பெயர் விமலா நடராஜா. தமது அன்றடச் செலவுகளுக்காகத் தரப்பட்ட சிறு தொகையிலிருந்து நாளாந்தம் மிச்சப்படுத்திச் சேர்த்தார் ரூபா 1/-. தமிழரசுக் கட்சித் தேர்தல் நிதியில் தமது அன்பளிப்பும் சேரவேண்டும் என்ற துடிப்பில் சேர்த்த அந்தச் சிறு தொகையைத் தமிழரசுத் தந்தைக்கு அனுப்பி வைத்திருக்கிறார்.

தாம் அனுப்பிய தொகையோடு அவர் ஒரு உருக்கமான கடிதத்தையும் எழுதி வைத்திருக்கிறார். அதில் அவர் பின் வருமாறு குறிப்பிட்டிருக்கிறார்.

"அன்பின் தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகம் அவர்கட்கு வணக்கம்.

ராமநாதன் கல்லூரியில் படிக்கும் மாணவியாகிய எனக்குச் சிறு பிராயம் முதல் உங்களைக் காணவும், உங்களோடு அளவளாவவும் மிகவும் விருப்பமாக இருந்தது. தமிழுக்காக உங்கள் உடல், பொருள், ஆவி மூன்றையும் தியாகம் செய்யும் தமிழரசுத் தந்தையாகிய உங்கள் முகமே என் நெஞ்சில் படத்தில் கண்டபடி ஆழமாகப் பதிந்திருக்கிறது. ஆனால் அபாக்கியசாலியான எனக்கு உங்களைத் தரிசிக்கும் வாய்ப்புக் கிட்டவில்லை.

தமிழரசுக்கொடியின் கீழ் நின்று தமிழுக்காகப் பாடுபடும் எங்கள் கட்சியின் தேவைக்காக நான் சிறிது சிறிதாகச் சேமித்து வைத்த ஒரு ரூபாப் பணத்தை இக் கடிதத்துடன் அனுப்புகின்றேன். நான் மனமார்ந்த மகிழ்ச்சியுடன் அனுப்பும் இச் சிறு தொகையைத் தட்டாமல் ஏற்பீர்கள் என உறுதியுடன் எண்ணுகின்றேன்.

மேலும் உங்கள் கையொப்பத்தைப் பெற விரும்பி இரண்டு 'ஓட்டோ' தாள்களை அனுப்புகின்றேன். ஒன்றில் தமிழிலும் மற்றதில் ஆங்கிலத்திலும், கையொப்பம் வைத்து அனுப்புவீர்கள் என்று உறுதியோடு எண்ணுகின்றேன்.

தமிழரசுத்தந்தையாகிய உங்களது புகைப்படத்தைத் தமிழ்ச் செல்வியாகிய எனக்குப் பெற மிகவும் விருப்பம். தயவு செய்து உங்களது புகைப் படம் ஒன்றை எனக்கு அனுப்புவீர்களா? அதைப் பெறும் பாக்கியம் எனக்குக் கிட்டுமா?

நான் ராமநாதன்கல்லூரி விடுதியிலேயே தங்கி இருக்கின்றேன். தாங்கள், விமலா நடராஜா, 'ஜானகி இல்லம்' ராமநாதன் கல்லூரி, சுன்னாகம் என்னும் விலாசத்திற்கு அனுப்பினால் எனக்குக் கிடைக்கும். உங்கள் பதிலைத் தயவுடன் எதிர் பார்க்கும்,

—"தமிழ்ச் செல்வி"

பாடசாலை மாணவியின் கள்ளமற்ற உள்ளம் எத்துணை கனிந்து இருக்கிறது என்பதை மேலே தரப்பட்ட கடிதம் தானே கூறுகிறது.

அரசாங்க உத்தியோகத்தர் ஒருவர் இப்போது இலங்கையில் இல்லை. அமெரிக்கா சென்றிருக்கிறார் உத்தியோகப் படிப்புக்கு. அதுவும் அரசாங்கத்தின் உதவிப் [illegible] ரூபா 110/49 அனுப்பியிருக்கிறார். அவரைப் பற்றி

(13-ம் பக்கம் பார்க்க)

### எஸ். ஜே. வியின் வேண்டுகோள்

கடந்த பொதுத் தேர்தலில் தமிழ் அரசுக் கட்சி வெற்றி ஈட்ட பொருள் உதவி தந்து துணைபுரிந்த தமிழ் பேசும் மக்களாகிய உங்களிடம் தான் மீண்டும் பணம் தந்து உதவுங்கள் எனக் கேட்க வேண்டிய நிர்ப்பந்த நிலையில் இருக்கிறேன்.

எடுத்த எடுப்பில் தமிழ் பேசும் இனம் தனது இழந்த உரிமைகள் அனைத்தையும் பெற்றுவிட முடியாது. நிலையான கொள்கையோடு தொடர்ச்சியாகப் பல காலத்திற்கு நாம் உரிமைக்குரல் எழுப்பினால்தான் உரிமை வாழ்வு பெற முடியும். உலகில் உள்ள விடுதலை பெற்ற பல் வேறு நாடுகள்-தேசிய இனங்கள் இந்தப் பேருண்மையையே உணர்த்தி நிற்கின்றன. ஆதலால் தமிழ் அரசுக்கட்சியை ஒருகுறிப்பிட்ட குழுவின் கட்சியெனக் கருதாது ஒவ்வொரு தமிழ் மகனும்-மகளும் தாம் அங்கம் வகிக்கும் 'மக்கள் விடுதலை இயக்கம்' (*Peoples, Freedom Movement*) அது எனக்கருதி நிறைந்த தமிழ் உணர்ச்சியோடு பணியாற்ற வேண்டும்.

இம்முறைத் தேர்தலில் நாம் போட்டியிடும் எல்லாத் தொகுதிகளிலும் வெற்றியீட்டி தமிழ் பேசும் இனம் தனது "சுயநிர்ணய உரிமையை" நிலைநாட்ட உறுதிபூண்டுவிட்டதை சிங்கள அரசாங்கத்திற்கும் உலகத்திற்கும் எடுத்துக்காட்ட வேண்டும். இந்நிலையை உருவாக்க ஓர் அரிய வாய்ப்பாகவே இத்தேர்தலை நாம் பயன்படுத்த வேண்டும். ஆதலால் இம் முக்கியத்துவத்தை உணர்ந்து இயன்றளவு பணம் தந்து உதவுங்கள் என மீண்டும் பணிவன்புடன் வேண்டுகிறேன்.

எஸ். ஜே. வி. செல்வநாயகம்

16, அல்பிறட் ஹவுஸ் கார்டின்ஸ்,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு-3.

# நமக்குத் தொழில் கவிதை

## ஆடி இருபதிலே சாடு!

வீடு பெற நிற்கும் வீரத் தமிழரசார்
நாடும் உரிமைகளை நாடறியும்—பீடுடையோய்!
நாடி யிழந்த நப்பாசைக் கட்சிகளை
ஆடி இருபதிலே சாடு!

—பொன் வசீகரன், காவத்தை

காட்டிக் கொடுப்போரும் காசுக்கு விற்போரும்
போட்டிக்கு நிற்கின்றார் போர்வையிலே—வீட்டினுக்கு
ஓடி வருவார்கள் உன்பால்! செருப்பெடுத்தே
ஆடி இருபதிலே சாடு!

—நா. நாகராசா, கல்முனை

வாலறுந்த காங்கிரசும் வாழ்விழந்த முன்னணியும்
கோலம் பலமாறும் கொம்யுனிஸ்டும்—ஓலமிட்டு
வேடிக்கை காட்டி வெறும் பேச்சே பேசிடுவார்
ஆடி இருபதிலே சாடு!

—செல்வி வி. ரஞ்சினிதேவி, மூதூர்

ஈழத் தமிழனே இன்தமிழின் காவலனே,
வாழத் தமிழரசு வாய்ப்பிதுவே—வாழ்மனைக்குப்
போடுபோய்ச் சீட்டுகளைப் பொன்னண்ணன் காங்கிரசை
ஆடி இருபதிலே சாடு!

—திருமதி ந. வீரேசன், மூதூர்

ஓட இனப்பகைவர், ஒண் தமிழைக் காக்கின்ற
பீடு நடைச் செல்வர் பேரோங்க,—கூடிப்போய்
வீடதுவே வென்றுவர, வெங்கொடுமை பொன்றிவிழ
ஆடி இருபதிலே சாடு!

—"தமிழேந்தி", இரத்தினபுரி

காடி புளிக்கும், கரும்பினிக்கும் என்று நன்றாய்க்
கூடித் தெரிந்தும் குலச் சிதைவை—நாடிவரும்
மூடர் தம் தொல்லை முடியட்டும் முற்றாக!
ஆடி இருபதிலே சாடு!

—"மணியம்", மண்டூர்

நாடு நலமுறவும் நம்மரசு சீருறவும்
காடு வளம்பெறவும் நாடுவையேல்—கோடிபணம்
தேடும் திருநோக்கம் தேர்தலிலே கொண்டாரை
ஆடி இருபதிலே சாடு!

—செ. தர்மராணி, அச்சுவேலி

வாக்குரிமை யென்ற நல்ல வாய்வெள்ளுத்த வாளெடுத்துத்
திக்கழுதைக் கூட்டம் சிதைந்தோடத்—தாக்கிடுக!
கூடித் தமிழர் குலம் அழிக்க வந்தவரை
ஆடி இருபதிலே சாடு!

—மதிவாணர், மண்டைதீவு

காட்டிக் கொடுத்து வந்த கல்நெஞ்சக் கள்வனையே
வாட்டி எடுத்தாயே வண்டமிழா—மீட்டுமவன்
தேடி வருகின்றான் தேர்வாக்குச் சாட்டையினால்
ஆடி இருபதிலே சாடு!

—நா. சிவபாதம், தெமட்டகொட

சட்டத்தைக் கற்றுச் சனங்களை ஏமாற்றி
பட்டம் பதவிகளில் பசைபோல் ஒட்டியே
கேடெடம் தமிழுக்குச் சூழ்ந்தவர்கள் கெஞ்சிடினும்
ஆடி இருபதிலே சாடு!

—"கலியுகன்", வந்தாறுமூலை

நாட்டினிலே நம்மினமும் நம்மொழியும் வாழ்வதென்றால்
கூட்டாட்சி வேண்டுமெனக் கொண்டே நீ—போட்டியிடும்
கூடிக் குலங்கெடுக்குங் கொள்கையிலார் தோற்றிடவே
ஆடி இருபதிலே சாடு!

—பரமேஸ்வரி சோமகாந்தன். உடப்பு

வட்டப் பெருவிழியோன் வானரம்போற் தாவுகின்ற
குட்டிக் கரணக் குலமகனர்—எட்டடுக்கு
மாடியிலே ஒப்பந்தம் வாதிக்கும் ஜீஜீயார்க்(கு)
ஆடி இருபதிலே சாடு!

—அ. க. கதிரேசன், வதிரி

ஆட்டினத்தைக் காக்க அவாவுறும்ஓ நாயாய், உன்
வீட்டையழித் துன்னுரிமை விற்கவென்றே—போட்டியிடும்
பேடித் தமிழர்பணப் பித்தந் தெளிந்திடவே
ஆடி இருபதிலே சாடு!

—"வன்னியூர்க் கவிராயர்", நேரியகுளம்

தன்மான மின்றித் தமக்கென்றோர் கொள்கையின்றிக்
கன்னபின்னவென்றே கத்துகின்ற—பொன்னர்கள்
கூடி இனித்தம் குலத்தொழிலைப் பார்த்தோட
ஆடி இருபதிலே சாடு!

—க. சுப்பிரமணியம், காரைநகர்

எந்தமிழுக் கின்ன லிழைக்கும் கொடுமை தனை
வெந்தழலில் வீழ்த்த விரைந்தே நீ—செந்தமிழா,
ஓடிவா, நெஞ்சினிலே ஊறும் தமிழ்உணர்வால்
ஆடி இருபதிலே சாடு!

—சி. பொன்னுத்தம்பி, செங்கலடி

நாட்டிற் கினிய தமிழ் நல்லரசு தானிருக்க
போட்டிக்கேன் வந்தாரோ பொன்னரவர்—கூட்டத்தோ
டோடி இவரோதுங்க ஒன்றித்து நின்று, வரும்
ஆடி இருபதிலே சாடு!

—கு. பொன்னையா, பெரிய போரதீவு

பட்டம் பதவிக்காய் பைந்தமிழை விற்றிட்டோர்
வட்டம் இடுகின்றார் வாக்குக்கு—திட்டமதாய்
கூடித் தமிழா குழறியக் கும்பலையே
ஆடி இருபதிலே சாடு!

—நந்தாமி, கல்முனை

தொகுத்தவர்: கவிஞர் "அமுது"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு தென் இந்தியப் படையெடுப்பு

## சரித்திர நியதிப்படி மீண்டும் நடக்கத்தான் போகிறது

## தி. மு. க. அரசமைப்புப் படங்களில் இலங்கையும் சேர்க்கப்பட்டிருக்கிறது

## ஒல்லியான செல்வநாயகத்தின் உருவத்தில் ஒரு லட்சம் சிங்களவரைக் கொன்று குவித்த தமிழ் மன்னனின் சாயல் தெரிகிறது

### மகுடி மரிக்காரின் புதிய கண்டு பிடிப்புகள் விசித்திர சரித்திர ஆராய்ச்சி

ஒட்டியிருந்த கட்சியிலிருந்து ஒதுக்கப்பட்டு அரசியலில் இருந்தும் 'அவுட்' ஆகிவிட்டபின் முன்னாள் வானொலி மந்திரி மரிக்கார் சிங்களவர்களுக்கு அதிர்வெடி ஒன்றைப் போட்டுத் தாமும் எங்கோ இருக்கிறோம் என்று சத்தங்காட்டியிருக்கிறார்.

சரித்திர ஆராய்ச்சி என்ற போர்வையில் சில விசித்திரமான கருத்துக்களை அள்ளி விசியிருக்கிறார் ஓர் அறிக்கையில்.

மொத்தத்தில் சிங்களவர்களுக்கு தமிழர்களால் ஆபத்து வரப் போகிறதாம். தமிழரசுக் கட்சிக் கோரிக்கைகளுள் ஒன்றுக்குத்தானும் இணங்கினாலும் சிங்கள இனம் மாண்டு மடிந்து போக வேண்டியதுதானாம். இன்னும் இப்படி எதை எதையோவெல்லாம் மரிக்கார் தமது அறிக்கையில் தெரிவித்திருக்கிறார். அவரது ஆங்கில அறிக்கையின் முக்கிய பகுதிகள் தமிழாக்கிக் கீழே தரப்பட்டிருக்கின்றன. படித்துப் பாருங்கள்.

சிங்கள இனத்தின் தலைக்கு மேல் தொங்கிக்கொண்டிருக்கிறது தமிழனின் ஆதிக்கம் என்ற பேராபத்து. இந்தப் பேராபத்து இலங்கைச் சரித்திரத்திலேயே என்றும்மாறுதலொருநியதி. 25 வருட காலமாகக் கொள்கை வழுவாத டாக்டர் என். எம். பெரேராவினதும் அவரின் கட்சியினதும் பதவி மோகம் என்ற அரிப்பினால் இந்தப் பேராபத்திலிருந்து சிங்கள இனத்தைக் காப்பாற்றிவிட முடியாது. அல்லது ஆசைகள் நிறைந்த ஒரு விதவையின் சுயநலக் கண்ணீராலும் இந்தப் பேராபத்திலிருந்து சிங்கள இனத்தைக் காப்பாற்றிவிட முடியாது. இது கடைசி வரை இயலாது என்பது பற்றி நான் திடங்கூற முடியும். அதேபோலத் தமிழரசுக் கட்சியின் பயமுறுத்தலுக்குச் சிங்கள மக்கள் என்ன பதில் கூறப்போகிறார்கள் என்பதுபற்றியும் நான் திடங்கூற முடியும்.

### கோமாளிகளும் ஏமாளிகளும்

நாடகம் ஆரம்பிக்குமுன் மேடையில் ராஜநடை பயிலும் இக்கோமாளிகள் கற்பனை உலகில் கனவுகாணுகிறார்கள். கனவுலகில் தம்மை மறந்திருக்கும் இந்த ஏமாளிகளுக்குப் பின்னால் ஒரு நெடிய உருவம் நிற்பதைக் காணகிறோம். உறுமின்வரும் வரைகரும் காத்துக் காத்துக்கொண்டேயிருக்கிறது இந்த ஒல்லி உருவம். தனக்குப் பின்னால் உறுதுணையாகச் சரித்திர நியதி என்றும் இருக்கவே இருக்கிறது என்பது இவ்வுருவத்திற்குத் தெரியும். அத்துடன் நாலு கோடி தமிழர் தனக்குப் பின்னால் திரண்டு நிற்கிறார்கள் என்பதும் சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகத்திற்கு நன்கு தெரியும். அதைவிட திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசியற் சித்தாந்தமும் தன் பக்கத்திலேயே என்பதும் இவருக்கு நன்றாக தெரியும்.

இவைகளுக்கூடாக, சிங்கள மக்களுக்கு மிகவும் பரிச்சயமான முகங்கள் எம் முன்னே பவனி வருகின்றன—எல்லாளன், வீரபாண்டியன், பராந்தகன், மஹா, முதலாம் இராஜேந்திரன் ஆகியோர். இறுதியில் தோன்றுகிறான் இராஜ இராஜ சோழன்! இவனைத் தமிழர் "மஹா" இராஜ இராஜ சோழன் என்றழைப்பார்கள். ஆனால் சிங்கள சரித்திர நூல்களின்படி ஒரு லட்சம் சிங்களக் குடும்பங்களை வாளுக்கு இரையாக்கிய மன்னன் இவனே தான்.

### சிங்கள மக்கள் மாண்டுவிடுவார்கள்

தமிழரசுக் கட்சியின் நான்கு கோரிக்கைகளில் ஒன்றுக்குக்கூட இணங்கினால் இலங்கையின் சுதந்திரத்திற்குப் பேராபத்து! சிங்கள மக்கள் நிரந்தர தமிழ் ஆதிக்கத்தின்கீழ் மாண்டுவிடுவார்கள். எந்தச் சிங்களக் கட்சியும் இக்கோரிக்கைகள் எதற்கும் உடன்பட முடியாது. இருந்தும் இவற்றை வற்புறுத்துவதின்மூலம் தமிழரசுக் கட்சி இலங்கை அரசியலுக்குப் புறம்பான சூழ்நிலையிலேயே நடமாடுகிறது. பதவி ஏற்கும் எந்த அரசாங்கமும் இலங்கை அரசாங்கத்தின் உதவி எதுவும் இக்கட்சி ஆதரவாளர்களுக்குக் கிடைக்காது கவனித்துக் கொள்ள வேண்டும். அத்துடன் ஒரே இலங்கையை நிர்மாணிப்பதில் சிங்களவர்களுடன் ஒத்துழைக்கக்கூடிய பிரதிநிதிகள் தெரிவுபடக் கூடிய நோக்கில் அரச நலன்களைத் தமிழரிடையே பரப்ப வேண்டும். இலங்கையைத் திராவிட நாட்டின் ஒரு பகுதியாக்க முயலும் கட்சிகளுக்கோ ஆதரவாளர்களுக்கோ அரசாங்கம் உதவக்கூடாது.

### சந்தர்ப்பத்துக்கு ஏற்ற சாதுரியம்

சுதந்திரக் கட்சிக்கும், சமசமாஜக் கட்சிக்கும் தமிழரசுக் கட்சிக்குமிடையேயுள்ள இரகசிய ஒப்பந்தத்தின் அடிப்படை பண்டாரநாயகா-செல்வநாயகம் ஒப்பந்தமே. இவ்வொப்பந்தத்தை இந்தக் கண்ணோட்டத்தில்தான் நோக்க வேண்டும். நாலு கோரிக்கைகளையும் ஏற்றுக்கொள்ளும் இவ்வொப்பந்தத்தைத் தமிழரசுக் கட்சி தன் பெறுபேறுகளின் சிகரம் எனக் கருதுகிறது. ஆனால் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்ட பண்டாரநாயகாவோ வேறுவிதமாக கருதினார். ஒப்பந்தம் கையெழுத்தான பின்னர் நடந்த மந்திரி சபைக் கூட்டத்தில் பண்டாரநாயகா பெரிதும் கண்டிக்கப்பட்டார். அப்பொழுது அவர் தான் அதை நிறைவேற்றி வைக்கும் நோக்கத்துடன் செய்யவில்லை என்றும் சந்தர்ப்பத்திற்கேற்ப ஒரு சாதுரிய நடவடிக்கையாகவே தான் கையெழுத்திட்டதாகவும் பண்டாரநாயகா கூறினார். ஏற்ற தருணம் வரும்பொழுது தான் அதைக் கிழித்தெறிந்துவிடுவதாகவும் பிரதமர் கூறியதை இங்கு நான் ஞாபகமூட்ட விரும்புகிறேன். ஆனால் இன்றோ தமது குருவான டாக்டர் பெரேரா எடுத்துரைக்க, பண்டாரநாயகா-செல்வநாயகம் ஒப்பந்தத்தில் வேத உண்மை ஒன்றைக் கண்டுபிடித்துவிட்டதாகவும், சிங்கள மக்களின் நலவுரிமைகளைப் பலிகொடுக்கும் நிலைமை வந்தாலும், ஆட்சிப் பதவி கையிற் கிடைக்கிறதே என்றும் அங்கலாய்க்கிறார்கள் சுதந்திரக் கட்சிப் பிரமுகர்கள்.

### ஐந்தாம்படை

மாறுபடா நியதியாக இலங்கையின் சரித்திரத்தில் 2000 வருடமாக நிகழ்ந்து வரும் உண்மை ஒன்றுபற்றி மேலே குறிப்பிட்டிருந்தேன். அதாவது எந்தச் சந்தர்ப்பத்திலும், எந்த அரசியல் சூழ்நிலையிலும், தென்னிந்தியாவிலுள்ள தமிழர் ஐக்கியப்பட்டிருந்த காலத்தில் அவர்கள் இலங்கைக்குள் படையெடுப்பு நிகழ்த்தியிருக்கிறார்கள். இன்று தென்னிந்தியாவிலே, தமிழரிடையே இத்தகைய ஒற்றுமை நிலவுகிறது. இவர்கள் தெற்குப் பக்கமாக நோட்டஞ் செலுத்தக் காலம் அதிகம் ஆகப்போவதில்லை; ஆனால் சிங்கள மன்னர்களின் காலத்தில் போலல்லாது, இன்று இலங்கையில், வடக்கு கிழக்கு மாகாணங்களிலும், மலை நாட்டிலும் பெரிய ஐந்தாம் படை ஒன்று அவர்கள் சார்பில் இயங்கி வருகிறது. இலங்கையின் ஒற்றுமைக்கு ஆப்பு வைத்து, நாட்டின் சுதந்திரத்தைத் திராவிட இராச்சியத்திற்குக் காட்டிக் கொடுப்பதே இவர்களின் நோக்கம். இதற்குச் சிங்கள மக்கள் 2000 வருடங்களாகக் காட்டி வந்த பதிலையே இன்றும் காட்ட வேண்டியவர்களாக இருக்கிறார்கள் என்பது தெளிவு. இதற்குச் சிங்கள மக்கள் ஒன்று பட வேண்டும். தமிழரசுக் கட்சியின் ஆதரவில்லாமலே அரசாங்கம் நிறுவக் கூடியதாகத் தனியொரு கட்சிக்கு மிகப் பெரிய பெரும்பான்மை ஸ்தானங்கள் கிடைக்கச் செய்ய வேண்டும்.

### அதிமுக்கிய சம்பவம்

இலங்கை சுதந்திரம் பெற்ற 1948-ம் ஆண்டிற்குப் பின் நடந்த அதி முக்கிய சம்பவம்—எனது அபிப்பிராயத்தில்—தமிழரசுக் கட்சி வளர்ச்சி பெற்றதாகும். இந்தக் கட்சி நாளுக்கு நாள் பிரமிக்கத் தக்க வகையில் வளர்ச்சியடைந்து கொண்டே வந்திருக்கிறது இன்றைய நிலையில் இலங்கைத் தமிழ் பேசும் மக்கள் அனைவரின் பிரதிநிதிதானே தான் என்று தமிழரசுக் கட்சி உரிமை கூற முடியும். இந்தியத் தமிழரின் பிரதிநிதியாக இக்கட்சி இன்று இல்லை. ஆனால் வெகு விரைவில் மலை நாட்டுத் தமிழரையும் தன் கொடிக்கீழ் கொண்டு வரக் கூடிய வகையில் இக்கட்சி தன் கொள்கைகளை வகுத்திருக்கிறது.

இன்றைய நிலையில் அரசாங்கங்களிடம் தமிழரசுக் கட்சி தான் கோரிக்கைகளைச் சமர்ப்பித்திருக்கிறது. இக்கோரிக்கைகளுக்கும் சிங்கள மக்களின் உரிமைகளுக்குமிடையில் ஏதும் சமரஸமான நடுவழி சாத்தியமில்லை; சமரஸம் ஏற்றுக் கொள்ளப்படப் போவதுமில்லை. ஏனெனில் இந்நாட்டின் சுதந்திரத்தைப் பறித்து, தமிழரின் ஆதிக்கத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் தான் இக் கோரிக்கைகள் திட்டமிட்டு நிர்மாணிக்கப்பட்டன.

### தமிழரசின் கோரிக்கைகள்

தமிழரசுக் கட்சியின் கோரிக்கைகள் 4 அடித்தளங்களில் அமைந்திருக்கின்றன. என்ன தான் நடந்தாலும் தான் இக் கோரிக்கைகளிலிருந்து இம்மியும் பின் வாங்கப் போவதில்லை என்று அக் கட்சியின் தலைவர் பகிரங்கப் படுத்தியிருக்கிறார். இக் கோரிக்கைகளுக்கு இணங்கினால் மாத்திரமே தமிழரசுக் கட்சி எந்த அரசாங்கத்தையும் ஆதரிக்க முடியுமாம். இக் கோரிக்கைகள் என்ன?

1. வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்குப் பிரதேச சபைகள்.
2. சிங்களத்துடன் தமிழுக்கு ஒத்த மதிப்பு நிலை.
3. வடக்கு கிழக்கு மாகாணங்களைத் தமிழருக்கு மாத்திரம் குடியேற்ற ஒதுக்கி வைத்தல்.
4. இலங்கையிலுள்ள 8 லட்சம் இந்தியர்களுக்கு வாக்குரிமை.

தென்னிந்திய படையெடுப்புப் பற்றிச் சரித்திரத்தில் என்ன நியதி இன்று வரை இயங்கி வந்ததோ அந்த நியதியின் பின்னணியில் இக்கோரிக்கைகளை அலசிப் பார்ப்போம்.

முதலாவது பிரதேச சபைகள். இப் "பிரதேச சபைகள்" இன்னது தான் என்று எவராவது வரையறை எதுவும் கூறவில்லை. இச்சபைகளின் அதிகாரங்கள் எவை? இச்சபையின் அமைப்பு என்ன? மத்திய அரசாங்கத்திற்கு இச் சபைகளின் மேல் என்ன ஆதிக்கம் இருக்கும்? பிரதேச சபையை ஏற்றுக் கொண்ட பண்டாரநாயகா—செல்வநாயகம் ஒப்பந்தம் இச் சபைக்கு வரைவிலக்கணம் கூறவில்லை. உள்ளூராட்சி அமைப்பு பற்றிச் சொக்ஸி ஆணைக்குழுவின் அறிக்கையில் கண்டிருப்பது போன்று ஒரு அமைப்பே இது என்று சிங்கள மக்கள் கருதுகிறார்கள். அதாவது, பல உள்ளூராட்சி மன்றங்களின் இணைப்பான ஒரு நிறுவனத்தை ஏற்படுத்தி, உள்ளூராட்சி அடிப்படையை மாகாண நிலைக்கு உயர்த்துவதே "பிரதேச சபை." குறிப்பிடத் தக்க அதிகாரம் எதுவுமற்ற ஒரு நிறுவனமே இது என்பதே சிங்கள மக்களின் கருத்து. ஆனால் தமிழரசுக் கட்சி இப்படிக் கருதவில்லை. இவர்களைப் பொறுத்த வரை பிரதேச சபை என்பது இணைப்பாட்சித் தத்துவத்தில் ஒரு அங்கமாகவே தெரிகிறது. வடக்குக் கிழக்கு மாகாணத்தைப் பொறுத்த வரை பிரதேச சபை இணைப்பாட்சியிலும் கூடிய அதிகாரங் கொண்ட ஒரு நிறுவனம். இந்த வியாக்கியானம் பற்றி யாருக்கும் சந்தேகமா? அப்படியானால் சமஷ்டிக் கட்சியின் தமிழ்ப் பெயரை கவனியுங்கள். "தமிழரசுக்" கட்சி என்றால் "தமிழ் அரசாங்கக்" கட்சி என்றே பொருள். எனவே 'பிரதேச சபைகள்' அமைப்பதென்றால் மத்திய அரசாங்கத்தின் அதிகாரங்களில் குறிப்பிடக் கூடிய அளவை இந்தப் பிரதேச "அரசாங்கத்"திற்கு மாற்றுவது என்றே பொருள்.

(11ம் பக்கம் பார்க்க)

ஆங்கிலம்

ஆங்கிலம் அழகாகப் பேச, வாசிக்க, எழுத ஆறே மாதங்களில் படிக்க விரும்பினால் இலவச விபரங்களுக்கு எழுதுக.

அற்லஸ் ஹோல்,
த. பெட்டி: 649,
கொழும்பு.

இளங்கோ மன்றம் நடாத்தும்

பால பண்டித வகுப்பு

இடம்:- இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலை

ஆரம்பம்:- 12-6-60 ஞாயிற்றுக்கிழமை.


தொடர்ந்து ஒவ்வொரு சனி, ஞாயிறு கிழமைகளில் நடைபெறும்.

விபரங்களுக்கு, கீழ்காணும் முகவரிகளில் அறியவும்.

செ. சோதிப்பெருமாள்,
ஆசிரியர்,
சைவப் பிரகாச வித்தியாசாலை,
இணுவில்.

இரா. வி. வேலுப்பிள்ளை,
செயலாளர்,
இளங்கோ மன்றம்,
இணுவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வசிகரணக் கற்பழிவு (Seduction)

திரு. எஸ். சபாபதிப்பிள்ளை
M. A., LL. B. (Lond) F. R. A. S., B -at-Law
இலங்கை சட்டக்கல்லூரி, தொழில் நுட்பக் கல்லூரி விரிவுரையாளர்
வருமானவரி பரிசீலனைக் குழு சட்ட ஆலோசகர்

மனித சமுதாயம் துவங்கிய காலம்தொட்டு பழங்குடி மக்களிடையேயும் நாகரிகமடைந்த மக்களிடையேயும் கற்பு என்னும் பண்பு எப்பொழுதும் இருந்தே வருகிறது. கற்பு நிலை என்பது சமுதாயத்தால் ஒத்துக்கொள்ளப்பட்ட அல்லது சட்டரீதிக்கு அமையப்பட்ட இல்லற வாழ்க்கைக்குள் அமைய காம இன்பங்களை அனுபவிப்பதாகும். சில சமுதாயத்தார் ஆண் பெண் இருபாலாரும் ஒரே விதிக்கு அமைந்தே தங்கள் சிற்றின்ப போகத்தை நடாத்த வேண்டுமெனும் கோட்பாட்டை அமைத்திருப்பர். சில சமுதாயத்தார் ஆண்களுக்கு ஒரு அகன்ற விதியும் பெண்களுக்கு மிகக் கட்டுப்பாடான விதியும் வகுப்பர். உதாரணமாக சில சமுதாயச் சட்டங்களில் பெண் வியபிசாரம் செய்தால் எப்பொழுதும் புருஷன் அவளை விவாகத்திலிருந்தும் விலக்க இடம் கொடுப்பார்; ஆனால் ஆண் வியபிசாரம்செய்தால் சில குறிக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் மாத்திரம் மணவினை முறிக்கு (Divorce) இடம் கொடுப்பர். இதை 1923ம் ஆண்டுக்கு முன்னுள்ள ஆங்கிலச் சட்டத்திலும் இப்போதும் மேல்நாட்டுச் சிங்களவரின் கண்டியன் சட்டத்திலும் காணலாம்.

## பெண்ணின் கற்பு நிலை

தமிழ் சமுதாயத்திலோ கல்தோன்றி மண்தோன்றாக் காலம்தொட்டுப் பெண்ணின் கற்பு நிலை மாண்பான நிலையென இலக்கியமூலமாயும் லட்சியமூலமாயும் விளக்கப்பட்டுள்ளது. கற்பு என்பது ஒரு பெரிய ஆபரணமாகத் தமிழ் மகளிர் கருதினர். அதுவுமன்றி கற்பு நிலை மனநிலையில்கூடத் தங்கியிருப்பதற்குச் சான்றாக சாவித்திரி தன் மனதில் பதித்த கணவனை முடியாத நிலையை கற்புக்குப் பங்கமான நிலையெனக் கருதுவதாக இலக்கிய வாயிலாக ஒவ்வொரு தமிழ் மகளும் அறியும்படி உணர்த்தியிருக்கிறார்கள். திருவள்ளுவரே கற்பு நிலையைப்பற்றி எவ்வளவோ கூறியுள்ளார். கற்பழிதலிலும் பார்க்க உயிர்விடுவதே சரி என்பதே ஒவ்வொரு தமிழ் மகளுக்கும் தாய்ப்பாலுடன் ஊட்டப்பட்ட பண்பு.

## கற்பழிதல் இருவகை

இனி இலங்கைச் சட்டத்தில் கற்பழிதலைப் பற்றிய விவரத்தை ஆராய்வோம். கற்பழிதல் இருவகைப்படும். ஒன்று வலோற்காரக் கற்பழிப்பு (Rape) மற்றது வசிகரணக் கற்பழிப்பு(Seduction). ஒரு பெண்ணின் விருப்பத்துக்கு மாறாகவும் அல்லது பன்னிரண்டு வயதுக் குட்பட்ட இளம் பெண்ணை அவள் விருப்பத்துடன் தானும் கற்பழித்தல் வலோற்காரக் கற்பழிவெனக் கருதப்பட்டு அதற்கு மறியல் தண்டனை கொடுக்கப்படும். மற்றைய கற்பழித்தல் பெண்ணின் விருப்பத்துடன் நடந்த போதிலும் அது ஒரு நட்ட ஈட்டுக் குற்றமாகும். அதை நடத்திய ஆடவன் நட்ட ஈடு கொடுக்க நேரிடும். இது பெரும்பான்மையான சட்டங்களில் இடம் பெற்றாலும் நட்ட ஈடு பெறும் கொள்கை ஒவ்வொரு சட்டத்திலும் வித்தியாசமானது.

## ஆங்கிலச் சட்டத்தில்

உதாரணமாக ஆங்கிலச் சட்டத்தில் வசிகரணக் கற்பழித்தல் (Seduction) ஒரு நட்ட ஈட்டுக் குற்றமாகக் கருதப்பட்டாலும் அதன் குறிக்கோள் எஜமானரின் சேவை நட்டம் (Master's loss of service) எனக் கருதப்படுமொழிய பெண்ணின் கற்பு நிலை கெட்ட நிமித்தமல்ல. இதற்குச் சான்று யாதெனில் ஒருவர் தன் மகளை ஒரு எஜமானிடம் வேலைக்கு விட்டிருக்கும் காலை அவளின் கற்பழிந்தால் அதற்கு எஜமான் நட்டம் கோரலாமே தவிர, தகப்பன் அல்லது தாய் கோர முடியாது; அதுவுமன்றிக் கற்பழிந்த பெண் கூடத் தன்னை இந்நிலைக்குக் கொண்டு வந்தவரிடம் ஏமாந்த பின் நட்டம் கோரி வழக்கு வைக்க முடியாது.

## இலங்கைச் சட்டம்

இதற்கு எதிர்மாறானது எங்கள் சட்டம். இது பொதுச் சட்டம் இலங்கைமுழுவதற்கும் ஏற்பட்ட சட்டம். எங்கள் சட்டம் கற்பு நிலையையே அடிப்படையாகக் கொண்டுள்ளது. முதலாவதாக கற்பழிக்கப்பட்ட பெண் தன்னைக் கற்பழித்தவன் மணம் செய்ய மறுக்கும் கால் அவனிடம் தான் அடைந்த இழி நிலைக்கேற்ற நிவாரணம் பெறும் முகமாக நட்ட ஈட்டு வழக்கு வைத்து நட்டம் கோரலாம். நட்டம் எவ்வளவு என்பதைத் தீர்க்கும் பொழுது நீதிபதி அவளின் குலம், அவளுக்கு அச் செயலால் இனி விவாகத்துக்கு வரும் இடையூறு, அவளின் மனச் சஞ்சலம் யாவும் சீர்தூக்கிப் பார்த்தே நட்டம் தீர்ப்பர். இந்நிலையில் அவளின் அந்தஸ்துக்கு எற்றபடி விவாகம் முடிக்க எவ்வளவு கூடிய சீதனம் வேண்டுமோ அவ்வளவும் நட்டத்தின் அளவையாகும்.

கற்பு நிலை தான் எங்கள் சட்டத்தில் இவ்வித வழக்குக்கு அடிப்படை என்பதற்கு இன்னொரு சான்று யாதெனில் முன் கற்பழிந்த பெண்ணாகுதல் அல்லது விதவையாகுதல் இவ்வித வசிகரண கர்பழிதல் வழக்கு வைக்க முடியாது. மேலும் பெண்ணின் தகப்பனும் [illegible] செயலால் வந்த அவமானத்தினால் ஏற்பட்ட நட்டத்தையும் பெண் கோரும் நட்டத்தில் சேர்த்துக் கொள்ளலாம்.

## வித்தியாசம்

எங்கள் சட்டத்தில் பெண் கற்பழிந்த செயல் மாத்திரமே நட்ட ஈட்டுக்குப் போதுமானது. ஆனால் ஆங்கிலச் சட்டத்திலோ அப்பேர்ப்பட்ட பெண், பிள்ளைப் பேற்றினால் அல்லது வேறு காரணத்தினால் பெலவீனப் பட்ட அக்காரணம் பற்றித் தன் எஜமானருக்கு அல்லது எஜமானிக்குச் செய்ய வேண்டிய சேவை செய்ய முடியாத நிலையே ருசுப்படுத்த வேண்டிய நிலையாகும். இங்கும் எஜமான சேவையாளத் தொடர்பே முன்னிற்கிறது. இதை யொட்டியே ஆங்கிலச் சட்டத்தில் தகப்பன் தாய் கூடச் சில சந்தர்ப்பங்களில் நட்டஈடு கோரலாம். அதாவது மகள் தங்களுடன் இருந்து தங்களுக்கு யாது சிறிய சேவையாயினும் புரிந்துள்ளாள் என்று ருசுப்படுத்த வேண்டும். இது ஒரு சம்பிரதாயம்; ஏனெனில் அவள் தேநீர் தானும் வைப்பதற்கு உதவியாயிருந்தாளென்பதே போதுமான சேவையாகும்; அப்படியாயின் அவர்கள் தங்களுக்கு ஏற்பட்ட சங்கை நட்டத்தையும் சேர்க்கலாம்; எனினும் மேற்கூறியபடி கற்பழித்தல் மாத்திரம் காணாது; சேவை செய்யும் நிலை கெட்டது எனக் காட்ட வேண்டும்.

## ஒரு வழக்கில் தீர்ப்பு.

இதனால் அறியக்கிடப்பது யாதெனில் ஒவ்வொரு சமுதாயமும் தங்கள் கற்பு நெறியின் மாண்பை யொட்டியே தங்கள் சட்டத்தை வகுத்துள்ளார்கள் என்பதே. ஆங்கில வழக்கொன்றில் ஒரு பெண் எஜமானிடம் வேலை பார்க்கும் காலத்தில் இடைக்கிடை தன் தாயகம் போய் வந்தால் அப்படி இருக்கும் நாட்களில் தாயகத்திலேயே கற்பழித்தல் நடந்தது, அச் சந்தர்ப்பத்தில் கூட எஜமானே அந்நட்டத்துக்கு வழக்கு வைக்கலாமெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

## ஆணுக்கு ஒரு விதி பெண்ணுக்கு ஒரு விதி

இவ்வுதாரணங்கள் காட்டுவது யாதெனில் இலங்கைப் பெண்கள் கற்பு நிலையையும் அதுவும் தமிழ் மகள் தன் கற்பை யெவ்வளவு ஆபரணமாகக் காக்க வேண்டுமென்பதையும் உணர்ந்து தங்கள் வாழ்க்கையை சாவித்திரியின் வாழ்க்கை யிலக்கியத்துக் கேற்ப நடத்த முயல வேண்டும். அதுவும் இந்த நவநாகரிக காலத்தில் ஆடம்பர வாழ்க்கையின் மத்தியில் ஆடவரோடு சரிசமனாகவும் நெருக்கமாகவும் பழகும் இளம் கன்னிகள் இதை ஒரு குறிக்கோளாக வைத்து தங்களினத்துக்குப் பங்கம் வராமல் காப்பாற்ற வேண்டும். இப்பண்பைத் தாய்மார்களே தங்கள் நடத்தையாலும் தங்கள் போதனையாலும் இளம் சிறுமிகளுக்குக் கற்பித்தால் மேற் கூறப்பட்ட சந்தர்ப்பமும் நேரிடாது. நீதிமன்றத்துக்கு நிவாரணம் தேடியும் செல்லத் தேவையில்லை. ஒரு பெண்ணினால் வசிகரிக்கப்பட்ட ஆடவன் தன் நடத்தையையிழந்த பிறகு அப்பெண்ணிடம் நட்டஈடு கோர முடியாது என்பதிலிருந்து ஆணுக்கு ஒரு விதியும் பெண்ணுக்கு ஒரு விதியும் என்பதைக் காட்டுகிறது. அதுவும் சமுதாயம் தங்கள் பெண்களை என்ன வித ஆபரணங்களாக மதித்தனர் என்பதைக் காட்டுகிறது.

# செட்டிகுளத்தில்....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் தமிழரசுக் கொடிகளைத் தாங்கிய வண்ணம் ஊர்வலத்தில் கலந்து சென்ற காட்சியை, பிற ஊர்களில் இருந்து வந்த மக்கள் ஆச்சரியத்தோடு பாராட்டினார்கள். சுமார் இரு மைல் தூரம் ஊர்வலமாகச் சென்ற பின், தமிழ் அரசுத் தந்தை செட்டிக்குளம் தமிழரசுக் கிளைக் காரியாலயத்தைத் திறந்து வைத்தார்.

## மாபெரும் கூட்டம்

இரவு 7-30 மணியளவில் செட்டிக்குளம் புகையிரத நிலையத்தின் அருகாமையிலுள்ள மைதானத்தில், வவனியாத் தொகுதியின் பாராளுமன்றத் தேர்தலில் தமிழரசுக் கட்சியின் அபேட்சகராகப் போட்டியிடும் திரு வின்சென்டை ஆதரித்து, திரு பொ. செல்வநாயகம் தலைமையில் ஒரு மாபெரும் கூட்டம் நடைபெற்றது.

“தமிழர்களைப் பிளவுபடுத்தி, யாழ்ப்பாணத் தமிழர் வன்னித் தமிழர் என்று ஒருதேவையற்றபிரச்னையை சிலர் கிளப்பி விட்டு, தேர்தல் வேட்டைக்காக மக்களைக் கூறுபோடுகிறார்கள். இந்தச் சூழ்ச்சியை மக்கள் [illegible]முடன் உற்று நோக்கிச் செயலாற்ற வேண்டும்” என்று கூட்டத் தலைவர் கூறினார்.

மற்றும் சாவகச்சேரி மாஜி எம். பி. திரு வி. என். நவரத்தினம், சிறு கதை எழுத்தாளர் திரு எஸ். எல். சவுந்தரநாயகம், ஜனாப் முத்து ராஜா, திரு ஐயம் பிள்ளை, திரு அருணப்பு ஆசிரியர், தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகம், திரு. எஸ். சுப்பிரமணியம் (வவனியா பட்டினசபைத் தலைவர்) ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள்.

—தமிழ்ச் செல்வன்


## கல்முனையிற் கண்ணகி விழா

கல்முனைக் கண்ணகி அம்மன் ஆலய முன்றலில் அணிமையில் கண்ணகி விழா ஆரம்பமானது. விழாவிற்குக் கோயில் வண்ணக்கர் தலைமை தாங்கினார்.

‘கற்பரசி கண்ணகி’ என்ற தலைப்பின் கீழ் பண்டிதர் ம. நாகலிங்கம் ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினார்.

கூட்டத்திற்கு ஆண்களும் பெண்களுமாக அநேகர் சமுகம் கொடுத்திருந்தனர்.

நன்றியுரையுடன் கூட்டம் இனிது நிறைவேறியது.

திறமாக நீர்ப்பாய்ச்சுவதற் குகந்த நம்பிக்கைவாய்ந்த பம்ப்

விங்கெட்

நிர்மாண இயந்திரங்கள் உற்பத்திசெய்யும் உலகப்பிரசித்திபெற்ற மெஸர்ஸ் விங்கெட் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் தயாரிக்கப்பட்ட இந்த அடக்கமான, உறுதிவாய்ந்த தண்ணீர் பம்ப்கள், அதிககாலம் [illegible] சேவையைத் தருகின்றன.

இவற்றின் பராமரிப்புச் செலவு மிக மிகக் குறைவு. மிகப் போட்டா போட்டி விலைகளில் கிடைக்கும். வில்லியர்ஸ் 4 ஸ்ரோக் பெற்றோல்/மண்ணெண்ணெய் என்ஜின்கள் பாவனைக்கு ஏற்ற சிக்கனமானவை. எம்மிடம் அவற்றில் பலரக [illegible] உள்ளன. [illegible] குழாய்களும். கை கருவிகளும் கிடைக்கும்.

உப விநியோகஸ்தர்கள்:
ராஜநாதன் அன் கம்பெனி, 244, கே. கே. எஸ். ரோடு, யாழ்ப்பாணம்.

முழு விபரங்களுக்கு எங்களை விசாரிக்கவும்:
தி கொழும்பு கொம்மேர்ஷியல் கம்பெனி லிமிட்
(பெரிய பிரித்தானியாவில் இணைக்கப்பட்டது அங்கத்தவர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது)
தபாற்பெட்டி 33, கொழும்பு
காட்சியறை: ஜெனரல் லேக்ஸ்ரோட்
போன்: 78801.

உயர்ந்த சேவை
1½" மொடல்-மணித்தியாலம் 1500-6000 கலன் இறைக்கிறது.
2" மொடல்-மணித்தியாலம் 1680-11000 கலன் இறைக்கிறது.
3" மொடல்-மணித்தியாலம் 4300-16800 கலன் இறைக்கிறது.
டிலிவரிக்கேற்ப ஹெட்டும், சக்ஷன் லிவ்ட்டும் தேவை
ஆகக் கூடுதல் முழு ஹெட் 70 அடி
ஆகக் கூடுதல் சக்ஷன் லிவ்ட் 25 அடி

எமது பிரதிநிதியை விசாரிக்கவும்:
எம். பூபாலசிங்கம், 244, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். போன்: 57


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுபான்மைத் தமிழரின் வாக்குகள் யாருக்கு?

## தீண்டாமையை ஒழித்து சமூக அரசியல் விடுதலைக்கு வழி செய்யும் தமிழரசுக் கட்சிக்கே

## காங்கிரஸ் எட்டப்பர்கள் கட்சி யு.என்.பியின் முகமூடி-தேவையில்லை

### மார்க்ஸீயக் கட்சிகளை இனியும் நம்பினல் நமது அறிவு சூனியமாகிவிட்டது என்று பொருள்

நடந்த தேர்தலில் இலங்கையில் ஓர் உறுதியான அரசாங்கம் அமைப்பதற்கு தமிழினத்தின் ஒத்துழைப்பு வேண்டியிருந்தது. தமிழினத்தின் நியாயமான கோரிக்கைகளை அளிக்க விரும்பாததால் சிங்கள அரசியல் கட்சிகள் தமிழ் பிரதிநிதிகளின் ஒத்துழைப்பைப் பெற்று ஓர் உறுதியான அரசாங்கத்தை அமைக்க முடியாமல் மறுதேர்தலுக்குப் போக வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளாகியிருக்கின்றன.

வரப்போகும் தேர்தலிலும் எந்த ஒரு சிங்களக் கட்சியும் தமிழினத்தின் உதவியின்றி நிலையான அரசாங்கத்தை அமைக்க முடியாத நிலை யேற்படலாம். இது போன்ற தருணங்களில் தமிழினம் செய்ய வேண்டியது என்ன?

கொள்கையும், கட்டுப்பாடுமற்ற சுய—இச்சைகளையும், பதவிப் பித்தர்களையும், இனத் துரோகிகளையும் தெரிவு செய்யாது, கட்டுப்பாடாக ஒரு கட்சியின் கீழ் உறுதியுடன் நின்று செயலாற்றக் கூடியவர்களைத் தெரிவு செய்தனுப்புவதே சாலச் சிறந்ததாகும்.

### ஒற்றுமை வேண்டும்

சிங்கள அரசிடம் உரிமை பெற தமிழ் பிரதிநிதிகளிடம் எவ்வளவு ஒற்றுமை வேண்டுமோ, அதை விடப் பெரிய ஒற்றுமை அவர்களைத் தெரிவு செய்யும் தமிழ் மக்களிடம் வேண்டும். உறுதியான அரசமைக்க எப்படித் தமிழ்ப் பிரதிநிதிகளின் ஒத்துழைப்பு வேண்டுமோ, அதைப்போல் ஒரு கட்சியின் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்வதற்கும் சிறுபான்மைத் தமிழரின் ஒத்துழைப்பு மிக மிக அவசியமாகும்.

தமிழினம் ஒன்று பட்டுச் செயல்படாது, சிறுபான்மைத் தமிழர் பிரிந்து நின்று தேர்தலில் வேலைசெய்தால், மாறுபட்ட கருத்துக் கொண்ட பிரதிநிதிகள் பாராளுமன்றம் செல்லநேரிடும். அதனுல் உரிமைப் போர் வெற்றி பெறுவது கால தாமதமாகலாம். சிறுபான்மைத் தமிழர் இனத் துரோகிகளாக மாறினல் தமிழினமே பூண்டோடு ஒழிக்கப்படலாம்.

### சிறுபான்மைத் தமிழர் யார்?

சிறுபான்மைத் தமிழர் என்ருல் யார்? பிறப்பால், இனத்தால், மொழியால், பண்பாட்டால் தமிழர். ஆனல் மாற்ருன் புகுத்திய வர்ணுசிரமத்தால் வந்த வினை தமிழினத்திடையே ஏற்றத் தாழ்வுகளைப் புகுத்தி, சிறுபான்மைத் தமிழர்களைத் தாழ்த்தப்பட்டவர்களாக, தீண்டத் தகாதவர்களாகத் தள்ளி வைத்து விட்டது.

தமிழினத்திடையே ஏற்பட்ட இந்தப் பிளவினுல் இன்று சிறுபான்மைத் தமிழரின் வாக்கு யாருக்கு என்ற வினு வெழுப்ப வேண்டிய நிலையேற்பட்டிருக்கிறது. இந்தக் கேள்வி இனிமேலும் தமிழினத்திடையே எழத்தான் வேண்டுமா? உயர் சாதி என்று தங்களைக் கருதிக் கொள்வோர் இதை விரும்புகிருர்களா? இது போன்ற கேள்விகள் தோன்றுவதை இனிமேலும், தங்களை உயர் சாதி என்று கருதுவோர் விரும்புவார்களேயானுல், அவர்கள் தங்களுடைய அறியாமையினுல் தமிழினத்திற்கே அழிவு தேடிக்கொண்டவராவர்.

வரப்போகும் தேர்தல் தான் இதுபோன்ற கேவலமான கேள்விகளுக்கு இடமளிக்கும் இறுதித் தேர்தலாயிருக்க வேண்டும். அதன் பின் வரும் தேர்தல்களில் இதுபோன்ற கேள்விகளே இருக்கக்கூடாது. அப்படியென்ருல் இன்னும் நீண்ட காலத்திற்கு தமிழரிடையே சாதி—மத ஏற்றத் தாழ்வுகள் இருக்கக் கூடாது என்று அர்த்தம்.

சிறுபான்மைத் தமிழர் என்றுகூறப்படும் நாமென்ன தமிழ் மொழிப்பற்று, இனப் பற்று, நாட்டுப்பற்று இல்லாதவர்களா? எமது மொழி எமது இனம், எமது நாடு என்ற பற்று உயர்சாதி மக்களென்று தங்களைக் கூறிக் கொள்பவர்களிடம் இருப்பதை விட எங்களிடம் மேலாக இருக்கிறதென்ற உண்மையை நான் உறுதியுடன் கூற முடியும். கொடுமைகளுக்கு மேல் கொடுமை செய்தால் சில சமயம் நல்லவனும் கெட்டவனுக மாறக் கூடும். அதுபோலு சிறுபான்மைத் தமிழராகிய எங்களுக்கும் அநீதிகளுக்கு மேல் அநீதிகள் இழைக்கப்பட்டால், உரிமைகள் மறுக்கப் பட்டால் எங்களிற் சிலர் துரோகிகளாகவும் மாறக் கூடும். இந்த நிலை இந் நாட்டில் ஏற்படக் கூடாது. ஏற்படுவதை எந்தத் தமிழ் மகனும் விரும்பமாட்டான்.

### போட்டி

தமிழரசுக் கட்சி இருபத்தொரு தொகுதிகளிலும், தமிழ் காங்கிரஸ் பத்துத் தொகுதிகளிலும், சமசமாஜியும், பொதுவுடமைக் கட்சியும் இரண்டு மூன்று தொகுதிகளிலும் போட்டியிடுகின்றன. சிங்களம் மாத்திரம் என்ற கொள்கையுடைய கட்சிகள் கிலகிழக்கு மாகாணத்தில் போட்டியிடுகின்றன. இந்தக் கட்சிகளுள் எந்தக் கட்சிக்கு சிறுபான்மைத் தமிழராகிய எங்களுடைய வாக்குகள் என்ற பிரச்னையே இன்று தோன்றியிருக்கிறது. இக் கட்சிகளில் எந்தக் கட்சியினுல் எம்முடைய பிரச்னையைத் தீர்க்க முடியுமென்பதை ஆராய்ந்தே நம்முடைய ஆதரவை அவர்களுக்கு அளிக்க வேண்டும்.

தனிச் சிங்களம் என்ற கொள்கையுடைய கட்சிகளுக்கு எங்களுடைய ஆராய்ச்சியில் இடமேயில்லை. அந்தக் கட்சிகளுக்கு தமிழினத்தின் நலனில் அக்கறையில்லை. ஆகையால் அவர்களுக்கு எங்களுடைய வாக்குகளைக் கொடுப்பதென்ற பிரச்னைக்கே இடமில்லை.

### தமிழ்க் காங்கிரஸ்

தமிழ்க் காங்கிரஸ், இது துரோகி பொன்னம்பலனின் தலைமையில் எட்டப்பர்கள் கூடிப் போட்டியிடும் ஒரு கட்சி. பட்டம், பதவி பெறுவதற்காக இனத்தைக் காட்டிக் கொடுப்பதே இக் கட்சி தமிழினத்திற்குச் செய்த சேவை. [illegible] கட்சியிலுள்ள, [illegible] சிறுபான்மைத் தமிழரைப் பற்றி அக்கறையேயில்லை. தமிழினத்திடையே ஒற்றுமையின்மையை உண்டாக்க விரும்பும், ஐக்கிய தேசியக் கட்சியின் தூண்டுதலால் தான் இவர்கள் அதைப் பின்னணியாகக் கொண்டு காங்கிரஸ் என்ற முகமூடியுடன் போட்டியிட வந்திருக்கிருர்கள். ஆகையால் இவர்களை ஒரு கட்சியென்று கருதி நம் ஆராய்ச்சியில் சேர்க்கவேண்டியதேயில்லை. இவர்கள் தங்களுடைய முடிவை இப்பொழுதே தெரிந்துகொண்டிருப்பார்கள்!

வளலாயூர்
செ. சிவசம்பு

### மார்க்ஸிஸக் கட்சிகள்

இறுதியாக சமசமாஜி, பொதுவுடமை, தமிழரசு ஆகிய மூன்று கட்சிகளே எஞ்சியிருக்கின்றன. பொதுவுடமைக் கட்சியும், சமசமாஜக் கட்சியும் சிங்களவர்களையே தலைவர்களாக உடையவை. இந்த இரண்டு கட்சிகளும் ஒற்றையாட்சியின் கீழ் ஐக்கிய இலங்கையை உருவாக்கப் போவதாகக் கூறிக் கொள்ளுகின்றன. இந்த இரண்டு கட்சிகளும் சில காலங்களுக்கு முன் தமிழிற்கும், சிங்களத்திற்கும் சம அந்தஸ்து என்று கூறிக் கொண்டு வந்தன. சம அந்தஸ்து என்று இவர்கள் வாயளவில் கூறினுலும் இவர்களுடைய உள்ளக் கிடக்கை ஒரு மொழி இலங்கைதான்.

### சிங்களத்துக்கு சார்பு

சிங்களந் தான் இந் நாட்டின் அரசாங்க மொழியென்ற இவர்களுடைய கொள்கையை இவர்கள் பலாத்காரமாகத் தமிழருடைய தொண்டைக்குள் திணிக்க விரும்பவில்லை. ஆனல் வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல் மெல்ல மெல்ல, சம அந்தஸ்து என்று கூறி தமிழருக்குச் சிங்களத்தை போதித்த பின், எல்லோருக்கும் சிங்களம் தெரியுந்தானே, சிங்களம் அரசாங்க மொழியாக இருப்பதில் யாருக்கும் தீங்கில்லையென்று கூறிச் சிங்களத்தையே இந் நாட்டின் ஒரே மொழியாக்குவதே இவர்களுடைய கொள்கை. இந்த நயவஞ்சகக் கும்பலை தமிழினம் நம்பலாமா?

### குடியேற்றத்திலும் கேடு

இலங்கையை ஒரு சிங்கள நாடாக்குவதற்கு இவர்கள் அடுத்து எடுக்கும் நடவடிக்கையை தமிழ் நாட்டில் சிங்களவர்களைப் பெரும்பான்மையாக அரசாங்க உதவியுடன் குடியேற்றல், திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தைத் தமிழினத்தின் முதல் விரோதியான டி.எஸ். சேனநாயக்கா கொண்டு [illegible] இன்று டட்லி, கொத்தலாவலை, பண்டாரநாயக்கா போன்றவர்கள் நிறைவேற்றி வைத்தார்கள். இதை இந்த இரண்டு கட்சிகளும் எதிர்க்கவில்லை. தாங்கள் வந்தால் இதுபோன்று பெரும்பான்மையாகச் சிங்களவரைக் குடியேற்ற மாட்டோமென்று கூறுகிருர்கள். அன்று இத் திட்டத்தைக் கொண்டுவந்த பொழுது தமிழருக்கு நன்மை செய்வதாகவே சேனநாயக்காவும் கூறினுர். ஆனல் அவரே தமிழினத்தின் முதல் விரோதியானுர். பதவி மோகத்தால் சம அந்தஸ்து என்ற வார்த்தையையே தங்கள் கொள்கைப் பிரகடனத்திலிருந்து நீக்கிவிட்ட இவர்களை நாம் நம்பலாமா?

### தொழிலாளர் தோழர்களா?

பட்டாளி வர்க்கத்தின் இரட்சகர்கள் தாங்கள் தான் என்று தம்பட்டமடிக்கிருர்கள் இந்த இருகட்சியினரும். பொதுவுடமைச் சமுதாயம் படைக்க உலகத் தொழிலாளரே ஒன்று படுங்கள் என்று கூக்குரலிடுகிருர்கள். அகில உலக அடிப்படையில் தங்கள் சிந்தனையைச் சிதற விடும் பரந்த நோக்குடைய இத் தொழிலாளி வர்க்கத்தின் பிரதிநிதிகள், இதுநாள் வரையும் நம் நாட்டின் நலத்திற்காக உதிரஞ்சிந்தி மாடாக உழைத்து ஓடாகத் தேய்ந்து விட்டதேயிலை, இரப்பர் தோட்டத் தமிழ்த் தொழிலாளருக்குச் செய்ததென்ன? கூலி வேலை செய்யும் ஏழைத் தொழிலாளரின் குடியுரிமையைப் பறித்தார்களே முதலாளிகள், அப்போது என்ன செய்தார்கள் இந்தப் பாட்டாளிகளின் தோழர்கள்?

### தோட்டத் தொழிலாளருக்கு செய்தது என்ன?

கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாய் குடியுரிமையற்ற அனுதைகளாய், அரசியல் அடிமைகளாய் அல்லலுறும் தமிழ் தொழிலாளி வர்க்கத்தின் துயர் துடைக்க என்ன செய்தார்கள்? உலகத் தொழிலாளி வர்க்கத்தின் துயர் துடைக்கப் போகிறோம் என்று நீங்கள் கேவலம் இந்தச் சின்ன இலங்கையில் பத்து லட்சம் தமிழ் பாட்டாளி வர்க்கத்தின் துயர் துடைக்க ஏன் ஒரு சிறு போராட்டம் தானும் இது நாள் வரையுந் தொடங்கவில்லை. உண்மையில் நீங்கள் இன, மத, மொழி பேதமற்ற உலகத் தொழிலாளி வர்க்கத்தின் தோழர்களாயிருந்தால் தமிழ் தொழிலாளர்களின் துயர் துடைக்க ஏன் முன்வரவில்லை?

### சிங்களத் தொழிலாளர் தோழர்கள்!

இதிலிருந்தே நீங்கள் உலகத் தொழிலாளரின்தோழர்கள் அல்லர், சிங்களத் தொழிலாளர்களின் தோழர்கள் தான் என்பதை எடுத்துக் காட்டி விட்டீர்கள். தமிழ் தொழிலாளர்களை ஏமாற்றிப் பதவிக்கு வரத் திட்டமிட்டீர்கள். ஆனல் பரிதாபம் நீங்களே ஏமாந்து விட்டீர்கள். நமது தமிழ் நாட்டிலுள்ள தொழிலாளி வர்க்கத்தின் தோழர்களுக்குக் கூறுகிறேன்—இனியும் பசுத்தோல் போர்த்த புலிகளாகிய இந்த இரு கட்சிகளையும் நம்பி ஏமாருதீர்கள். உண்மையில் நீங்கள் தமிழ்ப் பாட்டாளி வர்க்கத்தின் பிரதிநிதிகளாயிருந்தால் இந்தக் கட்சிகளிலிருந்து உடனே வெளியேறுங்கள்.

### இனி நம்பினுல் அறிவுச் சூனியம் ஆகும்

இந்த இரு கட்சிகளிலுமுள்ள தமிழ்த் தொழிலாளர்களின் தலைவர்களே! நீங்களும் ஏமாந்து, தமிழினத்தையும் ஏமாற்ற முயலாதீர்கள். இந்த இரு கட்சியிலும் தமிழர் சிங்களவர் என்ற வகுப்புவாதம் இல்லையென்று கூறுகிறீர்களே, அப்

(11-ம் பக்கம் பார்க்க)


ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ANANDA MEDICAL HALL TRADE MARK 174, SEA STREET, COLOMBO

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து, அசதி, சோம்பல், மேல், கால், கைகணுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சில காலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரிது ரூ. 5-75. சிறியது ரூ. 3-00.

இத்துடன், "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினுல் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூ. 5-50. சிறியது ரூ. 3-00.
வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:-
ஆனந்தா வைத்தியசாலை,
நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN
1960 ஜூன் மாதம் 26-ந் தேதி
194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு - 12.
தொலை பேசி எண் : 3411. த. பெ. 1183

# பெரமுனையின் விஷத் திட்டம்

நாட்டிலே சட்டத்தையும், ஒழுங்கையும், சமாதானத்தையும், கட்டுப்பாட்டையும் நிலைநாட்டக்கூடிய ஒரு ஸ்திரமான அரசாங்கத்தை அமைப்பதற்காக எதிர் வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடுகின்றதாம் ஐக்கிய தேசியக் கட்சி!

ஆஹா, கேட்பதற்கு எவ்வளவு இனிமையாக, படிப்பதற்கு எவ்வளவு அழகாக இருக்கிறது ஐக்கிய தேசியக் கட்சியின் மேற்படி இலட்சியம்!

ஆனால், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர்—நாட்டின் இடைக்காலப் பிரதமர்—திரு டட்லி சேனநாயகா என்ன காரியம் செய்கின்றார்? தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் தமிழ் மக்களுக்கு எதிராக அவர் கக்கும் கீழ்த்தரமான வகுப்புத் துவேஷத்தையும், பூதாகாரமாகத் தூண்டிவிடும் இன வெறியையும் பார்க்கும்போது நாட்டிலே சட்டத்தையும், ஒழுங்கையும், சமாதானத்தையும், கட்டுப்பாட்டையும் நிலைநாட்டுவது அல்ல அவருடைய புனித நோக்கம் என்பது தெற்றெனப் புலனாகிறதல்லவா?

அப்படியானால் அவர் நோக்கந்தான் என்ன? எதிர் வரும் பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி பரிபூரண பெரும்பான்மைப் பலம் பெறுவதென்பது நடக்காத காரியம் என்ற கலப்பற்ற உண்மையை திரு டட்லி நன்கு உணர்ந்துகொண்டார்.

எனவே, இறுதி முயற்சியாக, இன வெறியைத் தூண்டியாவது சிங்களப் பொதுமக்களை அறிவு மயங்கச் செய்து, மனித மிருகங்களாக்கி, வாக்குகளைச் சூறையாடித் தேர்தலில் வென்றுவிடலாமா? பெரும்பான்மை பெற்றுவிடலாமா? பிரதமர் ஆகிவிடலாமா என்று அவர் அங்கலாய்க்கிறார்!

இந்த அற்பத்தனமான ஆசை நிறைவேறுவிட்டால், நாட்டில் குழப்பத்தையும், கொந்தளிப்பையும், வகுப்புத் துவேஷத்தையும், இனக் கலவரத்தையும் கட்ட விழ்த்துவிடுவதே அவருடைய அந்தரங்க நோக்கம் என்பது தெட்டத் தெளிவாகத் தெரிகிறது. அதற்கு ஏற்ற சன்னதத்தையும் ஆவேசத்தையும் இப்போதிருந்தே உருவேற்றி வருகிறார் திரு டட்லி.

இத்தகைய வெறியாட்டத்தைத் தூண்டிவிட்ட பின் ஐக்கிய தேசியக் கட்சியல்ல, அதன் அப்பனான ஒரு கட்சி ஆட்சிக்கு வந்தால்கூட நாட்டில் சட்டத்தையும், ஒழுங்கையும், சமாதானத்தையும் நிலைநாட்ட முடியாது என்று திட்டவட்டமாகக் கூறலாம். துவேஷத்தால் பிளவுண்ட சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்குமிடையே திரு டட்லி கனவு காணும் வட்டமேசைகூட ஒட்டுப் பசை பூச முடியாது என்பதை அவர் உணர வேண்டும்.

1958 மே-ஜூன் வகுப்புக் கலவரங்களைப் பின்னால் நின்று தூண்டிவிட்டவர்களும், நடத்தியவர்களும் ஐக்கிய தேசியக் கட்சியினர்தாம் என்று அப்போது சொல்லப்பட்டது. பலர் அதை நம்ப மறுத்தனர்.

'தமிழர்களை வெட்டுங்கள், குத்துங்கள், கொலை செய்யுங்கள்' என்று ஐக்கிய தேசியக் கட்சியின் சிங்களப் பத்திரிகை "சியரட்ட" கட்டுரைகளும் கவிதைகளும் வெளியிட்டுச் சிங்கள மக்களைச் சூக்காட்டியதனாலேயே வகுப்புக் கலவரம் உக்கிரமடைந்தது என்பதைக்கூடப் பலர் ஏற்றுக் கொள்ளத் தயங்கினர்.

ஆனால் இன்று திரு டட்லி நடத்தி வரும் அபாண்டமான வகுப்புத் துவேஷப் பிரசாரத்தையும், சிலோன் டெயிலி நியூஸ், சிலோன் ஒப்சேவர், டைம்ஸ் ஒப் சிலோன் உட்பட ஐக்கிய தேசியக் கட்சிப் பத்திரிகைகள் வெளியிடும் மட்டரகமான கட்டுரைகளையும், கோயபல்ஸ் செய்திகளையும், கூடார்த்த சித்திரங்களையும் பார்த்த பின்னர் தான் பலர் மூக்கின் மேல் விரல் வைத்து அதிசயிக்கின்றனர். இந்த நாட்டில் முதலாம் நம்பர் வகுப்புவாதக் கட்சி ஐக்கிய தேசியக் கட்சி யென்பதையும், இன வெறியர்களின் மாமன்னர் திரு. டட்லி என்பதையும் ஒப்புக் கொள்ளுகின்றனர்!

இத்தகைய நாசகாரத்தனம் நிரம்பிய ஐக்கிய தேசியக் கட்சி இப்போது ஒரு பயங்கரமான புதிய திட்டம் வகுக்கிறது. அது நிறைவேறுமானால் நாட்டில் நிச்சயம் இரத்த ஆறு ஓடும், பலாத்காரம் சுவாலையாகப் பற்றி எரியும், நாடு அல்லோலகல்லோலப்படும் என்பது திண்ணம்.

"கைமுனு பெரமுனை" என்ற பெயரில் குண்டர்கள் படை ஒன்றினை ஐக்கிய தேசியக் கட்சி அமைத்து வருவதாகச் சுதந்திரனில் செய்தி வெளியிடப் பட்டதல்லவா? அந்தக் குண்டர் படையினரைக் கொண்ட இரண்டு மோட்டார் ஊர்வலங்களை நடத்த ஐக்கிய தேசியக் கட்சி திட்டமிடுகிறது.

பண்டாரநாயகா—செல்வநாயகம் உடன்படிக்கையை எதிர்த்து ஐக்கிய தேசியக் கட்சி கண்டி நோக்கி ஓர் ஊர்வலத்தை நடத்தியது யாவரும் அறிந்ததே. அதைப் போலவே இந்த ஊர்வலமும் புறப்பட இருக்கிறதாம்!

ஊர்வலம் போகும் பாதையில் ஆர்ப்பாட்டங்கள் செய்து, கூட்டங்கள் நடத்தி அட்டகாசங்கள் புரிந்து, இன வெறியையும், கட்சி வெறியையும், வகுப்புத் துவேஷத்தையும், வர்க்கத் துவேஷத்தையும் கிளறுவதுதான் இந்த விஷத் திட்டத்தின் குறிக்கோளாகும்.

எனவே, ஊர்வலம் போகும் வழிவழியே மாற்றுக்கட்சி ஆதரவாளர்களுடன், மாற்று மொழி, மாற்று மத அனுதாபிகளுடன் கைகலப்பும், கலவரமும், அடிதடிகளும் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகும்.

ஒரு பொதுத் தேர்தல் நடைபெற இருக்கும் இந்த சமயத்தில் இப்படி ஒரு காரியத்தை அனுமதிப்பது தகுமா என்ற கேள்வி எழுகிறது. இந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டிய கடப்பாடு பொலீஸ் இலாகாவையும், பொலீஸ் தலைவரையும் சார்ந்ததாகும்.

கடந்த வகுப்புக் கலவரத்தின் போது பொலிஸார் தமது கடமையைச் சரிவரச் செய்யவில்லையென்று புகார் செய்யப்பட்டது. இதே புகார் மீண்டும் ஏற்படாமல் இருக்க வேண்டுமானால் "கைமுனு பெரமுனை"யின் இந்த விஷத் திட்டம் முளையிலேயே கருக்கப்பட வேண்டும்.

"தொல்லைகளைச் ... விளைவிப்போரின் கைகளுக்கு ... இடமளிக்க மாட்டோம்" என்று பொலீஸ் மா முதல்வர் சமீபத்தில் பிரகடனம் செய்துள்ளார். அவர் கூற்று செயல்படுமா என்பதைப் பார்க்கத்தான் வேண்டும்.

# சமஷ்டி அரசமைப்பில் வட மாகாண முஸ்லிம்கள் நிலைமை என்ன?

## யாழ்ப்பாணக் கூட்டத்தில் கதிரவேற்பிள்ளை விளக்கம் தந்தார்

"சமஷ்டி அரசமைப்பு முஸ்லிம் மக்களுக்கு ஆபத்தானது என்று ஒரு தப்பான கருத்து முஸ்லிம்களிடையே பரப்பப்பட்டு வருகிறது. சமஷ்டி அரசமைப்பில் முஸ்லிம்களுக்கும் மற்ற இனத்தவர்களுக்கும் மதம், மொழி முதலான விஷயங்களில் அவர்களின் அடிப்படை உரிமைகள் உத்தரவாதத்துடன் வழங்கப்படும். வேலை வசதியும் எதுவித பாகுபாடுமின்றிக் கிடைக்க வழி செய்யப்படும்—" இவ்வாறு யாழ்ப்பாணத் தொகுதியில் தமிழரசுக் கட்சி அபேட்சகராகப் போட்டியிடும் திரு. எஸ். கதிரவேற்பிள்ளை கூறினார்.

அண்மையில் அவரை ஆதரிக்கு முகமாக யாழ் நகர் ஜின்னா மைதானத்தில் நடைபெற்ற கூட்ட மொன்றில் அவர் பேசினார்.

அவர் மேலும் சொன்னதாவது:—

"எங்கள் தலைவரிடம் ஒரு அன்பர் ஒரு கேள்வித்தாள் கொடுத்திருக்கிறார். அதில் உள்ள கேள்விக்கு பதில் அளிக்கும் பொறுப்பைத் தலைவர் என்னிடம் விட்டிருக்கிறார். கேள்வி இது தான்: "சமஷ்டி அரசமைப்பில் வட மாகாண முஸ்லிம்களின் நிலைமை என்ன?"

"இந்தக் கேள்வி முன்னரும் கேட்கப்பட்டுப் பதில் சொல்லியாகிவிட்டது. முஸ்லிம் நண்பர்களுக்கு நான் உறுதி கூறுகிறேன். மற்றச் சிறுபான்மையினருக்கும் சேர்த்துத்தான் சொல்லுகிறேன். ஜனநாயகரீதியான சமஷ்டி அரசமைப்பில் மதம், மொழி முதலான விஷயங்களில் எல்லா மக்களினதும் அடிப்படை உரிமைகள் உத்தரவாதத்துடன் வழங்கப்படும். தொழில் வாய்ப்பும் எது வித பாகுபாடுமின்றி எல்லோருக்கும் கிடைக்க வழி செய்யப்படும். யாருக்கும் இதில் சந்தேகம் வேண்டாம்:"—இவ்வாறு திரு கதிரவேற்பிள்ளை கூறினார்.



திரு. எஸ். கதிரவேற்பிள்ளை

"இதைத் தமிழ் பேசும் மக்கள் நன்கு உணர்ந்துகொண்டதனாலேயே மார்ச் பொதுத் தேர்தலில் வேறு எந்தத் தமிழ் பேசும் மக்கள் கட்சிக்கும் இல்லாத அளவு ஆதரவைத் தமிழரசுக் கட்சிக்கு அளித்தார்கள்; 15 பிரதிநிதிகளைத் தெரிந்து அனுப்பினார்கள்.

"ஒரே கட்சியைச் சேர்ந்த 15 பிரதிநிதிகளை அனுப்பிய தன் பயனையும் அவர்கள் கண்டுகொண்டார்கள். தமிழ் பேசும் பிரதிநிதிகளின் ஆதரவு இல்லாமல் எந்த ஒரு சிங்களக் கட்சியும் ஸ்திரமான அரசாங்கத்தை அமைத்து நடத்த முடியாது போயிற்று.

"கடந்த முறை 15 ஆக இருந்த பிரதிநிதிகள் தொகை இம்முறை 20 ஆகுமானால் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை இன்னும் உறைப்பாக வற்புறுத்தலாம். அப்படியான சந்தர்ப்பத்தில் ஆட்சி அமைக்க விரும்பும் எந்தச் சிங்களக் கட்சியும் தமிழ் பேசும் மக்களைத் துச்சமாக மதித்து தம் இச்சைப்படி நடக்கமுடியாது. உரிமைகளை வழங்கி ஆதரவைப் பெற்றே ஸ்திரமான அரசாங்கத்தை நிறுவ வேண்டும். ஆகவே இம்முறை குறைந்தது 20 தமிழரசுப் பிரதிநிதிகளையாவது தமிழ் பேசும் மக்கள் தெரிவு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்"— இவ்வாறு தமிழரசுத் தந்தை கூறி முடித்தார்.

தமிழரசுத் தந்தை திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் பேசுகையில் தமிழ் பேசும் மக்களின் நலன்களை முன்னையைக் காட்டிலும் காத்திரமாகப் பேணத் தமிழரசுக் கட்சிப் பிரதிநிதிகள் 20 பேரையாவது தமிழ் பேசும் மக்கள் தெரிந்தனுப்ப வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

"தமிழரசுக் கட்சி தமிழ் பேசும் மக்களின் விடுதலை வாழ்வுக்காகவும் அவர்களின் மேம்பாட்டுக்காகவும் அயராது உழைத்து வருகிறது. இழந்த உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக இடைவிடாது போராடி வருகிறது. பட்டம் பதவிகளில் மயங்கி இனத்தைக் காட்டிக் கொடுக்கும் இழி செயலில் அது இறங்கியதில்லை. கொள்கை வழுவாமல் நிலையாக நின்று தமிழ் பேசும் மக்களுக்கு தொண்டாற்றி வருகிறது.

ஊர்காவற்றுறை அபேட்சகர் திரு வி. ஏ. கந்தையா பேசுகையில் தமிழரசுக் கட்சி யு. என். பி. ஸ்திரமான அரசாங்கம் அமைத்து நடத்த ஏன் ஆதரவு அளிக்கவில்லை என்பதை விளக்கிக் கூறினார் தமிழ் பேசும் மக்கள் சார்பில் தமிழரசுக் கட்சி விடுத்த கோரிக்கைகளுக்கு யு. என். பி. இணங்காததாலேயே அக்கட்சிக்கு தமிழரசுக் கட்சி ஆதரவளிக்கவில்லை என்று அவர் சொன்னார்.

செனட்டர் ஜி. நல்லையா பேசுகையில் "பெரும்பான்மைச் சமூகம் சிறுபான்மைச் சமூகத்தை என்றும் அடக்கி ஆளலாம் என்று எண்ணியிருக்க முடியாது. அப்படிச் சரித்திரமே இல்லை. சிறுபான்மைச் சமூகத்தினர் ஒற்றுமையாக நின்று தமது நியாயமான கோரிக்கைகளை விடுத்தால் பெரும்பான்மைச் சமூகம் பணிந்துதான் ஆக வேண்டும்" என்றார்.

சிலாபம் அபேட்சகர் திரு பிரான்ஸிஸ் பெரேராவும், ஜனாப் மஷூர் மௌலானாவும் மற்றும் பலரும் கூட்டத்தில் பேசினார்கள்.

# யு. என். பி. யின் குண்டர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தூண்டிவிடுவதாகும். இனக் கலவரத்துக்கு வித்தாகவும் இதைப் பாவிக்க எண்ணியிருக்கிறார்கள் யு. என். பி. யின் சிங்கள வெறியர்கள்.

பவனி கொழும்பிலிருந்து மலைநாட்டுக்கு செல்கிறது—பல கிராமங்களூடாக வழியில் பல தமாஷாக்கள் நடக்கவிருக்கின்றன. அவற்றுள் முக்கியமானவை பிரசாரக் கூட்டங்கள் அந்தக் கூட்டங்களில் தமிழ்த் துவேஷப்பேச்சுக்கள் முழங்கும். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் தமிழரசுக் கட்சிக்கும் முடிச்சுப் போட்டு முழுமூச்சான ஏச்சு விழும்.

தமிழரைத் தாம் பகைப்பதாகச் சிங்கள மக்களுக்குக் காட்டிக்கொண்டால் தேர்தலில் அமோக வெற்றி பெற்று ஆட்சியைக் கைப்பற்றலாம் என்று யு. என். பி. தலைவர்கள் நம்புகிறார்கள். மோட்டார் பவனித் தமாஷாவோடு தமிழருக்கு ஏச்சுப் போட்டால் அது சிங்கள மக்கள் மனதில் நன்றாக விழுந்து ஆழப் பதியும் என்ற எண்ணத்திலேயே இந்த ஏற்பாட்டைச் செய்து மோட்டார் பவனியை ஒழுங்கு செய்திருக்கிறார்கள்.

## வேலை நிறுத்த சம்பளம்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வர்த்தக ஸ்தாபனங்களும் கடைப்பிடிக்க வேண்டும் என்று இவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படாவிட்டால் மற்றொரு வேலைநிறுத்தத்தை நடத்த இவர்கள் ஆலோசிப்பார்கள் என்று நம்பப்படுகிறது.

எனவே ஜே. ஆர். செய்த காரியத்தினால் பல்வேறு சிக்கல்கள் உருவாகப்போகின்றன என்று தெரிகிறது.

வேலைநிறுத்த சம்பளம் கோரியே பல வேலைநிறுத்தங்கள் இனித் தொடர்ந்து நடந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பௌத்த மத அனுஷ்டானத்துக்குத் தடை திபெத் நாட்டில்!

## கொம்யூனிஸ்டுகள் அங்கே மனித உரிமைகளைப் பறிக்கிறார்களாம்

## சர்வதேச ஜூரர்கள் குழு அறிவிப்பு

இந்தியாவின் வடக்கு எல்லையில் உள்ள திபெத் நாட்டில் கொம்யூனிஸ்டுகள் பௌத்தமத அனுஷ்டானத்துக்கு தடைகள் ஏற்படுத்தி வருவதாகவும் மதத் தலைவர்களை ஒழித்துக் கட்டி வருவதாகவும் அங்குள்ள நிலைமைகளை ஆராய்ந்த சர்வதேச ஜூரர்கள் குழு தகவல் வெளியிட்டிருக்கிறது.

சர்வதேச மனித உரிமைப் பிரகடனத்தில் சொல்லப்பட்ட பல அடிப்படை மனித உரிமைகளையும் திபெத் மக்களுக்குக் கொம்யூனிஸ்டுகள் வழங்குகிறார்களில்லை என்றும் அந்தக் குழு தெரிவித்திருக்கிறது.

திபெத்தில் பௌத்த மத அனுஷ்டானத்துக்கு தடை என்றதும் சர்வதேச ஜூரர்கள் குழு அங்கு சென்று விசாரணை நடத்துகிறது. விசாரணை நடத்த வேண்டும் என்று பௌத்தர்கள் வற்புறுத்துகிறார்கள். விசாரணை முடிவில் பௌத்த மத அனுஷ்டானத்துக்கு தடை விதிக்கப்படுவது உரிமை மறுப்பு என்றும் சர்வதேச மனித உரிமைப் பிரகடனத்துக்கு மாறான செயல் என்றும் தீர்ப்புக் கூறப்படுகிறது.

இலங்கையில் தமிழ் மொழி உரிமை தமிழ்பேசும் மக்களுக்கு இல்லையே. அரசாங்கம் அதை அவர்களுக்கு வழங்க மறுக்கிறதே. இது சர்வதேச மனித உரிமைப் பிரகடனத்துக்கு மாறான செயல் இல்லையா? இது ஏன் இதுவரை ஆராயப்படவில்லை, ஏன் சர்வதேச ஜூரர்கள் குழு இதற்கு இங்கு அனுப்பப்படவில்லை? மத உரிமை மறுப்புக்கு மொழி உரிமை மறுப்பு தாழ்ந்ததா? இத்தியாதி கேள்விகள் தமிழ் பேசும் மக்கள் வட்டாரங்களில் இப்போது எழுப்பப்படுகின்றன.

இன்னொரு கேள்வியும் கேட்கப்படுகிறது. இலங்கை கொம்யூனிஸ்டுகள் தமிழ் பேசும் மக்களுக்கு "பிரதேச சுயாட்சி" என்று சமீபகாலமாகச் சொல்லி வருகிறார்கள். அவர்கள் [illegible]தேசத்தில் மத அனுஷ்டானத்துக்கு தடை விதித்துவிட்டு பிரதேச சுயாட்சி கொடுத்து என்ன பயன்? திபெத்தில் உள்ள கொம்யூனிஸ்டுகள் பௌத்த மத அனுஷ்டானத்துக்கு தடை விதிக்கிறார்கள் என்றால் இங்குள்ள கொம்யூனிஸ்டுகள் இந்து, முஸ்லிம், கிறிஸ்தவ மதங்களுக்கு தடை விதிக்கமாட்டார்களா என்ன—இப்படிக் கேட்கிறார்கள்.

## விசித்திர அறிக்கை விட்ட....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

"சிங்கள சரித்திரத்தைக் கூற வேண்டுமானால் அந்தக் கைங்கரியத்தைச் சிங்கள சரித்திராசிரியர்களிடம் விட்டுவிட வேண்டியது தான் மரிக்காருடைய கடமை. வேண்டாத விஷயத்தில் அவர் தலையைப் புகுத்த வேண்டிய அவசியம் இல்லை.

### ராஜேந்திர சோழன்

"12-ம் நூற்றுண்டில் வாழ்ந்த ராஜேந்திர சோழன் ஒரு இலட்சம் (100,000) சிங்களக் குடும்பங்களைத் தம் வாளுக்கு இரையாக்கினான் என்பதாக மரிக்கார் தமது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். எந்தச் சரித்திர ஆதாரத்தைக் கொண்டு இப்படிக் கூறுகிறார் என்பதை அறிய நான் ஆசைப்படுகிறேன். ராஜேந்திர சோழன் நீதி நெறி தவறாத மன்னன் என்றும், தெய்வபக்தியும், இரக்க சிந்தையும் உள்ளவன் என்றும், ஆலயம், சத்திரம், கல்வி நிலையம், மருத்துவ மனை அமைப்பது போன்ற தெய்வத் திருப்பணிகளிலும் தர்ம கைங்கரியங்களிலுமே அவன் ஈடுபட்டிருந்தான் என்றும் கூறும் சரித்திரங்களைத் தான் நாம் காண்கிறோம்.

### புளுகு

"மேலும், துப்பாக்கியும் வெடி மருந்தும் கண்டு பிடிக்கப்பட்ட பின் நடைபெற்ற பிற்கால யுத்தங்களில் கூட ஒரு இலட்சம் பேரைச் சுட்டுக் கொன்றதாகப் புள்ளி விவரங்கள் இல்லை. பழங்கால யுத்தங்களில் பக்கத்துக்கு அதிகப்படியாக ஆயிரமாயிரம் பேர் அழிவதுண்டு. ஒரு இலட்சம் சிங்களக் குடும்பம் என்றால் சுமார் ஐந்து இலட்சம் ஆண் பெண் குழந்தை குஞ்சுகளை வாளால் வெட்டிச் சாய்ப்பதென்பது இலேசுப்பட்ட, சாமான்ய காரியமா? நடந்திருக்கும் என்று தானும் கற்பனை பண்ண முடியுமா? வெறும் புளுகு என்று தோன்றவில்லையா?"

இவ்வாறு டாக்டர் பாலேந்திரா ஒரு வித ஆத்திரத்தோடு கேட்டார்.

### சரித்திரச் சான்று வேண்டும்

"சமீப காலத்தில் வழக்கத்துக்கு வந்துள்ள ஒரு சொற்பிரயோகத்தின்படி நான் ஒரு கொழும்புத் தமிழன். நான் தமிழரசுக் கட்சியைச் சார்ந்தவனோ, சமஷ்டி வாதியோ அல்லன். ஆயினும் மரிக்காரின் சரித்திர ஞான சூனியத்தை எதிர்க்க வேண்டியவனாயிருக்கிறேன். தமது அபிப்பிராயத்தை அச்சிலே பொறிக்குமுன் மரிக்கார் தாம் கையாளும் கருத்துக்களுக்கு சரித்திரச் சான்றுகளைத் தேடிக் கொள்ள வேண்டும்; வெளியிடும் உண்மைகள் சரியானவையா என்று பரிசோதித்துக் கொள்ள வேண்டும்" இவ்வாறு டாக்டர் பாலேந்திரா தொடர்ந்து கூறினார்.

### டெயிலி நியூஸ் ஒப்சேவரின் பாரபட்சம்

மேலே குறிப்பிட்ட சாரப்படி மரிக்காரின் அறிக்கைக்கு ஒரு மறுப்புக் கடிதத்தைத் தயாரித்துத் தாம் சிலோன் டெயிலி நியூஸ், சண்டே ஒப்சேவர், டைம்ஸ் ஒப் சிலோன் பத்திரிகைகளின் ஆசிரியர்களுக்கு அனுப்பியதாகவும், அக்கடிததைப் பிரசுரிக்க பிரஸ்தாப ஆசிரியர்கள் மறுத்துவிட்டதாகவும் டாக்டர் பாலேந்திரா தெரிவித்தார். தாம் டெலிபோனில் மேற்படி ஆசிரியர்களுடன் பேசி இதுபற்றி விவாதித்தும் கூட அவர்கள் உண்மையைப் பிரசுரிக்க மறுத்து விட்டதிலிருந்து, அப்பத்திரிகைகள் யாவும் பாரபட்சமாக நடந்து கொள்கின்றன என்று அவர் குற்றம் சாட்டினார்.

"ஆயினும் இவ்வளவோடு நான் விடப் போவதில்லை. தொடர்ந்து சில காரியங்கள் செய்யத்தான் போகிறேன்" என்று உறுதியோடு கூறினார் டாக்டர் பாலேந்திரா.

[ஜனாப் மரிக்காருடைய நீண்ட அறிக்கையின் தமிழாக்கம் 5-ம் 11-ம் [illegible]களில் பிரசுரிக்கப்[illegible]கிறது]

## தமிழரசுக்கட்சி தேர்தல் பிரசாரக் கூட்டங்கள்

தமிழரசுக் கட்சித் தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் பின்வரும் தேதிகளில் பின்வரும் இடங்களில் நடைபெறும் என்று யாழ்பிரதேசத் தமிழரசுக் கட்சி அலுவலகத்தால் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

**உடுப்பிட்டி, பருத்தித்துறை**
25-6-60-ல் கூட்டம்

பேச்சாளர்கள்:— திருவாளர்கள் அமிர்தலிங்கம், துரைரத்தினம், வி. ஏ. கந்தையா, பாலசுந்தரம், ஜெயக்கொடி, புதுமைலோலன்.

**யாழ்ப்பாணம்**
26, 27-6-60-ல் கூட்டம்

பேச்சாளர்கள்:— திருவாளர்கள் சிவசுந்தரம், அமிர்தலிங்கம், தர்மலிங்கம், வி. ஏ. கந்தையா, பாலசுந்தரம், துரைரத்தினம், கதிரவேற்பிள்ளை, செனட்டர் நல்லையா, டாக்டர் தர்மலிங்கம், வி. என். நவரத்தினம், புறக்டர் நடராஜா, டாக்டர் நாகநாதன்.

**சிலாபம்**
25, 26-6-60-ல் கூட்டம்

பேச்சாளர்கள்:— திருவாளர்கள் அழகக்கோன், ஜனாப் மஸூர் மௌலானா, புதுமைலோலன்.

**வட்டுக்கோட்டை, உடுவில்**
26-6-60-ல் கூட்டம்

பேச்சாளர்கள்:— திருவாளர்கள் எஸ். ஜே. வி. செல்வநாயகம், பாலசுந்தரம், நடராஜா, துரைரத்தினம், அமிர்தலிங்கம், தர்மலிங்கம்

**மட்டக்களப்புப் பகுதி**
1-7-60 கல்லார், கல்முனை
2-7-60 மட்டக்களப்பு, கற்குடா
3-7-60 கொக்கட்டிச்சோலை

பேச்சாளர்கள்:— திருவாளர்கள் எஸ். ஜே. வி. செல்வநாயகம், வி. ஏ. கந்தையா, பாலசுந்தரம், துரைரத்தினம், அமிர்தலிங்கம், சிவசுந்தரம், தர்மலிங்கம்.

**திருகோணமலை, மூதூர்**
[illegible]-7-60-ல் கூட்டம்

பேச்சாளர்கள்:— திருவாளர்கள் எஸ். ஜே. வி. செல்வநாயகம், முத்துக்குமாரசாமி, மாணிக்கம், ஜனாப் மஸூர் மௌலானா.

**மன்னார்**
7-7-60-ல் கூட்டம்

பேச்சாளர்கள்:— திருவாளர்கள் ஜெயக்கொடி, கதிரவேற்பிள்ளை, வி. ஏ. கந்தையா.

**வவுனியா**
9, 10-7-60-ல் கூட்டம்

பேச்சாளர்கள்:— திருவாளர்கள் அமிர்தலிங்கம், துரைரத்தினம், சிவசுந்தரம்.

**சிலாபம்**
9, 10-7-60-ல் கூட்டம்

பேச்சாளர்:— திருவாளர் எஸ். ஜே. வி. செல்வநாயகம்

**மன்னார்**
10-7-60-ல் கூட்டம்

பேச்சாளர்கள்:— திருவாளர்கள் மாணிக்கம் முத்துக்குமாரசாமி.

**உடுப்பிட்டி**
11-7-60-ல் கூட்டம்

பேச்சாளர்கள்:— திருவாளர்கள் எஸ். ஜே. வி. செல்வநாயகம், பாலசுந்தரம், அமிர்தலிங்கம், வி. ஏ. கந்தையா, தர்மலிங்கம், துரைரத்தினம், ஜெயக்கொடி, கதிரவேற்பிள்ளை, வி. என். நவரத்தினம், சிவசுந்தரம், ஜனாப் மஸூர் மௌலானா, மாணிக்கம், டாக்டர் நாகநாதன், செல்வி மாணிக்கம்.

**யாழ்ப்பாணம்**
16-7-60-ல் கூட்டம்

**வட்டுக்கோட்டை**
17-7-60-ல் கூட்டம்

**பருத்தித்துறை**
18-7-60-ல் கூட்டம்


தமிழ்
G. C. E.

101 வினாவிடை

பரீட்சையில் சித்தி தலைவிதியைப் பொறுத்ததல்ல வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுவதில் தங்கியுள்ளது. பரீட்சைக்கு விடை எழுதும் முறைகளுடன் கூடிய புத்தகங்கள் உங்கட்கும் சித்தியைத் தர வல்லன.

| | |
|---|---|
| o தமிழ்ப் பாஷை | ரூ 3-00 |
| o எண் கணிதம் | ரூ 3-00 |
| o குடியியல் | ரூ 3-00 |
| o சரித்திரம் | ரூ 3-00 |
| o பூமிசாஸ்திரம் | ரூ 3-00 |
| o சுகாதாரம் | ரூ 3-00 |
| o ஆங்கிலம் | ரூ 3-00 |
| o பயிற்சிச் சிங்களம் | ரூ 3-00 |
| o ரோமன் கத்தோலிக்கம் | ரூ 3-00 |
| o இந்து சமயம் | ரூ 3-00 |

பரீட்சை துணை நூல்கள்

கடந்த கால வினா-விடைகள்

பரீட்சை வினாக்களை அறிந்து விடைகளைப் படிப்பது சிறந்த பாடாயத்தமாகும். மாதிரி வினாவிடைகள் சித்திக்கு வழிகாட்டும்.

| | |
|---|---|
| o தமிழ்ப் பாஷை | ரூ 3-00 |
| o எண் கணிதம் | ரூ 3-00 |
| o குடியியல் | ரூ 3-00 |
| o சரித்திரம் | ரூ 3-00 |
| o பூமிசாஸ்திரம் | ரூ 3-00 |
| o சுகாதாரம் | ரூ 3-00 |
| o ஆங்கிலம் | ரூ 3-00 |
| o பயிற்சிச் சிங்களம் | ரூ 3-00 |
| o ரோமன் கத்தோலிக்கம் | ரூ 3-00 |
| o இந்து சமயம் | ரூ 3-00 |
| o இஸ்லாம் | ரூ 3-00 |

வி. பி. பி. கிடையாது
தபால் செலவு 35 சதம்

விபரங்கட்கு:
அற்லிஸ் ஹோல்,
723, மருதானை ரோட்,
கொழும்பு.



சி. சி. சி. நெற்பயிர்

உரக்

கலவைகள்

உலகிலேயே மிகச் சிறந்தவை

கொழும்பு
கொமேர்ஷல்
கொம்பனி லிமிட்டெட்
(இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது. அங்கத்தவர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது.)

தபால் பெட்டி 33, கொழும்பு.
CCC 926




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுளும் மனிதனும்

சிறுகதை — எழுதியவர்: உதயணன்

**ஆ**டவுள் குவலயத்தைக் குனிந்து நோக்கினர். எங்கும் அழு குரல், அவலச் சப்தம், பயங்கர ஓலம்......!

கடவுளின் குனித்தபுருவம் நெரிந்தது. கொவ்வைச் செவ்வாய்கனன்றது. குமிண் சிரிப்பில் கடுமை கலந்தது...

மனிதன் தன் வாழ்வில் பயன்படுத்திய ஏனைய படைப்புகள் கடவுளின் பார்வையில் பட்டன. விலங்கினம், புள்ளினம், தாவரம், கடல், கங்கை, மலை, மழை, வெய்யில், தென்றல்......

மனிதன் தனக்குத்தானே உண்டாக்கிக்கொண்டதை எண்ணிப் பார்த்தார்: புகையிரதம், மோட்டார் வண்டி, அணுகுண்டு, ஜெக்கட் இத்தியாதி!

"தேவி!" கடவுள் அழைத்தார்.

"ம்!" என்றாள் தேவி.

"கூப்பிட்டாயா?"

"ஆமாம் சுவாமி! இந்த மனிதர்கள் ஏன் வருந்துகின்றனர்?"

"நாமே பூவுலகத்துக்குப் போய் அந்த அனுபவத்தை கண்டு வருவோமா?"

தேவி எழுந்தாள்

சுவாமி நடந்தார்.

★

**பி**றந்தது ஆண்குழந்தை. வைத்த பெயர் நடராசன். தந்தி பறந்தது கண்டிக்கு. அங்கிருந்தவர் தகப்பனார்.

பட்டினி வாழ்க்கை நடத்திய ஒருவனுக்குப் பெருநிதி கிடைத்து, அதனால் அவன் ஆனந்தப்படுவதை ஆச்சரியமில்லை என்பவர்கள், ஐந்து பெண்களுக்குப் பிறகு ஒரு ஆண் குழந்தையைப் பெற்ற பிதா அகமகிழ்வதில் தவறு காண முடியாது. யாழ்ப்பாணத்துக்கு ஓடிப்போக வேண்டும். பிள்ளைக் கவியமுதை வாரியணைத்து முத்தமிட வேண்டும் என்று தகப்பனார் எண்ணியபோதிலும், ஒன்றுதான் நடந்தது. யாழ்ப்பாணத்துக்குப் போனார்; அவ்வளவுதான். இந்தச் சொற்றொடருக்கு மனித அகராதியில் விபத்து, மரணம் என்று பல பொருள்கள் உண்டு.

'தகப்பனைத் தின்னி' என்ற ஊரவரின் வாய்க்குத் தப்பி, நடராசன் தலையைத் தூக்கி இந்தப் பொல்லாத உலகத்தைப் பார்த்தான். திண்ணைச் சுவரைப் பிடித்துக் கொண்டு நடந்தான். சிலேற்றைத் தூக்கிக்கொண்டு பாடசாலைக்கு ஓடினான். புத்தகங்களுடன் திரும்பி வந்தான்.

அவன் வளர்ந்து விட்டான்!

நடராசன் இரண்டாண்டு காலமாக ஆசிரியனாகப் பயிற்சி பெற்றுப் பரீட்சையிலும் தேறிவிட்டான். புகைப்படத்தை ஒட்டி தடித்த அட்டை போட்டு ஒரு அழகான தராதரப்பத்திரத்தை அரசாங்கம் அவனுக்கு அளித்தது. அந்தப் பத்திரம் அவனுக்கு ஒரு தொழிலைத் தேடித் தரவில்லையானால், அதைத் தெருவோரத்தில் ஏலம் போட்டாலும் துட்டுக் காசு சேராது.

இந்தக் காலத்தில் பிள்ளைகளையும், பெற்றோரையும், மற்றோரையும் ஏமாற்றி உடம்பை அலட்டாமல் வாழக்கூடிய அளவுக்கு ஒரு நியதத் தொழிலை 'அபிவிருத்தி' அடைந்துவிட்டதோ, அப்படி நம்மவர்களிடம் ஒரு தப்பெண்ணம் தோன்றிவிட்டதோ, அல்லது வேலை இல்லாத் திண்டாட்டத்தைத் தூக்கி அடித்துவிடலாம் என்ற நப்பாசை மாணவர்களைப் பயிற்சிக் கலாசாலைகளுக்குத் துரத்துகிறதோ தெரியாது. நடராசன் கும்பலில் சேர்ந்தோர் அனேகர், அனேகர்.

உள்ள சொத்தான ஒரே காணித் துண்டும் வீடும் ஈட்டில் இருந்தது. நடராசனை அடியோடு ஆண்டியாக்கி விடுவோம் என்ற எண்ணம் போலும். கடந்த பதினைந்து வருடங்களாகத் தன் உயிரை அணுவணுவாகக் காச நோய்க்கு இரை கொடுத்து வந்த அவனுடைய தாயார் இன்னும் சாகவில்லை!

நடராசனுடைய தந்தை அகால மரணமடைந்ததால் ஒருகாலத்தில் அவர் வியாபாரத்துக்கு முதலிட்டு செய்த பணம் எங்கோ, எப்படியோ யார் வாயிலோ போய்ச் சேர்ந்திருக்க வேண்டும். ஆனால் வாரிசான நடராசன் வளர்ந்து கண்டிக்குப் போகும் காலத்தில், அந்தப் பணத்தை ஒருவர் பாதுகாத்து வைத்து நடராசன் கையில் நாணயமாகத் தருவாரானால், உலக சரித்திரத்தை மாற்றியமைத்த அவச்சொல் அவரைச் சேராதா?

நடராசன் தான் வந்த பாதையைக் கொஞ்சம் பின்னால் திரும்பிப் பார்த்தான். அவனுக்கு முன்பிறந்த ஐந்து சகோதரிகளில் விவாகம் செய்து ஒரு பிள்ளையுடன் விதவையாகிவிட்ட மூத்தவள் போக, மற்றைய நால்வரும் கல்யாணத்துக்குக் காத்திருந்தனர்—நடராசனின் கையைப் பார்த்து!

நடராசன் வழக்கம்போல வேலை தேடிவிட்டு வீட்டுக்கு வந்து எஞ்சியிருக்கும் கஞ்சியைக் கூழைக் குடித்து விட்டு படுத்துக்கொள்வான். அப்பொழுது தாயாரின் முனகல் ஒரு காது வழியாகவும் தமக்கைமாரின் பெருமூச்சு மறு காது வழியாகவும் நுழைந்து, மத்தியில் சந்தித்து ஐக்கியப்பட்டு, அவனுடைய மூளைக்கு வேட்டு வைத்து மண்டையைப் பிளக்கும் நிலைக்கு யாராலும் பெயரிட முடியாது— தற்காலிகமாக மரணவஸ்தை என்று கூறலாம்.

ஒரு நல்ல செய்தி!

நடராசனுக்கு யாழ்ப்பாணத்திலேயே வேலை கிடைத்துவிட்டது. அதற்கான நிபந்தனைகள் மூன்று. இரண்டாயிரம் ரூபாவை ஒரு உறையில் வைத்து ரகசியமாகப் பாடசாலை முகாமைக்காரரிடம் தர வேண்டும். கட்டட நிதிக்கு என்று ஐந்நூறு ரூபாவை பரகசியமாகத் தர வேண்டும். மாதா மாதம் அப்படி இப்படி என்று கிள்ளித் தெளிக்க வேண்டும்.

சட்டி பானை வனைவதோடு குயவனின் கதை முடிந்து விடுகிறது. அவற்றைக் கற்பூரப்பெட்டி.... வாங்குகிறவனைப் பொறுத்ததுதானே. அப்படியே நாமும் எமது குருத்தறிவை நல்ல வழிகளில் செலுத்தி நல்லவைகளைச் செய்து நாமும் வாழ்வுந்து பிறரையும் வாழவிடக்கூடாதா என்ற கேள்வியை-உஸ்! தூக்கணங் குருவி குரங்கிடம் கேட்கக் கூடாது என்ற கொள்கை ஆதிதொட்டு நிலவுவது தான்—யாரும் யாரிடமும் கேட்கக்கூடாது.

ஈடாகக் கிடந்த காணி விற்கப்பட்டது. அதனால் கிடைத்த 'அரிசி' முகாமைக்காரரின் 'வாயில்' போடப்பட்டது. நடராசனுக்கு வேலை கொடுக்கப்பட்டது.

ஜப்பான் பீஸ் வேட்டியும் நாலாயிரம் பப்பிளினும் நடராசனின் உடலை மூடின. பாடத் திட்டக் குறிப்புக் கொப்பிகள் அவனுடைய கையில் ஏறின. காலையில் போகிறான். மாலையில் வருகிறான். இன்றைக்கு அவனும் ஒரு ஆசிரியன்.

யாழ்ப்பாணத்தில் உத்தியோகத்தர், கொழுத்த வியாபாரிகள், ஆசிரியர்கள் இவர்களுக்கு அடுத்தபடியில் கொஞ்சம் மதிப்பாக வாழ்பவர்களில் சொந்தமாக வாடகைக் கார் வைத்துப் பிழைக்கும் 'வெள்ளை வேட்டிக்கார'ரும் சேர்வர். இப்படியான ஒருவனின் அறிமுகம் நடராசனுக்கு ஏற்பட்டது. அவனுக்குப் பின்னால் கிடந்த—மறைந்து கிடந்த கதையை ஆராய்ந்து பார்க்க நடராசனுக்கு அவகாசம் இருக்கவில்லை. அவனை இழுத்து வந்து இரண்டாவது தமக்கைச்சுக் கட்டி வைத்தான்.

நடராசனின் இந்த இரண்டாவது மைத்துனன் காலையிலும் மாலையிலும் மாணவிகளை பாடசாலைக்கும் வீட்டுக்கும் காரில் ஏற்றிச் செல்வான். திடீரென்று ஒருநாள் அவன் ஒரு மாணவியை ஏற்றிக்கொண்டு பாடசாலைக்கு மல்லாமல் வீட்டுக்குமல்லாமல் எங்கோ 'பரதேசம்' போய்விட்டான். அவனைப் பற்றிய தகவல் எதுவுமே நடராசனுக்குத் தெரியவில்லை. நடராசனுக்கு உச்சந்தலை வியர்த்தது.

வாழ்வில் படுபாதகமாக வஞ்சிக்கப்பட்ட மூத்த இரு சகோதரிகளின் குடும்பத்தில் காலம் பறித்த பள்ளத்துக்கு நடராசன் மண் போட்டு நிரவ வேண்டும். எஞ்சியவர்களை வாழவைக்க வேண்டும். தாயையும் பராமரிக்க வேண்டும். இந்த மூன்றும்தான் நடராசனுடைய கொள்கை, லட்சியம், வாழ்வு எல்லாம். ஐந்து பெண்கள் மத்தியில் அருமையாகப் பிறந்த நடராசாவுக்கு இந்த விதியா வரவேண்டும்!

ஒரு புடைவைக் கடையில் விற்பனையாளனாக வேலை பார்த்து வந்த கோபாலன் என்பவனை மூன்றாவது சகோதரிக்குக் கட்டி வைக்கப் பாடுபட்டான் நடராசா. ஆனால் அவனால் சீதனம் என்ற வார்த்தையை நினைத்தும் பார்க்க முடியவில்லை. ஒரே ஒரு வழி மட்டும் இருந்தது. நடராசன் கோபாலனின் தங்கை பார்வதியைக் கல்யாணம் செய்யச் சம்மதித்தால் இந்தக் கல்யாணமும் நடக்கும்.

சம்மதித்தான்.

நடந்தது.

நடராசன் வெறும் காற்றை உட்கொண்டு தன் வயிற்றை நிரப்பி, பச்சைத் தண்ணீரைக்கொண்டு பார்வதியின் வயிற்றையும் நிரப்ப வழி இருந்தால், தன் குடும்பத்தையும் தாய் சகோதரிகள் அடங்கிய மறு குடும்பத்தையும் சமாளிக்க, ஒருவேளை, நினைக்கலாம். ஆனால் இந்த இரண்டில் எதையும் செய்ய அவனுக்குத் தெரியவில்லை—முடியவில்லை. அவன் மாதம் இருநூறு ரூபா சம்பாதிக்கிறான் என்றால், தாயின் மருந்துச் செலவு மட்டும் இருநூற்றைம்பது ரூபா வருமென்றால் இன்னும் சொல்ல வேண்டுமா?

இந்த லட்சணத்தில்—

பட்ட காலில் பட்டது. கெட்ட குடி கெட்டது. இன்னும் இரண்டு சம்பவங்கள் அவனுடைய வாழ்வில் தொடர்ந்து நடந்தன.

அதாவது—

முதலாவதாக ஆசிரியப் போர்வையை இழுத்து மூடிக்கொண்டு சுயநலம் வளர்க்கும் ஒரு சோரக் கூட்டத்தால் நடராசனின் வேலை பறிபோயிற்று. இரண்டாவதாக பார்வதி கர்ப்பம் தரித்தாள்......

மற்றவனின் உழைப்பைத் திருடி, ஊதியத்தைத் திருடி, பணத்தைத் திருடி, பொருளைத் திருடி, ஏமாற்றி, வஞ்சித்து, கொலை செய்து, கொள்ளை அடித்து, கோட்டை கட்டி, கார் வாங்கி குதூகலமாக வாழும் பகுத்தறிவுப் பிண்டங்களின் மத்தியில், நல்லவை அல்லாதவை அறியாத நடராசன் நரகக் குழியில் தள்ளப்படுவதை யாரால் தவிர்க்க முடியும்—தடுக்க முடியும்?

பத்து மாதங்கள் பெரும்பாடுபட்டு நகர்ந்தன. பார்வதிக்குப் பிள்ளை பிறக்கவில்லை. பன்னிரண்டு மாதங்கள் கழிந்தன; பதினைந்து மாதங்கள் முடிந்தன; பிள்ளை பிறக்கவேயில்லை......

அதுவென்னபிள்ளை, அது?

சம்பிரதாயப்படி ஊரவர்கள் கூடினர்கள். அனுதாபம் தெரிவித்தார்கள். பிரதி உபகாரத்தை எதிர்பாராது புத்திமதி சொன்னார்கள். பார்வதியின் வயிற்றில் கட்டி என்றார்கள், மருந்து என்றார்கள், மந்திரம் என்றார்கள், மாயம் என்றார்கள், அறுத்துக் கிழித்து ஊசி போட வேண்டுமென்றார்கள், கும்பம் வைத்து வேப்பிலை அடிக்க வேண்டுமென்றார்கள். கொழும்புக்கும் கோயம்புத்தூருக்கும் கொண்டு போக வேண்டுமென்றார்கள். பின் அவர்கள் தத்தம் வழியே போய்விட்டார்கள்......

நடராசன் சிந்தித்தான். தன்னை உணர்ந்தான். தனது மனக் கண்ணை எல்லாத் திசைகளுக்கும் திருப்பிச் சுழலவிட்டான். ஒவ்வொரு திசையில் இருந்தும் ஒவ்வொரு விசுவரூபம் அவனை நோக்கி வருவதுபோல் தோன்றியது. பூவுலகத்துக்கும் மரண உலகத்துக்கும் பாலம் கட்டும் அருமை அம்மா, தாலியறுத்து விதவையாகித் தன் வாழ்வைத் தீய்த்துக்கொண்ட மூத்த அக்கா, தாலியறுக்காமல் விதவையாகி வேதனைக் கிடங்கில் விழுந்த இரண்டாவது அக்கா, தரித்திரப் பேயுடன் நேர் நின்று சமர் புரியும் மூன்றாவது அக்காவும் மைத்துனரும், இன்னும் வாழ்வை நுகர்ந்து பார்க்காத இரு அக்காமார், அதிசய வியாதிகொண்ட பார்வதி, பறிபோன பதவி, ஊர் நிறைந்த கடன், கவலை, கண்ணீர்......!

நடராசன் எழுந்தான். பார்வதியை மறந்தான். மாதாவை மறந்தான். உடன் பிறப்புகளை மறந்தான். ஏன், தன்னையே மறந்துவிட்டான்.

ஓடினான்.

(13-ம் பக்கம் பார்க்க)

சுதந்திரன் சந்தா விபரம்

வாரந் தோறும் சுதந்திரனைத் தவறாமல் பெற்றுக் கொள்ள நேயர்களுக்கு ஒரே ஒரு வழி சந்தாதாரராகச் சேர்ந்து கொள்வதுதான்.

வருடச் சந்தா ரூபா. 10-00
(தபாற் செலவு உட்பட)
ஒரு வருடத்துக்கு குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை.

சர்குலேஷன் மனேஜர்
சுதந்திரன்.
தபால் பெட்டி 1183,
கொழும்பு.

கண்ணைக் கவரும் வண்ணங்களிலும்
கருத்தைக் கவரும் வடிவங்களிலும்
சிறந்த பாவனையிலும்
உறுதியான சாயத்திலும்
முன்னணி வகிக்கிறது
லதா
கேம்பிரிக்
சட்டை, ஜாக்கெட், கவுண் பாவாடை கிமோனு முதலியவைகளுக்குச் சிறந்தது.
இலங்கை முழுவதிலுமுள்ள புடைவை வியாபாரிகளிடம் கிடைக்கும்.
ஏக விநியோகஸ்தர்கள்:
குண்டன் மால்ஸ்,
26, கெய்ஸர் வீதி, கொழும்பு.
★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தென்னகத் தமிழரின் உதவியுடன் ஈழத்தில் தமிழர் ஆதிக்கத்தை நிறுவுவதே தமிழரசுக் கட்சியின் நோக்கம்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

### தடுத்து வைக்க அது தான் வழி

இந்த அதிகாரப் பரவல் எப்படி நடை முறையில் இயங்கும் என்று கவனிப் போம். சட்ட விரோத குடியேற்றத்தை எடுத்துக் கொள்வோம். கிராம விதானை, ஏனைய அரசாங்க ஊழியர்கள் ஆகியோரின் உதவியுடன் பொலீஸார் இக் குடியேற்றத்திற் கெதிராக நடவடிக்கைகளைக் கையாண்டு வருகிறார்கள். இணைப்பாட்சியின் கீழ் இவ் ஊழியர்கள் பிரதேச சபையின் ஆணைக்குட்பட்டு விடுவார்கள். இந்தச் சூழ் நிலையில் யாழ்ப்பாணப் பிரதேச சபை ஊழியர்கள் கள்ளக் குடியேற்றம் பற்றி இன்றிருப்பது போன்ற உற்சாகங் காட்டுவார்களா? பிரதேச சபைகள் கள்ளக்குடியேற்றம் பற்றி கண் மூடிக் கொண்டிருக்காவா? அல்லது திட்டவட்டமாக இங்கு குடியேற்றத்தை ஆதரிக்கா திருக்குமா? இக்கள்ளக் குடியேற்றம் இப்படியே (பிரதேச சபையின் ஆதரவுடன்) நடந்தால் வடக்கு கிழக்கு மாகாணங்களில் இருக்கக்கூடிய தமிழர்களின் தொகைக்கு அப்பாற் பட்டு விடும். இவ்விதமாக, இந்நாட்டின் சிங்களப் (பெரும்பான்மைச்) சமூகம் சொந்த நாட்டிலேயே சிறுபான்மையாகிவிடும். நிலைமை இவ்வாருயின், ஏனைய 7 மாகாணங்களிலுமுள்ள சிங்கள ஆண்கள் அனைவரையும் சிங்கள மாகாண எல்லைப் பாதுகாப்புக்காக வடக்கு, கிழக்கு மாகாண எல்லைகளில் குவிக்கவேண்டி வரும். அப்படியானுல்தான் தமிழர் கரை புரண்டு எமது பிரதேசத்திற்குள் வழிந்து விடாது தடுத்து வைக்க முடியும்

### இராணுவத் தளங்கள்

வேருெரு விளைவைக் கவனிப்போம். 1947-ல் இலங்கை இரண்டு இராணுவத் தளங்களை பிரிட்டனுக்குக் கையளித்ததை நாம் அறிவோம். அதேபோல கிழக்கு மாகாணப் பிரதேச சபை திருகோணமலைத் தளத்தை இந்தியாவிற்குக் கையளித்து விடாது எவர் தடுக்க முடியும்? இப்படி நடக்கும் சந்தர்ப்பத்தில் யுத்தம் ஒன்றைத் தவிர்த்த வேறெந்த நடவடிக்கையால் தமிழ்ப் பிரதேச சபைகளை நாம் அடக்க முடியும்?

பிரதேச சபையின் வேருெரு அம்சம். வடக்கு, கிழக்கு மாகாணப் பகுதிகளுக்குப் பிரதேச சபை அந்தஸ்து வழங்கிஞல், நியாய பூர்வமான அடுத்த நடவடிக்கை, ஏனைய மாகாணங்களுக்கும் இவ்வந்தஸ்து வழங்குவதே யாகும். இதனுல், தமிழ் பேசும் மக்கள் பெரும் பான்மையாய் இருக்கும் மத்திய மாகாணத்திலும் தமிழ்ப் பிரதேச சபை ஒன்று ஏற்படும். முதலில் கண்டிய நிலப்பரப்புக்களின் கீழும், பின்னர் பிரிட்டிஷ் தோட்ட முதலாளிகளின் கீழும் அல்லலுற்ற கண்டிய விவசாயிகளின் நிலைமை என்ன? இந்தியர்களுக்கு வாக்குரிமை இருந்த பொழுது, 1947-ல் கண்டிய மாகாணத்திலிருந்து 10 பிரதிநிதிகள் தானும் தெரிந்தெடுக்கப் படவில்லை. இதை நாம் இன்று மறந்துவிடவு மில்லை. பிரஜாவுரிமைச் சட்டம் மூலம் கிடைத்த சலுகைகள் அனைத்தையும் பிரதேச சபைகள் மூலம் கண்டிய விவசாயிகள் இழந்து விடுவதா? பாராளுமன்றத்திற்கு வேண்டாம், ஒரு கிராமச் சங்கத்துக்குத் தானும் கண்டி மாகாணப் பிரதேச சபையில் ஒரு சிங்களவன் தெரிவுபட முடியுமா!

### சம அந்தஸ்து இரகசியம்

அடுத்துத் தமிழ் அரசுக் கட்சி கோருவது மொழிகளுக்கு ஒத்த மதிப்பு நிலை. முதலாவதாக, இக்கோரிக்கை பிரதேச சபைக் கோரிக்கைக்கு முரணுகத் தோன்றுகிறது. வடக்கு கிழக்கு மாகாணங்களில் பிரதேசக் கோரிக்கைக்கு முரணுகத் தோன்றுகிறது. வடக்கு கிழக்கு மாகாணங்களில் பிரதேச சபைகள் ஏற்பட்டு அங்கே தமிழ் ஆட்சி மொழியாகும் பொழுது, இலங்கையனைத்திலும் தமிழுக்கு ஒத்த மதிப்பு நிலை ஏன் தேவைப்படுகிறது? இதற்கு ஒரு பதில் உண்டு. அதுதான் பொருளாதாரம். தமிழர்களில் பெரும்பாலோர் அரசாங்க ஊழியத்திலும், வர்த்தகம், சட்டம் வைத்தியம் ஆகிய துறைகளிலும் ஈடுபட்டு வாழ்க்கை நடத்துகிருர்கள். இத் தொழில்களில் இவர்கள் செழிப்பு நிறைந்த சிங்கள பிரதேசங்களிலேயே நடத்துவதினுல் தமது மொழிக்கும் சம அந்தஸ்துக் கோருகிருர்கள்.

குடியேற்றம் பற்றிய அடுத்த கோரிக்கையைக் கவனிப்போம். இலங்கையில் 65 இலட்சம் சிங்களவர்களுடன் வாழும் தமிழரின் எண்ணிக்கை 10 இலட்சம் அதாவது 10%. ஆனுல் 25,000 சதுர மைல் கொண்ட இலங்கையில் வடக்கு கிழக்கு மாகாணங்களின் பரப்பு 7065 சதுரமைல் அதாவது 28% ஆகவே 10% தமிழர் 28% நிலப்பரப்பை தமக்கு கையளிக்கும்படி கோருகிருர்கள்.

### கொள்ளை! கொள்ளை!

இந்தக் கொள்ளையடிப்பை என்னென்று சொல்ல! இன்னும் ஒன்று. இந்த நிலப் பரப்பில் நீர்பாசனத்தின் கீழ் கொண்டு வரக்கூடிய நிலப்பரப்பை மாத்திரம் கணக்கில் கொண்டால் தமிழருக்குச் சாதகமாக விகிதாசாரம் இன்னும் அதிகரிக்கும்! ஏனென்ருல், சிங்கள வடமேல், வட மத்திய, உவா மாகாணங்களிலும் உள்ள நிலம் அறவே நீர்ப்பாசனத்தின் கீழ் கொண்டு வர முடியாது. ஆனுல் கிழக்கு மாணத்திலுள்ள காணி அவ்வளவும் நீர்பாசனத்திற்கு மிகவும் ஏற்ற பூமி. இத்துணை சிறிய தொகையிலுள்ள தமிழருக்கு அத்தனை பிரமாண்டமான பூமியை ஒதுக்கி வைக்கும்படி தமிழ் அரசுக் கட்சி ஏன் கேட்கிறது? பிரஜோற்பத்தி என்பது சிங்களவர்களிடையே இருப்பது போலத் தமிழர்களுக்கு ஒரு முக்கிய பொழுதுபோக்கல்ல. அப்படியிருக்கும்பொழுது இவ்வளவு நிலத்தையும் ஏன் தமிழரசுக் கட்சி கோருகிறது? பிரதேச சபைகள் நிறுவப்பட்டதும் அலை அலையாகத் தான் வரவழைக்கப்போகும் கள்ளக் குடியேற்றக்காரர்களுக்காக இத்தனை பூமியையும் செல்வநாயகம் தட்டிக் கொள்ளப் பார்ப்பதாய் இருக்காதா?

### இந்தியத் தமிழர்

தமிழரசுக் கட்சியின் 4வது கோரிக்கை மத்திய மாகாணத்திலே தோட்டங்களில் வாழும் சுமார் 10 லட்சம் இந்தியத் தமிழர்களுக்குப் பிரஜாஉரிமை வழங்கவேண்டும் என்பது! இந்தியர் பிரச்னைக்குத் தீர்வு காண வேண்டியது அவசியமே. ஆனால் இந்தச் செல்வநாயகம் வழியில் இதைத் தீர்த்து வைக்க முடியாது. 1947 பொதுத் தேர்தல் முடிவுகளையும் 1952, 1956 பொதுத் தேர்தல் முடிவுகளையும் ஒப்பிட்டுப் பார்ப்பது கண்டிய வாக்காளர்களுக்குப் பெரிதும் உதவியாயிருக்கும். இந்த நாட்டில் எதுவும் கரிசனையில்லாத இந்திய வம்சாவளியினரின் வாக்குரிமையை பிரஜாஉரிமைச் சட்டம் பறித்த பின்னுல்தான் கண்டியப் பகுதி மக்கள் தமது சொந்தப் பிரதிநிதிகளைத் தெரிவு செய்ய முடிந்தது. தமது குறைகளுக்கு ஓரளவு தானும் பரிகாரம் காண முடிந்தது.

### தமிழரசின் நோக்கம்

மேற்கூறிய காரணங்களுக்காகத்தான் நான் இந்த உறுதியான முடிவிற்கு வந்திருக்கிறேன். அதாவது, இந்த நாலு அம்சக் கோரிக்கைகள் இங்கு வாழும் தமிழ் மக்களின் பிரச்னைகளுக்குத் தீர்வு காணவோ அல்லது அவர்களை ஒரு ஐக்கிய இலங்கை என்ற சமுதாயத்தில் பங்காளிகளாக்கும் நோக்கத்துடனே சமர்ப்பிக்கப்படவில்லை. ஆனுல் தென்னிந்தியத் தமிழரின் உதவியுடன், இலங்கையில் தமிழரின் ஆதிக்கத்தை நிறுவுவதே தமிழரசுக் கட்சியின் நோக்கமாகும். தாம் காணும் திராவிட இராச்சியத்தில் இலங்கையையும் ஒரு பகுதியாகக் காட்டும் படங்களை வெளியிடுகிறது திராவிட முன்னேற்றக் கழகம். இந்தக் கழகத்தின் ஒரு கையாள்தான் இலங்கைத் தமிழரசுக் கட்சி. இந்த நாட்டிற்குப் புறம்பான ஒரு அரசியல் தத்துவத்திற்காக, இந்தத் தீவின் சுதந்திரத்தை நசுக்க முயற்சிக்கும் ஒரு ஐந்தாம் படையே தமிழரசுக் கட்சி. சரித்திர நியதி என்று நான் எடுத்துக்காட்டிய தென்னிந்திய படையெடுப்பின் சின்னமே தமிழரசுக் கட்சி.

### வெளியிலிருந்து வரும் பலம்

தமிழரசுக் கட்சியின் கோரிக்கைகளில் வலிந்து தேடிப் பல நியாயங்களை நான் காண்கிறேன் என்று யாரும் குறைகூறலாம். இது அப்படியாகுமா? இலங்கைத் தமிழ் மக்களின் நலவுரிமைகள் மாத்திரமே தனது குறிக்கோள் என்ருல், தமிழரசுக் கட்சி 1960 மார்ச் மாதத்தில் ஏதும் ஒரு சிங்களக் கட்சியுடன் சமரசத்திற்கு வந்திருக்கலாமே! இதைவிட இக்கட்சிக்கு இத்தகைய சந்தர்ப்பம் எங்கு கிடைத்திருக்கும்—தன் நல்லெண்ணத்தைக் காண்பிக்க தமிழரசுக் கட்சிக்கு திறமாக இலாபம் காண ஏற்ற மிகத் திறம்பட்ட சந்தர்ப்பம் அதன் காலடியில் கிடந்தது. கட்சி இதைப் பயன் படுத்திற்ரு? இதிலிருந்து தெளிவாகத் தெரியவில்லையா, இந்நாட்டிலுள்ள ஏனைய இனங்களுடன் ஒத்துழைத்து, ஐக்கிய இலங்கையை உருவாக்குவது தமிழரசுக் கட்சியின் நோக்கமல்லவென்று! இதிலிருந்து தெளிவாகவில்லையா ஒரு அயல்நாட்டின் கையாள் ஐந்தாம்படையாக இயங்கி தருணம் வரும்வரைக்கும் பதுங்கியிருந்து, அரசாங்கத்திற்குத் தலையிடி கொடுத்துக் கொடுத்து இறுதியில் நாட்டைக் கைப்பற்றுவதுதான் தமிழரசுக் கட்சியின் ஒரேயொரு நோக்கம் என்று? பாராளுமன்றத்தில் ஒரு 15 ஸ்தானங்களைக் கைப்பற்றிய தைரியம் மாத்திரம் இத்துணை வைராக்கியத்துடன் நாலு அம்சக் கோரிக்கைகளை வற்புறுத்த நிச்சயம் துணிவளித்திருக்கமுடியாது. பாராளுமன்றத்துக்குப் புறத்தேயுள்ள ஏதோ ஒரு பலத்திலிருந்துதான் இத்துணை நெஞ்சுரம் பிறக்கிறது என்பது தெரிகிறது.

# சிறுபான்மைத் தமிழரின் . . .

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

படியானுல் எங்கள் கந்தையா, வைத்திலிங்கம், நாகலிங்கம், பொன்னம்பலம் போன்ற தலைவர்கள் இக் கட்சிகளின் தலைவர்களாகவோ, செயலாளராகவோ வரமுடியுமா? இவர்களில் எவரும் வரமுடியாது என்று என்னுல் உறுதியாகக் கூற முடியும். ஏன் தமிழ் தோழர்கள் வகுப்புவாதம் இல்லையென்று கூறுகிருர்களே தவிர, சிங்களத் தலைவர்களுடைய உள்ளங்களிலே வகுப்பு வாதம் தலைவிரித் தாடத்தான் செய்கிறது. இது காலவரையும் நம்பிக் கெட்டுவிட்டது தமிழினம். இனிமேலும் அதே பாதையில் நாம் சென்ருல் அது நம் அறிவுச் சூனியத்தைத் தான் காட்டும்.

### தீண்டாமை பிரசாரம்

தமிழினத்தின் மீதும், தமிழ் தொழிலாளர்கள் மீதும் அக்கறையில்லாத, ஏமாற்றிப் பதவிக்கு வரத் திட்டமிடும் இக் கட்சிகள் தான் தாழ்த்தப்பட்ட மக்களாகிய எங்களுடைய குறைகளைத் தீர்க்கப் போகின்றனவாம்! பொருளாதாரத்திலும் உரிமைகளிலும் தாழ்த்தப்பட்ட எங்களிடந்தான, தங்களுடைய பிரசாரம் எடுபடும் என்று எண்ணியஇவர்கள் தங்களுடைய பிரச்சாரத்தில் தீண்டாமையையும் சேர்த்து எங்களை ஏமாற்றித் தங்கள் வசப் படுத்தப் பார்த்தார்களேயன்றி, எங்கள் மீதுள்ள அக்கறையினுல் அல்ல தீண்டாமையொழிக்க இவர்கள் முற்பட்டது.

இக்கட்சிகளிலுள்ள தமிழ் தலைவர்களில் சிலர் உண்மையில் தீண்டாமை யொழிப்பில் அக்கறையுள்ளவர்கள் தான். அதை நாம் மறுக்கவோ, மறைக்கவோ இல்லை. அதற்காகத் தவருன பாதையில் தமிழினத்தை இட்டுச் சென்று ஏமாற்ற முயலும் இக்கட்சிகளைப் பின்பற்று[illegible] [illegible]யாமா? தனிப்பட்ட முறை[illegible] யில் இவர்களை நல்லவர்கள் என்று போற்ற நாம் தயங்கவில்லை. ஆனுல் இவர்கள் பின்பற்றும் கட்சிகள் தீங்கானவை யென்பதால் இவர்களை நாம் ஆதரிக்க முடியாது.

### ஆதரிக்கக் கூடாது

நல்லவர்களென்று இவர்களுக்கு நாம் வாக்குப் போட்டால், இந்த நல்லவர்களை ஏமாற்றி அந்த நயவஞ்சகச் சிங்களவர் நமது இனத்திற்கும், மொழிக்கும் இந்நாட்டில் இடமில்லாமல் செய்து விடுவார்கள். ஆகையால் சிறுபான்மைத் தமிழராகிய நாம் பொதுவுடைமைக் கட்சியையும், சமசமாஜக் கட்சியையும் ஆதரிக்கக் கூடாது. ஆதரித்தால் நமது இனத்திற்கும், மொழிக்கும் நாமே அழிவு தேடிக்கொண்டவர்களாவோம்.

### தமிழரசுக் கட்சி

இரு வேறு இனங்கள் வாழும் இலங்கைக்கு ஒற்றையாட்சி கூடாது, இணைப் பரசு தான் வேண்டும் என்று இரு இனங்களும் உரிமை பெற்றுப் பெருமையுடன் வாழ வழி கூறுகிறது தமிழரசுக்கட்சி. தமிழரசுக் கட்சி ஒன்றுதான் தமிழினத்தின் நல்வாழ்விற்காக, விடுதலைக்காகப் பாடுபடும் ஒரேகட்சி. நாடு, மொழி, குடி உரிமைகளைப் பெற்று நம்மினத்தின் ஏற்றத்தாழ்வுகளைப்போக்கி நந்தமிழருக்கு நல்வாழ்வளிப்பதைத் தன் கொள்கையாகக் கொண்ட கட்சி தமிழனையே தலைவனுகக் கொண்டு, உயர்சாதி மக்களின் எதிர்ப்புகளுக்கு அஞ்சாது, தீண்டாமையொழிப்பைத் தன் முக்கிய கொள்கைகளில் ஒன்ருகக்கொண்டு செயலாற்றும் தனிப்பெரும் கட்சி.

பதவி மோகத்தால் கொள்கை பிறழாது, மக்களிட்ட பணியை மனத்தில் கொண்டு செயலாற்றும் தன்மானத் தளபதிகள் மலிந்த கட்சி. மட்டக்களப் பான், மலைநாட்டான், யாழ்ப்பாணத்தான் என்ற வேற்றுமையைப் போக்கி, தமிழர், முஸ்லிம்கள் என்ற பேதத்தை நீக்கி, தீண்டாமையை ஒழிக்கச் செயலாற்றி தமிழினத்திடையே ஒற்றுமையை உண்டாக்கிய ஒரே கட்சி.

இன்று உரிமைப் போரின் உச்ச கட்டத்திற்கு வந்திருக்கும் நாம், ஒன்றுபட்டு, கொள்கை பிறழாது, உறுதியுடன் ஒரு கொடியின் கீழ் நின்று செயலாற்றி உரிமைப் போர் தொடுக்கக் கூடிய பிரதிநிதிகளையே தெரிவு செய்ய வேண்டும். பெரும்பான்மைத் தமிழினத்தின் ஒற்றுமையின்றி, மனமாற்றமின்றி நாம் தீண்டாமையை ஒழிக்க முடியாது. தமிழினத்தின் தனிப்பெரும் கட்சியான தமிழரசுக் கட்சியினுற்ருன் இப்பிரச்னையைத் தீர்க்க முடியும். பெரும்பான்மை மக்களின் வெறுப்பைச் சம்பாதித்துக் கொண்டு நாம் இப் பிரச்னைக்கு முடிவு காணமுடியாது.

### ஆதரவு தமிழரசுக் கட்சிக்கே

சிறுபான்மைத் தமிழராகிய எமக்கு தீண்டாமை ஒழிப்பு ஒரு முக்கிய பிரச்னை தான். ஆனுல் அதை விடப் பெரிய பிரச்னை நாம் தமிழரென்ற அடிப்படையில் நமது இன, மொழி, உரிமைகளைப் பெறுவது. கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்க எவராவது விரும்புவார்களா? இல்லை! அது போலவே நாமும் எமது இன, மொழி, உரிமைகளைச் சிங்களவருக்கு விற்று, தீண்டாமையை ஒழிக்க விரும்பவில்லை. ஆகையால் நமது இரண்டு முக்கிய பிரச்னைகளும் தீர்க்கப்படவேண்டுமானுல் தமிழரசுக் கட்சியையே தெரிவு செய்ய வேண்டும். தமிழ் நாட்டின் தனியொரு கட்சியாகத் தமிழரசுக் கட்சியைத் தெரிவு செய்து நமது உரிமைப் பிரச்னைகளுக்குத் தீர்வு காண்போம். சிறுபான்மைத் தமிழரென்று கருதப்படும் எங்களுடைய வாக்கு தமிழரசுக் கட்சிக்கே!

வெல்க தமிழரசு! ஒழிக தீண்டாமை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரிசி விலைக் குறைப்பு யு. என். பியின் தேர்தல் தந்திரம்

## இன்று சகாயங்கள் செய்வதாக வேஷம் போடுகிறார்களே—இவர்கள் அன்று என்ன செய்தார்கள்?

இலங்கையில் பல அரசியல் கட்சிகள் செயல்படுகின்றன. தமிழரசுக் கட்சியைத் தவிர, மற்றும் அரசியல் கட்சிகளுக்கு, மக்களின் ஏகோபித்த ஆதரவில்லை என்பதை சென்ற தேர்தல் நிரூபித்துவிட்டது. ஐக்கிய இலங்கையைச் சிருஷ்டிக்கப் போவதாகக் கூறும், யூ. என். பியின் வாக்குறுதியை இலங்கைச் சிங்களவர்கள் முதல் ஏற்றுக்கொள்ளவில்லை.

### முதலாளித்துவ பத்திரிகைகள்

யூ. என். பி. பணக்கார முதலாளிகளின் கட்சி, அக்கட்சிக்கும் ஏழைப் பாட்டாளி மக்களுக்கும் நடுத்தர வகுப்பாருக்கும், எவ்வித தொடர்பும் கிடையாது. அக் கட்சி வானத்தை வளைத்து மக்களுக்கு வருங்காலத்தில் உதவிகள் செய்யப் போவதாக, அக் கட்சியின் முன்னாள் தாசர்களும், முதலாளித்துவ பத்திரிகைகளான, "டைம்ஸ் ஆப் சிலோனும்," ஏரிக்கரைப் பத்திரிகைகளும் கூறுகின்றன. இது மாத்திரமா? அவைகள் பத்திரிகை தர்மத்துக்கு மாறாகச் செயல்படுகின்றன என்பதற்கு அப் பத்திரிகைகள் வெளியிடும் கேலிச் சித்திரங்கள் சான்று கூறி நிற்கும். "கொலட்" ஒரு கேலிச் சித்திரக்காரர். இன்று அவரை மக்கள் கேலி செய்யும் அளவிற்கு அவர் தரத்தில் இறங்கிவிட்டார்.

### சரடு

இத் தேர்தலில், யூ. என். பி. எதிர்ப்புச் சக்திகள் எல்லாம் ஒன்று சேர்ந்து விட்டமை இம் முதலாளித்துவப் பத்திரிகைகளுக்குப் பிடிக்கவில்லை போலும்! திருவாட்டி பண்டாரநாயக்காவைத் தாக்குவதன் மூலம் யூ. என். பி. வெற்றி பெற்றுவிடுமென இப்பத்திரிகைகள் கனவு காண்கின்றன? சுதந்திரக் கட்சி, தமிழரசுக் கட்சி இரகசிய ஒப்பந்தம், இலங்கை மற்றுமோர் தென்னகம் என்றெல்லாம் சரடு விடுகின்றன! இப் பொய்யுரைகள் மூலம் யூ. என். பி. பலம் பெற்றுவிடுமா? மந்திரத்தில் மாங்காய் விழுமா?

### தேர்தல் தந்திரங்கள்

"சோழியன் குடுமி சும்மா ஆடாது" என்று தென்னகத்தார் கூறுவர்." அரிசி விலைக் குறைப்பு இறைச்சி விலைக் குறைப்பு, பள்ளிச் சிறார்களின் இலவசப் பிரயாணம், சமய குரவர்களுக்குச் சலுகை, அரசாங்க ஊழியருக்கு வேலை நிறுத்தச் சம்பளம் ஆகியன தேர்தல் சூழ்ச்சியல்லவா? பச்சிளங்குழந்தைகளான பள்ளிச் சிறார்களின் வாயிலிருந்து பாலையும்-ரொட்டியையும் பிடுங்கியவர்கள் யார்? ஒரு நாழி அரிசியின் விலையை 75 சதமாக ஆக்கியவர்கள் யார்? பஸ்கள், முதலாளிகள் கையில் உலக முடியுமட்டும், இருக்க வேண்டுமென நினைத்தவர்கள் யார்? 10 லட்சம் தமிழ் மொழி பேசும் இனங்களை அரசியல் அனாதைகளாகச் செய்தவர்கள் யார்? இந்தியர்களின் வாக்குரிமைகளைப் பறித்தவர்கள் யார்? கடுமையான குடியேற்ற— வெளியேற்றக் கட்டுப்பாட்டை உண்டாக்கியவர்கள் யார்? இலங்கையை மற்றுமோர் தென்னாபிரிக்காவாகச் செய்யும் நோக்குடன், அரிசிப் பங்கீட்டு அட்டைகளில் நிற பேதங்களை உண்டாக்கி, இலங்கைத் தமிழர்கள் பெயரும், இலங்கை முஸ்லிம்களின் பெயரும், இந்தியத் தமிழர்களைப் போலும் இந்திய முஸ்லிம்கள் போலும் காணப்படுவதால் இவர்கள் எல்லோரும் இலங்கைக் குடிகளாகயிருக்க முடியுமா எனச் சந்தேகம் கொள்கிறவர்கள் யார்? இந்த யூ. என். பி. வர்க்கம்தான்! பள்ளிச் சிறார்களுக்கு இலவசப் பிரயாண வசதிகள் செய்து கொடுப்பதாகப் பறையடிக்கும், இந்த யூ. என் பி. ஆட்சிக்கு வருமானால்? அடுத்த நாள் "இ. போ. ச." கலைக்கப்பட்டு பஸ்கள் எல்லாம் முதலாளிகளுக்குப் போய் விடும்.

அல்—ஹாஜ்
வி. எம். ஷம்சுத்தீன்

### மக்கள் கருத்து

ஒரு நாழி அரிசியின் விலையை 75 சதத்திலிருந்து குறைப்பதாயின், இலங்கை அரசாங்கம் "வங்குரோட்" ஆகிவிடுமெனக் கூறிய யூ. என். பி. இன்று அரிசி விலை

(13ம் பக்கம் பார்க்க)

# மக்கள் குரல்

## இலங்கை மற்றொரு தென்னாபிரிக்கா?

தென்னாபிரிக்காவில் இன வேற்றுமை உச்ச மடைந்துள்ளது. அதற்கு வீழ்ச்சியும் சமீபத்தில் வர விருக்கின்றது. இம்மாதிரியான இன வேற்றுமையை இங்கு உண்டு பண்ண யு. என். பி. காபந்து அரசாங்கமும், இரண்டு வித உணவுப் பங்கீட்டரிசி விநியோக முறையைப் புகுத்தி உணவிலும் புது வேற்றுமையை யுண்டு பண்ண வழி வகுத்துள்ளது! கள்ளத் தோணிகளைக் கண்டு பிடிக்க முயலுகிறதாம்! சில இன வெறியர்கள் மனதில் 15 லட்சம், தமிழ் மொழி பேசும் இனங்களும் "கள்ளத் தோணிகளாகவே" தென்படுகின்றனர்? இவர்களுள் நல்ல தோணிகள் யார்?

இது போக, அரிசிக் கூப்பன்கள் விநியோகிப்பதில் பல சிக்கல்கள் காணப்படுகின்றனவாம்! இலங்கைமுஸ்லிம்கள், இலங்கைத் தமிழர்கள், இலங்கை கிறிஸ்தவர்கள் பெயரும், இந்தியத் தமிழர்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் பெயரும் ஒன்று போல் காணப்படுகின்றனவாம்! புளியங்குளம் என்ற தமிழ்ப் பெயர், "புளியங்குளமயா" என்று சிங்கள மயமாகச் சமைந்ததைப்போல், "யு. என். பி," தற்காலிக அரசாங்கம், "இரத்தின சிங்கம்" போன்ற தமிழ்ப் பெயர்களை "இரத்தின சிங்கோ" என்று வருங்காலத்தில் மாற்றிக் கொள்ளும்படி தமிழர்களுக்கு யோசனை கூறலாம்? இப்படிச் செய்தால், பெயர்கள் வித்தியாசமாகக் காணப்படா?

—வி. எம். எஸ்.

யாமையால் "தமிழ்", "முஸ்லிம்" என்று எழுதியிருந்தாலோ அல்லது ஒன்றும் எழுதாதுவிட்டாலோ அத்தனை பெயர்களும் இலங்கையரல்லாதாரெனக் கணிக்கப்பட்டு, பிரத்தியேக புத்தகம் வழங்கப்படுகிறார்கள், பலவந்தமாக.

இலங்கையரென்பதற்கு போதிய அத்தாட்சி காட்டத் தவறிய கொழும்புத் தமிழர்களுக்கும் ஏன்,யாழ்ப்பாணத் தமிழர்களுக்கும் பிரத்தியேக புத்தகங்கள் கொடுபட்டுள்ளன.

கருப்பன், முனியாண்டி போன்ற பெயர்களைக் கண்டால்சந்தேகத்தோடு பார்க்கிறார்கள். 'இலங்கைத்தமிழ்' என எழுதியிருந்தாலும் பிரத்தியேக புத்தகமே கொடுக்கிறார்கள்.

அநீதி பெருமளவில் விளைகிறது. உணவு இலாகா பாண்ஸ் பிளேஸ் கிளைக் காரியாலயத்தில் ஏழைத் தமிழ் தொழிலாளர் பெரிதும் துன்பப்படுகிறார்கள். காலை உணவு கூட உண்ணாது ஏழு மணிக்கு வந்து 'கியூ' வரிசையில் நின்று மாலை 5 மணிக்குத்தான் புத்தகம் பெற்றுக் கொண்டு போகிறார்கள்.

தினமும் ஒரு மனிதப் பிறவியாவது பசியால் மயக்கமுற்று விழுவதை அங்கு பார்க்கலாம்.

இந்தியத் தமிழ் பேசும் இனத்தின் துன்பத்திற்காக போராடும் தமிழரசுக் கட்சி இவ்விஷயத்திலும் கவனம் செலுத்த வேண்டும்.

—ஒரு தமிழன்

## அரிசி புத்தகம் பெற இலங்கையரல்லாதார் படும் அவதி

இலங்கையரல்லாதாருக்கு பிரத்தியேக அரிசிப் புத்தகம் வழங்கும் முறையில் பெரும் அநீதி புரிகிறார்கள் அதிகாரிகள். அரிசிப் புத்தகம் பெறுதற்கென நிரப்பப்பட்ட பத்திரத்தில் தம் இனம் 'இலங்கைத் தமிழ்' என எழுதாது அறி

## தமிழர்களுக்கு ஓர் எச்சரிக்கை

இலங்கையின் பல பகுதிகளிலும் வாழும் தமிழ் மக்களுக்குப் புதுப் புதுச் செய்திகளைச் சுடச்சுடத் தெரிவித்து வரும் ஒரேயொரு பத்திரிகை சுதந்திரன் தான். சென்ற 12-6-60 இதழில் "கைமுனு பெற முனை" என்ற பெயரில் குண்டர் படை அமைக்கப்படும் அந்தரங்கச் செயலை வெளிப்படுத்தியமைக்குத் தமிழ் மக்கள் யாவரும் நன்றிகூறக் கடமைப்பட்டுளர். இந்தச்

(13-ம் பக்கம் பார்க்க)

# அரசாங்க நியமனத்தில் பெரிய பாரபட்சம்!

## படம் தயாரிக்கக் கடன் தரும் குழுவில் ஒருவரே தமிழர்!

சினிமாப் படங்களைத் தயாரிக்கும் நிறுவனங்களுக்கு அரசாங்கம் கடன் கொடுத்து உதவவிருக்கிறது.

இப்பொழுது கடன் வாங்குவதற்குத் தகுதிபெற்றவர்கள் தானா என்பதை ஆராய்ந்து கடன் கொடுத்து அதை மீண்டும் வசூல் செய்வதற்கான குழு ஒன்றை அரசாங்கம் ஏற்படுத்தி, அதற்கான நிர்வாகிகளையும் நியமித்துள்ளது.

சுமார் ஒன்பது பேர்களைக் கொண்ட இந்தக் குழுவில் ஒரே ஒரு தமிழரைத் தவிர மற்றவர்களையெல்லாம் வடநாட்டுக்காரர்களாக பொறுக்கி எடுத்து, நியமனம் செய்து பாரபட்சம் காட்டியுள்ளது இந்திய அரசாங்கம்.

மொத்தம் 4 பம்பாய்க்காரர்களும் 3 டெல்லி அதிகாரிகளும், 1 கல்கத்தாக்காரரும், 1 தமிழ்நாட்டைச் சேர்ந்தவரும் குழுவில் இருக்கிறார்கள்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த டி. எஸ். ராஜம் (பிரபல டி. எஸ். பஸ் கம்பனியின் அதிபர்) தான் குழுவில் உள்ள ஒரே ஒரு தமிழர்.

இந்தியாவிலேயே அதிகப் படங்கள் தயாரிக்கும் தமிழ்நாட்டுக்கு ஒருவரும், தயாரிப்பில் இரண்டாவது ஸ்தானத்தில் இருக்கும் பம்பாய்க்கு நால்வரும், இந்தக் குழுவில் பிரதிநிதிகளாக நியமிக்கப்பட்டிருப்பது வேடிக்கையாகவும் இருக்கிறது என்று தமிழ்ப்படக் கலைஞர்கள் கருத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தியப் படங்களைத் தேர்வு செய்யும் குழுவிலும் ஏ. எல். எஸ். புரோடக்ஷன் அதிபர் ஏ. எல். சீனிவாசனைத் தவிர மற்றவர்கள் எல்லாம் வட நாட்டார்கள் என்பதும் இதை ஏ. எல். [illegible] அணிமையில் வெளியிட்டிருக்கிறார் என்பதும் இங்கு நினைவில் கொள்ளத்தக்கது.

# வருமானம் ரூபா 100 என்றால் 500 தர்மம் செய்கிறார் நடிகர்

## கே. ஆர் ராமசாமி பற்றி எஸ். டி. சுந்தரம்

"வருமானம் நூறு ரூபாய் என்றிருந்தால் அதில் ஐம்பதையோ எழுபத்தைந்தையோ தர்மம் செய்யும் வள்ளல்களை நாம் பார்த்திருக்கிறோம். ஆனால் வருமானம் நூறு என்று இருக்கும்போது ஐந்நூறு தர்மம் செய்யும் பேர்வழியைக் காண முடியுமா? ஆம், இருக்கிறார் ஒருவர். நம்முடைய நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ராமசாமி அப்படிப்பட்டவர்—"எஸ். டி. எஸ். பிக்ஷர்ஸ் அதிபரும் பிரபல கதை வசன கர்த்தாவும் டைரக்டருமான திரு. எஸ். டி. சுந்தரம் இவ்வாறு கூறினார்.

நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ராமசாமி சென்னை மேல் சபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டதையொட்டி தென் இந்திய நடிகர் சங்கம் நடத்திய பாராட்டு வைபவத்தில் திரு எஸ். டி. சுந்தரம் மேற் கண்டவாறு பேசினார்.

அவர் பேசுகையில்மேலும் சொன்னதாவது:—

"நடிப்பிசைப் புலவர் திரு கே. ஆர். ராமசாமி வரவுக்கு மீறித் தர்மம் செய்வதால் தான், எத்தனை புகழ் அடைந்தும், தமக்கென ஒரு பங்களா, கார் எதுவும் இல்லாமல் இருந்து வருகிறார். அதைப்பற்றி அவருக்கு வருத்தம் சிறிதும் இல்லை. தம்முடைய நண்பர்களில் பலருக்கு சொந்த பங்களா, கார் வைத்திருக்கும் வசதிகள் இல்லையே என்றுதான் அவருக்கு கவலை."

திரு. எஸ். டி. சுந்தரம் தொடர்ந்து பேசுகையில், "இனிமேலாவது கே. ஆர். ஆர். தன்னவத்[illegible] சிறிது காலத்தை ஒதுக்கிக் கொள்ள வேண்டும்" என்று புத்திமதி கூறினார்.

# ஹொலிவூட் படாதிபதி அல்பேர்ட் ஹிச்கொக்

## அவர் அறிந்த ஒரே ஒரு தமிழ் நடிகை சூர்யகுமாரி!

ஹொலிவூட்டில் 'சஸ்பென்ஸ்' படங்கள் தயாரிப்பதில் தலைசிறந்தவர் என்று பெயர்பெற்ற அல்பேர்ட் ஹிச்கொக் அறிந்த ஒரே ஒரு தமிழ்ப் பட நடிகை சூர்யகுமாரிதான். இந்தத் தகவலை அவர் ஜப்பானில் நடிகை ராஜசுலோசனாவிடம் கூறினார்.

நடிகைகள் (படக் காட்சிகளில்) முத்தமிடலாமா என்ற பிரச்னையில் 'முத்தமிடலாம்-தாராளமாக' என்ற கட்சியைச் சேர்ந்தவர் சூர்யகுமாரி. 'அதிர்ஷ்டம்' என்ற தமிழ் படத்தின்மூலம் சென்னைப் படவுலகில் நுழைந்த சூர்யகுமாரி ஒருசில படங்களில் நடித்ததோடு 'அவுட்' ஆகிவிட்டபோதிலும் அதிர்ஷ்டம் அவர் பக்கம் நிற்கிறது. அல்லது ஹிச்கொக் அவரையே இன்னமும் நினைவில் வைத்துக் கொண்டிருப்பாரா? அதைப் போய் ராஜசுலோசனாவிடம் சொல்லியிருப்பாரா?

படங்களில் அதிகமாக நடிக்காமல் எப்படிப் புகழ் பெற்றார் சூர்யகுமாரி?

வடக்கே போய் இரண்டொரு இந்திப் படங்களில் தலையைக் காட்டினார்.

லண்டன் சென்று பி. பி. ஸியில் பேசினார்; பாடினார்.

அமெரிக்கா சென்றார். ஹொலிவூட்டில் காலடி வைத்தார். ஹிச்கொக்கோடு அறிமுகமானார். இன்னமும் அவர் நினைவிலும் மற்றங்குள்ளவர்கள் நினைவிலும் அவர் இருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவிலிருந்தும் . . .

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

எதுவும் நான் சொல்ல வேண்டியதில்லை. அவருடைய கடிதத்திலிருந்து ஒரு பகுதியைப் பார்த்தாலே போதும்.

"......25-ந் தேதி திங்களன்று டொலர் 25-00 மணி ஓடர் மூலம் அனுப்பியிருக்கிறேன். நான் சிங்கள அரசாங்க உத்தியோகத்தனாக இருப்பதனாலும் எங்கள் அரும் பெரும் தலைவருக்கு இதை நேரில் அனுப்ப முடியாததினாலும் சுதந்திரன் ஆசிரியராகிய உங்கள் மூலம் அனுப்புகிறேன் மூன்று வாரங்களில் இத்தொகையின் பெறுமதியாக ரூபா 116/49 உங்களுக்குக் கிடைக்கும். தயவு செய்து இத் தொகையைத் தமிழரசுத் தந்தையிடம் கொடுத்து தமிழரசுத் தேர்தல் நிதியில் சேர்த்துக் கொள்ளுமாறு சொல்லுங்கள். கடிதத்தையும் தந்தையிடம் சமர்ப்பிக்கவும்.

ஒரு முக்கியமான விஷயம். நான் பணம் அனுப்பிய செய்தி தமிழரசுத் தந்தையையும் தங்களையும் விட வேறு யாரும் அறியக் கூடாது. இந்த ரகசியத்தை நீங்கள் காப்பாற்றியாக வேண்டும். பணம் கிடைத்தவுடன் எனக்கு அறிவித்தல் தரின் மிகவும் நன்றியுடையவனாக இருப்பேன்.

ஜூலை 20-ந் தேதி நடைபெற விருக்கும் பொதுத் தேர்தலில் எமது கட்சிக்கு சம்பூரண வெற்றி கிடைக்க இறைவனை வேண்டிக் கொண்டிருக்கிறேன்.

மூன்று வருடங்களுக்கு முன்பாக சுதந்திரப் போராட்டத்துக்கு தமிழரசுத் தலைவர்கள் நிதி உதவி கோரியபோது நான்...யில் கடமையாற்றிக்கொண்டிருந்தேன். அப்போதும் என்னால் இயன்றளவு சேகரித்து உதவினேன். அதன் பின்னர் இப்போது தான் சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது..............."

இந்த அரசாங்க உத்தியோகத்தர் தமிழரசுக் கட்சிக்கு நிதி உதவி அளிக்க சந்தர்ப்பம் எப்போது கிடைக்கும் என்று எதிர்பார்த்திருக்கும் அளவுக்கு ஆர்வம் மிக்கவராக விளங்குகிறார்.

இன்னொரு அன்பர் பெயர் ஊர் எதுவும் தெரிவிக்கவில்லை. ரூபா 10/— அனுப்பியிருக்கிறார். அவர் எழுதுகிறார்.

"நேர்மையும்; நீதியும், உறுதியும், பெருந்தன்மையும் ஒருங்கே அமையப் பெற்ற, இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களின் உதய தாரகையும், எங்கள் மதிப்பிற்கும் அன்பிற்கும் உரியவருமான தமிழரசுத் தந்தை அவர்களே வணக்கம்.

பெயர் குறிப்பிட்டு நான் பெருமைப்பட விரும்பவில்லை. ஆகையினால் என்னை மன்னித்து மக்கள் விடுதலை இயக்கத்துக்கு என் அன்புக் காணிக்கையாக இத்துடன் நான் அனுப்பும் ரூபா 10/— போஸ்டர் ஓடரை அன்பு கூர்ந்து ஏற்றுக் கொள்ளுமாறு பணிவன்புடன் வேண்டிக் கொள்ளுகிறேன்."

சுதந்திர இயக்கம் என்றதும் கடல் கடந்து தொலை நாடு சென்ற அரசாங்க ஊழியரின் உள்ளம் துடிக்கிறது; பள்ளி மாணவியின் இதயம் பூரிக்கிறது. இன்னும் தம்மைக் காட்டிக்கொள்ள விரும்பாத எத்தனையோ பேரின் மனதில் ஆர்வம் பிறக்கிறது. தேர்தல் நிதிக்கு தம்மால் ஆன தொகை வழங்கி மகிழ்கிறார்கள். இதுவரை வழங்காதவர்கள் இன்னும் காத்திருக்க நாளில்லை. இதுதான் தருணம்.

## அரிசிவிலைக்குறைப்பு

(12ம் பக்கத் தொடர்ச்சி)

யைக் குறைத்து நட்டமடைய வேண்டிய நியாயமென்ன? இதற்காகும் செலவுகளை ஈடு செய்ய யூ. என். பி. காபந்து அரசாங்கம் கடன் தானே வாங்க வேண்டும்? இப்படிக் கடன் திரட்ட யூ. என். பி. காபந்து அரசாங்கத்துக்கு உரிமையுண்டா? அப்படித் திரட்டப்பட்ட கடன் செல்லுபடியாகாதென வருங்கால அரசாங்கம், உத்திரவைப் போட்டு விட்டால் பணம் கொடுத்தவர்களின் கதியென்னவாகும் என்றெல்லாம் மக்கள் பேசிக் கொள்வதில் சில உண்மைகள் இருக்கலாமல்லவா? எனவே தான் இக்குறைப்புகள் எல்லாம் தேர்தல் தந்திரமெனக் கருத்துப் பரிமாறிக் கொள்கின்றனர்.

## தென்மராட்சி இசைக் கலை மன்றம்

தென்மராட்சி இசைகலை மன்றத்தின் ஐந்தாவது வருடாந்தக் கூட்டம் அணிமையில் டிரிபேக் கல்லூரி மண்டபத்தில் திரு. கே. இராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது.

பின்வருவோர் மன்ற நிருவாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்:-

போஷகர்கள்: திரு. ம. ஸ்ரீகாந்தா, திரு. எஸ். விநாசிதம்பி, திரு. கே. வேலாயுதம்பிள்ளை, தலைவர். திரு. கே. இராமச்சந்திரன், உபதலைவர்கள்: திரு. ஆர். டி. சுப்பிரமணியம், திரு. கே. வேலுப்பிள்ளை, காரியதரிசி: திரு வி. நடேசன், உபகாரியதரிசி — தனாதிகாரி திரு. கே. இராமநாதன்.

## கடவுளும் மனிதனும்

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

எங்கெல்லாமோ ஓடினான். அவனுடைய பாதையில் கடலோ குளமோ குறுக்கிட்டது. குதித்துவிட்டான்.

நிசபதம்.........

☆

கடவுள் அரைக்கண் மூடி அமைதியை படைத்துக்கொண்டிருந்தார்,

தேவி ஓடி வந்தாள்.

கடவுளின் காலடியில் விழுந்து பஞ்சாங்கமாக வணங்கி எழுந்து நின்றாள். தேவியின் உடல் லேசாக நடுங்கியது. நெற்றியில் நீர் முத்து முத்தாகத் துளிர்த்தது.

கடவுள் கண்களைத் திறந்தார்.

"தேவி! மனிதர்கள் எப்படி வாழ்கின்றார்கள்?" என்று கடவுள் கேட்டார்.

"எப்படியோ வாழ்கிறார்கள்" என்றாள் தேவி.

"அப்படியென்றால்?"

"புத்திசாலித்தனமாக வாழ்கிறார்கள்"

"அப்படியென்றால்?"

"அவர்களுக்காக நாம் கவலைப்படத் தேவையில்லை"

"அப்படியென்றால்?"

"நாம் படைப்பதோடு நின்றுவிட வேண்டியது தான்."

இதற்குப்பதிலாக கடவுள் ஒன்றும் சொல்லவில்லை; ஒரு காரியம் செய்தார்.

சிரித்தார்.

## மக்கள் குரல்


(12-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்தியும் "டட்லியின் வெளிவேஷம்" எனும் உங்கள் தலையங்கமும் தமிழினத்துக்குவிரைந்துவந்து கொண்டிருக்கும் பேராபத்தை நன்கு புலப்படுத்துகின்றன. நிலைமை மோசமாகி நெருக்கடி ஏற்படாமல் இப்பொழுதே தமிழர்கள் ஒன்றுபட்டுக் கடமையாற்றல் வேண்டும். அன்றேல் 1958 இல் தோன்றிய வகுப்புக் கலவரத்திலும் கோரம் மிக்க வகுப்புக் கலவரத்தை யு. என். பி. உண்டாக்கிவிடும் போலிருக்கிறது. சென்ற வாரம் யு. என். பியின் "சியரட்ட"ப் பத்திரிகையில் இப் பெரமுனையிற் சேருமாறு சிங்கள வாலிபர்களுக்கு விடப்பட்ட அழைப்பு வகுப்புக் கலவரத்தீயை மூட்டுவதற்கு விறகுகளை அடுக்கியதைப் போலாகும்.

—நா. செல்லையா

திருக்கோணமலை வீதி,
கண்டி.


ஜூலை 2-ம் திகதி சனிக்கிழமை முதல்
எல்பின்ஸ்டன் ரெக்ஸி
மற்றும் 8 திரைகளில்
எம். ஜி. ராமச்சந்திரன்,
ஜமுனா, ராஜசுலோசனா,
கண்ணாம்பா, தங்கவேலு
ஆகியோர் நடிக்கும்
தாய் மகளுக்கு
கட்டிய தாலி


இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!
செல்லமஹால் (2-வது வாரம்)
பாலாஜி-ஜெயஸ்ரீ நடித்த
தெய்வ பலம்

எதிர்பாருங்கள் வெகு விரைவில்!
சிலோன் என்டடெயின்மென்ட்ஸ் திரைகளில்
எஸ். எஸ். ராஜேந்திரன்—ராஜசுலோசனா
பாலையா—வி. கே. ராமசாமி—வி. ஆர். ராஜகோபால்
நடிக்கும்
சங்கிலித் தேவன்

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!
முருகன் (இந்துப்பிட்டி)
சிவாஜி கணேசன்—பத்மினி
தங்கவேலு—எஸ். வி. சுப்பையா
ராகினி—எம். என். ராஜம்
நடித்த
மங்கையர் திலகம்

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!
ராஜேஸ்வரா (மட்டக்களப்பு)
சிவாஜி கணேசன்
பண்டரிபாய்-மாலினி
நடித்த
அவள் யார்

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!
சென்ட்ரல் (பருத்தித்துறை)
ஏ. நாகேஸ்வரராவ்—ஜமுனா
நடித்த
கண் நிறைந்த கணவன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரளி பிடித்த திருடன்

முரளி ஆம், இதுதான் அவனின் பெயர். எட்டாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தான். அவனுக்கு அப்போ விடுமுறை நாள். ஏதோ, ஒரு நாவலை எடுத்து வாசித்துக்கொண்டிருந்தான். 'துப்பறியும் லிங்கம்' என்பது அந் நாவலின் பெயர்.

அவன் படித்துக்கொண்டிருந்த வேளை இரவு. அந்த நாவலில் லிங்கன் என்பவன் ஒரு திருடனைப் பிடிக்கும் போது பல பயங்கரமான செயல்களைச் செய்கிறான். இந்தப் பாகத்தைப் படிக்கும்போது முரளிக்கு மிகவும் பயமாக இருந்தது. ஆதலால் அவன் நாவலை மூடி வைத்துவிட்டுப் படுத்துக் கொண்டான். தூங்கியும் போய்விட்டான்.

தூக்கத்தில் அவன் ஒரு சொப்பனம் கண்டான். தன் வீட்டில் ஒரு திருடன் நுழைவதுபோலவும் பல விலை உயர்ந்த சாமான்களைத் திருடுவதுபோலவும் கனவில் தோன்றியது. இதைக்கண்ட முரளி மிகவும் பயந்துபோய் விட்டான். ஐயோ திருடன்! ஐயோ திருடன்! என்று உரக்கக் கத்தத் தொடங்கினான்.

இந்த சப்தத்தைக் கேட்டவுடனேயே வீட்டில் உள்ளவர்கள் யாவரும் எழுந்து விட்டார்கள். முரளி கத்தியது உண்மைதான் என்று நினைத்துத் திருடனைத் தேட ஆரம்பித்தனர்.

அப்பொழுது, என்ன ஆச்சரியம்! உண்மையாகவே ஒரு திருடன் பணம் இருக்கும் இரும்புப் பெட்டியை உடைத்துவிட்டு அறையில் பதுங்கிக் கொண்டிருப்பதைக் கண்டார்கள்! அவனைக் கையும் களவுமாகப் பிடித்து பொலீசாரிடம் ஒப்புவித்தார்கள்.

வெகு நாட்களாக பொலீஸார் கையில் சிக்காமல் அவ்வூரில் கொள்ளை அடித்துக்கொண்டிருந்த ஒரு பிரபல திருடன் கள்ளாறன் என்பது தெரிய வந்தது. பொலீசார் வேலையைச் சுலபமாக்கிய முரளிக்கு அரசியலார் ஐந்நூறு ரூபாய் பரிசளித்தார்கள். இவ்வளவுக்கும் காரணம் முரளியின் அதிர்ஷ்டம் தானே சந்தேகமென்ன?

—சந்தி வெளிகிருஷ்




# செல்வம்

"பணமில்லாதவர் பிணம்," "பொருளில்லார்க்கு இன்பமில்லை" என்பது முதுமொழி. பணச் செல்வம், பொருட் செல்வம், கல்விச் செல்வம் ஆகிய இவைகள் மூன்றும் ஒருவருக்கு அமைந்திருப்பதில்லை. பணம் இருந்தால் கல்வியிருக்காது. கல்வியிருந்தால் பொருளிருப்பதில்லை. ஆனால் இம் மூன்றிலும் முன் கூறப்பட்ட இரண்டும் இல்லா விட்டால் இன்றைய உலகில் உன்னதமாய் வாழ வழியில்லை. பொருள், கல்வி இவைகளைக் குறைவின்றிப் பெறுவதற்கு பணம் கட்டாயமாகக் கைவசமிருக்க வேண்டும். செல்வர்களாயிருக்க விரும்பாத மனிதர்களே இருக்க முடியாது. எல்லோரும் உல்லாசமாக வாழத்தான் விரும்புவர். உதாரணமாக செல்வத்தில் மனிதருக்கு ஆசையில்லா விட்டால் திருட்டுத் தொழிலே உலகில் நடைபெறுதல்லவா? சிலர் வயிற்றுக்காகத் திருடுகிறார்கள். ஆனால் பலர் தாங்கள் தொழில் புரியும் அலுவலகங்களிலே திருடிப் பெட்டிக்குள் பதுக்கி வைத்து இருந்தாற் போல் பெரிய பணக்காரராகி விடுகிறார்கள். கீழே யுள்ள பாடலில் செல்வமில்லாதவர்களின் நிலையை விளக்குகிறார் ஒரு புலவர்:

"பொருளில்லார்க் கின்ப
மில்லை
புண்ணியமில்லை என்றும்
மருவிய கீர்த்தியில்லை மாந்த
ரிற் பெருமை யில்லை
கருதிய கருமமில்லை கதி
பெற வழியுமில்லை
பெரு நிலந்தனிற் சஞ்சாரப்
பிரேதமாய்த் திரிவரன்றே"

செல்வமற்றவர்களால் பிறருக்கு எந்த வித நன்மையும் செய்ய இயலாது. அவர்களுக்குச் சிறப்போ, மதிப்போ மனிதரிடையே கிடைக்க மாட்டாது. நினைத்த காரியத்தைச் சாதிக்கவோ அல்லது அதிலிருந்து மீழ்வதற்கோ முடியாது. அவர்கள் இன்பம் மலிந்தியங்கும் இவ்வுலகில் வாழ்வதில் இன்பமற்றவர்களாய் வெறும் பிரேதமாய்த் திரிவர். செல்வத்துடன் வாழ்ந்தால் இப்படிச் சித்திரவதையடைய வேண்டிய அவசிய மேற்படாது. அதனால் செல்வத்தையடைய எந்தத் தீய செயலையும் மனிதன் செய்வர். அதனால் தான் பொய்யாமொழிப் புலவர் எவ்வளவு சிறப்பைத் தருகின்ற செல்வத்தைப் பெறுவதாக இருந்தாலும் பிறருக்குத் துன்பம் செய்யாதிருத்தல் வேண்டும் எனக் கூறுகிறார். அதையே கீழேயுள்ள குறள் விளக்குகிறது:

"சிறப்பீனும் செல்வம் பெறி
னும் பிறர்க்கு இன்னா
செய்யாமை மாசற்றார் கோள்"

ஆடம்பரமாக உண்டு, உடுத்து, உல்லாசமாகக் கவலையின்றி வாழ்வதற்குப் பலவே இல்லை. அவர்கள் குணம், போக்கு, பேச்சு அத்தனையும் தலை கீழாக மாறி விடுகிறது. "வெயிலின்" அருமை நிழலிற் தெரியும்" என்பது போல் அப்போது தான் செல்வத்தின் அருமை அவர்களுக்குப் புலனாகிறது. ஆகவே மேலும் மேலும் பணம் திரட்டுவதில் தான் அவர்கள் முற்படுவர். வறியவர்கள் அவர்களுக்குத் தரித்திரராகக் காட்சியளிப்பர். செல்வச் செருக்கு அவர்களுக்குத் தலையில் ஏறி விடும்.

"செல்வம் வந்துற்ற காலைத்
தெய்வமும் சிறிது பேணார்
சொல்வன தெரிந்து சொல்
லார் சுற்றமும் துணையும் நோக்
கார்.
வெல்வதே நினைவதல்லால்
வெம்பகை வலி தென்றென்
ணார்
வல்வினை விளையும் 'ஓரார்
மண்ணின் மேல் வாழும் மாந்
தர்"

## தூறல்

அந்த ரத்தே நின்றிரு
அரக்கர் நூலை நூற்றல்போல்
வந்து தூறல் சிந்துது!
வானத் தறி குமுறுது!

எந்தச் சேலை நெய்யவோ
இந்தத் தூறல் நூல்களோ
என்று உங்கள் சிந்தையில்
எழுவ துண்டோ கேள்விகள்?

உலகம் என்னும் திரௌபதை
உடுத்திருந்த பசுமையாம்
அழகுத் துகிலைத் துச்சாதனன்
ஆகி வெய்யோன் களைவதைக்

கண்டு துன்பங் கொண்டுமே
கனிவு நெஞ்சில் விண்டெழ
கொண்டல் என்னும் கண்ணனே
கை கொடுக்க வருகிறான்!

கன்னி அவள் கண்ணியம்
காத்திடவே பசுமையாய்
மின்னும் பயிர்ச் சேலையை
மாயோன் முகில் நெய்கிறான்!

—பொன்னம்பலம்.

பணச் செல்வம் அவசியம் வேண்டும். துறவி கடவுளைத் தியானிப்பதில் இன்பமடைகிறான். கலைஞன் கலையை வளர்ப்பதில் இன்பமடைகிறான். இவர்களைப் போல தான் செல்வனும் தன் செல்வாக்கைக் கண்டு இன்பமடைகிறான். பணச் செல்வமிருக்கிறதே அது வருவதும் போவதும் ஒரு விசித்திரந்தான். பணம் கூத்தாடு மிடத்திற்குச் சனங்கள் கூட்டம் கூட்டமாய் வந்து, கூத்து முடிந்ததும் கூட்டம் ஒருவருமில்லாமல் கலைவதைப் போல் போய் விடும். ஆகவே இந்த நிலையற்ற செல்வத்தைப் பெற்ற அப்பொழுதே நிலையான அறங்களைச் செய்ய வேண்டும் எனக் கூறுகிறது வள்ளுவரின் சொல்லமுதம்:

"கூத்தாட்டு அவைக் குழாத்
தற்றே பெருஞ் செல்வம்
போக்கும் அது விளிந்தற்று"

"அற்கா இயல் பிற்றுச் செல்
வம் அது பெற்றால்
அற்குப ஆங்கே செயல்"

ஆயின் செல்வம் வந்த[illegible] இப்படியா செய்கிறார்கள்? இல்லை. இல்

மனிதர் செல்வத்துடனிருக்கும் போது கடவுளை வணங்கவோ, கதைப்பதைச் சிந்தித்துக் கதைக்கவோ மாட்டார்கள். அது மட்டுமா? உற்றார், உறவினரையும் சிறிது நினைக்க மாட்டார்கள். கொடிய பகைவராக இருந்தாலும் வெல்வதிலேயே கண்ணாயிருப்பார்கள். இப்படிப் பட்டவர்கள் தான் உலகில் வாழும் மனிதர் என்று கூறுகிறார் ஒரு புலவர். ஆகவே செல்வமுடையவர்கள் பிறருக்கும் (இல்லாதவர்களுக்கு) பகிர்ந்து கொடுத்து பிற உயிர்களையும் காப்பாற்றுதல் வேண்டும். இதுவே எல்லா அறங்களிலும் தலை சிறந்த அறமாகும் என்கிறார் வள்ளுவர்:

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பு
தல் நூலோர்
தொகுத்தவற்று ளெல்லாம்
தலை.

—"மலர்ச்சிமகள்"

வளர்மதி—சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப் படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை "வளர்மதி"யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர்மதி" C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12 என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும்.

**வளர்மதி**

**சுதந்திரன் மாணவர் மன்றம்**

**அங்கத்தவர் மனுப்பத்திரம்**

இல. 8.

பெயர் ..........................................

பாடசாலை ..........................................

விலாசம் ..........................................

..........................................

பெற்றோர் அல்லது ஆசிரியர் கையொப்பம் .................... கையொப்பம்

# '....உன்னோடு வாழ்தல் அரிது'

-பூங்குன்றன்-

உன்னோடு கூடி வாழ்தல், எனக்கு அருமையாக இருக்கின்றது; முடியாமல் இருக்கின்றது. அதனாலேதான் உன்னை நான், 'துன்பத்தை மிகச் செய்கின்ற' என்ற பொருளிலே, 'இடும்பை கூர்' என் வயிறே என்று விளிக்கின்றேன்! திடீரென்று இந்த முடிவுக்கு நான் வந்துவிடவில்லை. நன்றாக ஆராய்ந்த பின்புதான் சொல்கிறேன், கேள்!

"இன்று உணவு கிடைக்கவில்லை; ஆதலினால், ஒருநாள் உணவை விட்டிரு என்றால், விட்டிருக்க மாட்டாய்; அது தான் போகட்டும். மிகுதியாக உணவு கிடைத்த போது நீ என்ன செய்கின்றாய்? பல நாளைக்குச் சேர்த்து உண் என்று உன்னை நெருக்குகிறேனா? இல்லையே. இரண்டே இரண்டு நாளைக்குரிய உணவை மட்டும் ஏற்றுக்கொள் என்றால், அதுவும் முடியாது என்கிறாய். அப்படியாயின், நான் என்ன செய்வேன்".

"எந்தநாளும் ஒழுங்காக உணவு கிடைக்கிறதா? நீயே எண்ணிப்பார்! உனக்கு உணவு தேடுவதிலே நான் படும் துன்பங்களை நீ அறிந்திருந்தும், ஒருநாளாவது எனது துன்பங்களுக்காக இரங்கியேனும் என்னோடு ஒத்துழைத்திருக்கிறாயா? உன் குடலைத் தொட்டுச் சொல் பார்க்கலாம்! இவை எல்லாம் ஆராய்ந்துதான் இம் முடிவுக்கு வந்து விட்டேன்; வருத்தப்படாதே:

"ஒருநாள் உணவை ஒழி
என்றால் ஒழியாய்
இருநாளுக்கு ஏல் என்றால்
ஏலாய்—ஒருநாளும்
என்நோ அறியாய் இடும்பை
கூர் என்வயிறே!
உன்னோடு வாழ்தல் அரிது"

—நல்வழி 11.

II

மேலேயுள்ள வயிறு, ஒளவையாருக்கு மட்டுமென்ன? அவரை ஆதரித்த அதிகமானுக்கும் வயிறு உண்டு; உயிர்கள் எல்லாவற்றிற்குமே வயிறு பசி துன்பம் எல்லாம் உண்டு. அருக சமயத்து அறிஞர் முனைப்பாடியார் இதற்கு விளக்கல்லரே! அவரும் இவ் வயிற்றின் கொடுமையை உணர்ந்து, வாய்விட்டுப் பாடியிருக்கிறார்:

"ஒருநாளும் நீ தரியாய்
உண்என்று சொல்லி
இருநாளைக்கு ஈந்தாலும்
ஏலாய்—திருவாளா!
உன்னோடு உறுதி பெரிது
எனினும் இவ்வுடம்பே!
நின்னோடு வாழ்தல் அரிது"

—அறநெறிச்சாரம் 36.

ஒளவையார் சொல்லிய காரணங்களைத்தான் முனைப்பாடியார் சொன்னாலும், தன் வயிற்றைத் 'திருவாளா' என்று விளித்திருக்கின்றார்! 'நீ, சாதாரணமானவன் அல்லன். உன்னோடு கூடி வாழ்ந்தால், உயிர்க்கு உறுதி உண்டு; பெரும் பயன் பெறலாம். அத்தகைய திருவுடையவன் நீ! இருந்தாலும் என் செய்யலாம்?

'நீ, ஒரு சாண் வயிறாகவா இருக்கிறாய்? என் சாண் உடம்பாகவல்லவா இருந்து கொண்டு என்னை வருத்துகிறாய்! ஒரு நாளைக்கு உணவில்லை, பொறுத்திரு என்றால் தரித்திராய்; இதோ உணவிருக்கிறது, இருநாளைக்குச் சேர்த்துப் போட்டு வை என்றாலும் ஏற்றுக் கொள்ள மாட்டேன் என்கிறாய். இப்படிப்பட்ட-என் துன்பம் உணர்ந்து என்னோடு ஒத்துழைக்கத் தெரியாத-உன்னோடு எப்படி நான் வாழ முடியும்? ஆதலினாலே, இறுதியாகச் சொல்லுகிறேன்; 'நின்னோடு வாழ்தல் அரிது.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகச் செய்திகள்

## வேவல்கட்டியில் வள்ளுவர் விழா

"உலகத்துக்கே நீதி வருத்த திருவள்ளுவர் திருக்குறளை படைக்கு முன்னர் இறைவனையே முதலில் எண்ணினர் என்பதை அவர் தம் முதற்குறளாலும் இறைவனைத் தொழவேண்டிய அவசியத்தை இரண்டாவது குறளாலும் வலியுறுத்தியிருக்கிறர். அதற்குப் பிறகுதான் அறத்தை[illegible] பொருளையும், இன்பத்தையும் [illegible]குத்தார். எனவே இந்த மாபெரும் உலக உண்மையை, இறையைத் துதிக்கும் அவசியத்தை ஒவ்வொரு மனிதனும் உணரவேண்டும்" இவ்வாறு இரத்தினபுரியைச் சேர்ந்த அப்புகஸ்தனேலோவர் வேவல்கட்டிய தோட்டப் பாடசாலையில் நடைபெற்ற திருவள்ளுவர் தின விழாவில் பேசுகையில் இரத்தினபுரி பங்கில் தொண்டாற்றும் வண பிதா ஜே. ஜேக்கப் பர்ணந்து கூறினர்.

இவ்விழாவுக்கு முதலில் திரு. த. ஜெகநாதன் என்ற தமிழரும், பின்னர் திரு. பாரொஞ்சி அப்பு என்ற சிங்களவர்த்தகரும் தலைமை தாங்கினர்.

தமிழ்த் தாய் வணக்கத்தோடு ஆரம்பித்த விழாவில் திருவள்ளுவர் படதிரை நீக்கத்தை திரு. பாரொஞ்சி அப்பு செய்து வைத்தார்.

இக் கூட்டத்திற்கு ஒரு பௌத்த பிக்குவும் வந்திருந்தார்.

பிதா அவர்கள் தொடர்ந்து பேசுகையில் திருக்குறளைப் பற்றி வாழ்க்கையெல்லாம் பேசிக்கொண்டிருப்பினும் சலிப்புத்தட்டாதென்றும் எனினும் பேசுவதைவிட அவ்வழி நடப்பதே மேல் என்றும் கூறினர்.

ஜனாப் டி. எம். பீர்முகம்மது பேசுகையில் வள்ளுவர் தின விழாவின்போது ஒவ்வொரு மனிதனும் தான் தான் கைக்கொண்டிருக்கும் கெட்ட பழக்கத்தில் ஒரு அளவையாவது கைவிடுவதாக உறுதிபூணுதலே வள்ளுவருக்கு நாம் செய்யும் மரியாதையாகும் என்றார். வள்ளுவர் கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகட்கு சுவாமி அவர்கள் பரிசுகள் வழங்கினர்.

திருவாளர்கள் எஸ். பெருமாள், ஜே. அந்தோனி (றக்குவானை நிருபர்) டப்ளியு. எச். குலரட்ன, சுதர்மா சென்விரட்ன ஆகியோரும் பேசினர்.

திருவாளர்கள் அ. பிலிப், பி. ஆர். பெரியசாமி, எஸ். ராஜமாணிக்கம், சு. இரா. அண்ணாதாசன் ஆகியோர் பார்வையாளராகக் கடமையாற்றினர்.

ஏகாம்பரம் சகோதரர்களின் வாத்திய இசையோடு விழா முடிவுற்றது.

## பூண்டுலோயாவில் திருவள்ளுவர் விழா

பூண்டுலோயாவில் அரசினர் சிரேஷ்ட தமிழ்ப் பாடசாலை மண்டபத்தில் கடந்த 8-6-60-ல் திருவள்ளுவர் விழா ஆசிரியர் ஆ. மயில்வாகனம் தலைமையில் நடைபெற்றது. தலைவர் தமது தலைமையுரையின் போது தமிழரின் பண்டைய வரலாற்றுக் குறிப்புகளுடன் வள்ளுவர் காலம் வரையும் அதற்குப் பின்னரும்வள்ளுவரைப் பற்றியும் அவர் தந்த குறளைப் பற்றியும் நன்கு விரிவாக எடுத்துக் கூறினர்.

பின்னர் ஆசிரியர் பண்டிதர் குமரேசையர் "தமிழரும் வள்ளுவரும்" எனும் பொருள் பற்றியும், ஆசிரியர் க. ஆ. கோவிந்தபிள்ளை "வள்ளுவரும் அவர் தம் குறளும்" எனும் தலைப்பிலும் சிறந்த சொற்பெருக்காற்றினர்கள்.

இறுதியாக மாணவ மாணவிகள் சொற்பொழிவு ஆற்றினர். இடையிடையே திருக்குறள் கீதங்களைப்பாடி சபையோரை மகிழ்வித்தனர். தலைவர் முடிவுரையின் பின் விழா இனிது முற்றுப் பெற்றது. விழா முடிவில் அனைவருக்கும் சிற்றுண்டி வழங்கப்பட்டது.

## கதிர்காமயாத்திரிகர் தொண்டர் சபை

"தமிழும் சைவமும் தழைக்க ஈழக் கோவில்களில் தமிழ் மொழியில் அர்ச்சனைகள் நடைபெற வேண்டும். உதாரணமாக தமிழகத்தில் குன்றக்குடி ஆதீனத்தை எடுத்துக் கொள்ள வேண்டும்."

மேற்கண்டவாறு கொழும்பு கதிர்காம யாத்திரிகர் தொண்டர் சபையில் அணிமையில் நடைபெற்ற திருஞானசம்பந்தர் குருபூசை விழாவிற்கு தலைமை தாங்கி உரை நிகழ்த்துகையில் பண்டிதர் கா. பொ. இரத்தினம் கூறினர்.

கண்டி தென்னக்கும்புர திவ்விய ஜீவன சங்கப் போஷகர் புரட்சித் துறவி யோகிராஜ் சுவாமி சச்சிதானந்தா பேசுகையில் சமயக் குரவர்கள் பாடிய பாடல்களை பண்ணோடு தமிழில் பாடுவதால் மட்டும் உண்மையான பயன் கிடைத்துவிடமுடியாது. திருமறைப் பாடல்கள் காட்டிய வழிப்படி அதன் பொருள் உணர்ந்து பக்தியுடன் பாடி மனதைச் செம்மைப்படுத்த வேண்டும் என்றும் அப்பெரியார்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி அவர்கள் போல் வாழ்க்கையை நடாத்த ஒவ்வொருவரும் பழகிக் கொள்ள வேண்டும் என்றும் கூறினர்.

தொண்டர் சபை சமய விவகாரக்குழுக் காரியதரிசி திரு. ச. சுப்பையா நன்றியுரை கூறுகையில் சபையின் எதிர்கால சமயத் தொண்டுகள் பற்றிக் கூறி இப்பேர்ப்பட்ட முயற்சிகட்கு ஒவ்வொரு சைவர்களும் ஆதரவு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

திருமறைப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவிகட்கு சுவாமிஜியால் பரிசில்கள் வழங்கப்பட்டது.

விழாவில் தொண்டர் வித்தியால மாணவிகளால் பக்திப் பாடல்கள் பாடப்பட்டன. ஈற்றில் பிரசாதம் வழங்கப்பட்டது.

## இளைஞர் எழுச்சி மன்றம்

பெரிய நீலாவணை இளைஞர் எழுச்சி மன்றத்தினர் இவ்வூர் அரசினர் தமிழ்ப் பாடசாலை மண்டபத்தில் கடந்த 8-6-60-ல் வள்ளுவர் விழாவை மிகவும் சிறப்பாகக் கொண்டாடினர்.

விழாவுக்கு திரு. சி. செல்லத்துரை தலைமை தாங்கினர். திரு. சி. சபாரத்தினம் ஆசிரியரின் வணக்கப் பாடலோடு விழா ஆரம்பமானது.

கவிஞர் நீலாவணனின் வரவேற்புரையைத் தொடர்ந்து, பாடசாலை மாணவிகளால் "வள்ளுவனை வாழ்த்துவோம்" என்ற கும்மிப்பாடல் பாடப்பட்டது.

வள்ளுவன் காட்டிய வழி என்ற தலைப்பில் [illegible] ஆசிரியர் திரு. [illegible] ஆரோக்கியம் சிறந்ததோர் சொற்பெருக்காற்றினர்.

அடுத்து இலங்கை வானொலிப் பாடகர், திரு. ஞா. பாலசுப்பிரமணியம் (பாலா), "ஆரையூர் அரசன்", கலைஞர் கோவிந்தன் ஆகியோரின் இன்னிசைக் கச்சேரிகள் வள்ளுவர் விழாவுக்கே சிகரமாக அமைந்தன.

"வள்ளுவன் வகுத்த வாழ்க்கை" என்ற தலைப்பில் ஆசிரியர் திரு. சி. சோமசுந்தரமும் "வள்ளுவர் கண்ட அறவாழ்வு" என்ற தலைப்பில் தலைமை ஆசிரியர் ஏ. எம். ஷரீபுத்தீன் "வள்ளுவரும் குறளமுதும்" என்ற தலைப்பில செல்வன் செ. தவராசனும் சொற்பொழிவுகள் நிகழ்த்தி விழாவைச் சோபிக்கச் செய்தனர்.

கடைசியாக பேசிய ஜனாப் மஷூர் மௌலானா "மானமும் வாழ்வும்" என்ற தலைப்பில் ஒரு மணி நேரம் பேசினர். அவருடைய உணர்ச்சிப் பேச்சு வள்ளுவர் விழாவுக்கு உயிரூட்டியது. விழாவுக்கு வந்திருந்த மக்கள் உற்சாகத்தில் மூழ்கி கரகோஷம் செய்து களித்தனர்.

செல்வன் செ. வீரசிங்கம் நன்றியுரை நவில, தலைவர் முடிவுரை கூற இரவு எட்டு மணியளவில் விழா இனிது நிறைவுற்றது.

விழா துவங்குவதற்கு முன்னர், வள்ளுவப் பெரியாரின் திரு உருவப் படத்தைத் தாங்கிய ஊர்வலம் ஒன்றும் நடைபெற்றது.

## தமிழ்ச் சோலை கலா மன்றம்

அட்டன் வெலி ஓயாத் தோட்ட பணிய கணக்கு தமிழ்ச் சோலை கலா மன்றத்தினராலும், தொழிலாளப் பெருமக்களாலும் 8-6-60-ல் திருவள்ளுவர் விழா வெகு சிறப்பாக கொண்டாடப் பட்டது. விழாவுக்கு திரு. மா. இராமசாமி தலைமை வகித்தார்.

திருவாளர்கள் மா. இளங்கோ, ஆர். கணேஷ், வீ. சின்னத்தம்பி, செல்வி. ஜெயக்கொடி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்கள். மாணவ மாணவிகள் இன்னிசை விருந்தளித்தனர். ஈற்றில் "குறள்" இலவசமாக வழக்கப்பட்டது.

## அம்பாள் மகளிர் முன்னேற்றச் சங்கம்

பண்ணாகம் வடக்கு அம்பாள் மகளிர் முன்னேற்றச் சங்கத்தில் தையற்கலை ஆசிரியையாகக் கடமையாற்றித் தீவுப்பகுதிக்கு மாற்றலாகிச் செல்லும் செல்வி ம. சரஸ்வதிக்கு சங்க அங்கத்தினரால் கடந்த 6-6-60-ல் ஆசிரியர் திரு. நா. செல்வநாயகம் தலைமையின் கீழ் ஓர் பிரிவுபசாரக் கூட்டம் நடைபெற்றது.

தலைவர் பேசுகையில் இன்றைய உலகில் கிராமத்தின் நிலையை, பொருளாதாரத்தை வளம்பெறச் செய்வதாயின் அது மகளிர் முன்னேற்றச் சங்கங்களிலேயே முடியும் எனவும், மகளிர் கிராமங்களில் குடிசைக் கைத் தொழில்களை விருத்தி செய்வதன் மூலம் பொருளாதாரத்தைக் கூட்டலாமெனவும், இக் கிராமத்தில் தையல் கலையை கற்பித்த ஆசிரியை செல்வி ம. சரஸ்வதியை இக்கிராம மக்கள் என்றும் மறக்க முடியாதென்றும் கூறினர்.

அதன் பின்னர் திருமதி [illegible] ஆ. பாலகிருஷ்ணன் ஆகியோர்களால் மகளிர் முன்னேற்றம் பற்றி விரிவுரைகள் நிகழ்த்தப்பட்டன.

பின்னர் மகளிர் சங்கத்தினரால் வெள்ளிப் பொருட்களும், பாராட்டுப் பத்திரங்களும் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

ஈற்றில் செல்வி ம. சரஸ்வதி ஆசிரியையின் பதிலுரையுடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

## செந்தமிழ் வளர்ச்சி மன்றம்

கிரிலப்பனை செந்தமிழ் வளர்ச்சி மன்றத்தாரால் சென்ற 12-6-60-ல் கிரிலப்பனையில் வள்ளுவர் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. விழாவிற்கு மன்றத் தலைவர் அன்ரனி பெர்னண்டோ தலைமை வகித்தார்.

கொழும்பு ம. பொ. சி. மன்றச் செயலாளர் தோழர் தமிழ் நெஞ்சன் "குறளும் பண்பும்" என்னும் பொருள் பற்றிப் பேசினர். மற்றும் தோழர்களான ஐ. ஞானராசா, டேவிற் இராசையா, செ. நயினர், தமிழ்ச் செல்வன், மணிமாறன் விசயன் ஆகியோரும் சொற்பொழிவாற்றினர்.

## திருஞான சம்பந்தர் குருபூசை

திருஞான சம்பந்தர் குருபூசை விழா இணுவில் சைவப் பிரகாச வித்தியாசாலை மண்டபத்தில் கடந்த 10-6-60-ல் ஆசிரியர் திரு. வை. கதிர்காமநாதனின் விஷேச பூசையுடன் ஆரம்பமாயது.

"சம்பந்தரின் வாழ்க்கை வரலாறு" என்னும் விடயம் பற்றி திரு. கதிர்காமநாதன் பேசும் போது சம்பந்தர் பாலனாக இருந்தும் சமயத் துறையில் வாதம் செய்து சைவ சமயத்தின் மாண்பை உலகறியச் செய்தார் என்றும், அவர் போன்ற சமய குரவர்கள் இன்று இல்லாத காரணத்தால் சமயத்தின் உண்மை இக்கால மக்களுக்கு விளங்கவில்லை என்றும் கூறினர்.

அடுத்து பண்டிதர் திரு. இ. இராசலிங்கம் ஆசிரியர் சம்பந்த சுவாமிகளைப் பற்றி அரியதோர் சொற்பொழி வாற்றியதுடன் கூட்டு வழிபாடும் நடாத்தினர்.

## செல்வா இளம் விவசாயிகள் சங்கம்

தளவாய் - ஐயங்கேணி இளம் விவசாயிகளின் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் கடந்த 25-5-60-ல் தளவாய் நகர் அரசினர் பாடசாலை மண்டபத்தில் விவசாயப் போதனாசிரியர் திரு. பத்மநாதன் தலைமையில் நடைபெற்றது.

திரு. பத்மநாதன் இளம் விவசாயிகள் சங்கத்தின் நோக்கத்தையும் கடமைகளைப் பற்றியும் எடுத்துக் கூறினர்.

கி. மு. ச. தலைவர் திரு. சி. காத்தமுத்துவும் பேசினர்.

தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகத்தின்பெயரை சங்கத்துக்கு வைக்கவேண்டுமென திரு. க. ஞானமுத்து ஓர் பிரேரணை கொண்டு வந்தார். பிரேரணையை பொதுச் சபை ஏக சம்மதத்துடன் ஏற்றுக் கொண்டு சங்கத்தை செல்வா இளம் விவசாயிகள் சங்கம் என அழைப்பதென்று தீர்மானிக்கப்பட்டது.

கீழ்க்கண்டவர்கள் நடப்பு வருட உத்தியோகத்தர்களாக தெரிவு செய்யப்பட்டனர்:—

போஷகர்களாக திருவாளர்கள்: க. ஞானமுத்து, சி. நல்லையா, வ. தெய்வநாயகம், வி. கே. நடராசா, சி. இளையதம்பி ஆகியோரும், தலைவராக திரு. சி. காத்துமுத்துவும், உப தலைவராக செல்வி. எஸ். சுகிர்தமலரும் காரியதரிசியாக திரு. மி. யோசப்பும், உப காரியதரிசியாக செல்வி ந. ராஜினியும், தனாதிகாரியாக திருமதி கு. ராசம்மாவும், நிர்வாகசபை அங்கத்தவர்களாக திருவாளர்கள் சி. சுப்பிரமணியம், சி. பொன்னுத்தம்பி சி. வீரசிங்கம், திருமதி சிவகெங்கை ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

## மூதூரில் பழைய மாணவர் மன்ற அங்குரார்ப்பணம்

மூதூர் அ. மா. வித்தியாலயத்தின் பழைய மாணவர் மன்ற அங்குரார்ப்பணக் கூட்டம் கடந்த 7-6-60-ல் நடைபெற்றது.

கீழ் கண்டவர்கள் மன்ற நிருவாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்:—

தலைவர்: ஜனாப் எம். எம். புகாரி, உபதலைவர்: ஜனாப் ஏ. வாதூத், செயலாளர்: வி. எம். ஏ. லத்தீப், உப செயலாளர்: ஏ. கே. ஏ. கபூர், தனாதிகாரி எஸ். ஏ. சமத் மற்றும் நிதிக் கமிட்டியொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## கணபதி வித்தியாலயத்தில் வள்ளுவர் விழா

கொழும்பு, தட்டாரத் தெரு கணபதி வித்தியாலய இலக்கிய மன்ற ஆதரவின் கீழ், சென்ற 8-ம் தேதி வள்ளுவர் விழா சிறப்பாகக் கொண்டாடப் பட்டது. இவ் விழா வித்தியாலயத் தலைமையாசிரியர் வித்வான் இ. சி. சோதிநாதன் தலைமையில் நடைபெற்றது. அவர் உரை நிகழ்த்தும் பொழுது "குறள் காட்டும் நெறி" பற்றிக் குறிப்பிட்டார். செல்வன் சி. திலகசோதி "வள்ளுவன் வாழ்க்கை" என்னும் பொருள் பற்றிப் பேசினர். மாணவர்களால் வள்ளுவர் பற்றிய இன்னிசைக் கீதங்கள் இசைக்கப்பட்டன. திரு த. சீவரத்தினம் ஆசிரியரும் செல்வி சி. பொன்னம்மா ஆசிரியையும் சொற்பொழிவாற்றினர்கள்.

## அர்ச் ம. த. பா. மாணவர் சங்கம்

பம்பலப்பிட்டி அர்ச் மரியாயின் தமிழ் பாடசாலை பழைய மாணவர் சங்கத்தால், வள்ளுவர் விழா 12-6-60-ல் பம்பலப்பிட்டி அர்ச் மரியாயின் தமிழ்ப் பாடசாலையில் சங்கத் தலைவர் பீட்டர் முத்தையா தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

அதுபோது அர்ச் மரியாயின் தமிழ்ப் பாடசாலை ஆசிரியர் எஸ். சந்தனம் வள்ளுவர் படத்தை திரை நீக்கம் செய்து வைத்து வள்ளுவர் வாழ்க்கைக்கு வழிகாட்டி என்னும் தலைப்பில் சொற்பொழிவாற்றினர்.

பின் திரு. ஏ. ஜி. அன்று "வள்ளுவர் நெறி" என்பது பற்றியும் திரு. ஏ. புத்திரசிகாமணி "வள்ளுவர் பெருமை" என்பது பற்றியும் திரு. ஜே. பி. ரூபர்ட் "வள்ளுவரும் குறளும்" என்பது பற்றியும், திரு. எஸ். அந்தோனி, திரு. தோமஸ் பாலையா ஆகியோர் "வள்ளுவர்" என்னும் தலைப்புகளிலும் சொற்பொழிவாற்றினர்கள்.

அதன் பின் செயலாளர் ஜே. பி. ரூபர்ட்டின் நன்றியுரையுடன் விழா முடிவடைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றிகரமான 5-வது வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெம்பிளி (கண்டி) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு)

மற்றும் 7 திரைகளில்



சிவாஜி கணேசன் ❁ பி. சரோஜாதேவி

எம். ஆர். ராதா, பத்மினிபிரியதரிசினி

டி. எஸ். பாலையா—எஸ். வி. சுப்பையா

எம். என். நம்பியார், தாம்பரம் லலிதா,

எம். வி. ராசம்மா, சி. கே. சரஸ்வதி முதலியோர் நடித்த

சரவணா பிலிம்ஸ்

# பாகப் பிரிவினை

கதை—வசனம்: எம். எஸ். சோலைமலை ● திரைக் கதை-டைரக்‌ஷன்: ஏ. பீம்சிங்

இசை: விஸ்வநாதனும்—ராமமூர்த்தியும்

பின்னணி: டி. எம். சௌந்திரராஜன் —சீர்காழி கோவிந்தராஜன்
பி. லீலா—பி. சுசீலா—ஜமுனாராணி.

## குதூகலமான 2-வது வாரம்

காமினி [மருதானை] ❁ சபையர் [வெள்ளவத்தை]

சந்தியா, மஹிபால்,

வத்தனா, ஆகா, சந்த்ரகாந்த்,

கேஸவராவ் தாதே, உல்ஹாஸ்

ஆகியோர் நடித்த

ராஜ்கமால்ஸ் கலாமந்திர் அளிக்கும்

# நவ்ரங்

(டெக்னிக் கலர் படம்)

இசை: சி. ராமச்சந்திரா ● டைரக்‌ஷன்: வீ. சந்தாராம்

## இன்றே எதிர்பாருங்கள்!

மைலன் திரையில்

சத்தியன்—குமாரிதங்கம்

பாஸ்கரன்—பிரேமா

ராமன் குட்டி

ஆகியோர் நடித்த

சந்திரதாராவின்

# நீலக் குயில்

(இந்திய ஜனாதிபதியின் பரிசு பெற்றது)

வசனம்—பாடல்கள்:
கே. தேவநாராயணன்

டைரக்‌ஷன்:
பி. பாஸ்கரன்

பின்னணி:- கே. தேவநாராயணன்—வி. என். சுந்தரம்
எஸ். லீ. கிருஷ்ணன்—ஏ. பி. கோமளா
என். எல். கான சரஸ்வதி—ஆர். பத்மா.


இப் பத்திரிகை கொழும்பு பண்டாரநாயக்க மாவத்தை 195-ம் இலக்கத்தில் வசிக்கும் எஸ். டி. சிவநாயகம் அவர்களால் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் சார்பாக பண்டாரநாயக்க மாவத்தை, சுதந்திரன் அச்சகத்தில் பதிப்பித்து 1960 ஜூன் 26-ம் தேதி பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org